பக்கங்கள்: 22

# தீம்புனல்
THEEMPUNAL
வாராந்தப் பத்திரிகை

தீ : 02 புனல்:49 01.04.2023 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054



இலங்கைத் தீவின் எதிர்காலம்?
செல்வின்
பக்கம் 08



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தில் AGRITECH 102
விமலதாஸ்
பக்கம் 17



வினோதினி திருநாவுக்கரசு

# அகற்றப்பட்ட ஆதிசிவன்

வவுனியா வடக்கின் நெடுங்கேணி நகரிலிருந்து சுமார் ஏழு கிலோமீற்றர்கள் தூரத்தில் அமைந்திருக்கின்ற எல்லைக்கிராமங்களில் ஒன்றுதான் ஒலுமடு. ஒலு என்று சொல்லப்படுகின்ற ஒரு வகைத் தாவரச் செடிகள் இங்குள்ள குளத்தில் அதிகமாக வளர்ந்து நின்ற காரணத்தினால் ஒலுமடு என்ற காரணப் பெயரைப் பெற்றது இந்தக் கிராமம்.

எளிமையும் இயற்கை அழகும் நிறைந்திருக்கின்ற கிராமத்தின் மையப்பகுதியிலிருந்து வண்டில் பாதை வழியாக சுமார் நான்கு கிலோமீற்றர்கள் வனப்பகுதிக்குள் பயணப்படுகின்ற போது இயற்கை அரணென நிமிர்ந்து நிற்கின்ற வெடுக்குநாறி மலைத் தொடர் பகுதியின் ஆரம்பப் பகுதியைக் காணலாம். பெரும் கற்கள் உருண்டு திரண்டு காட்டின் பெரு மரங்களின் இடையே உருட்டி விடப்பட்டதைப்போல காட்சியளிக்கும் சிறு குன்றுப் பகுதிகளும், ஓங்கி வளர்ந்து நிற்கின்ற காட்டு மரங்களும் அவற்றின் கீழ் உள்ள சிறு புதர்களும் கொடிகளும் செடிகளுமாக அந்த வனமும் இணைந்த மலைக்குன்றுகளும் காட்டுகின்ற காட்சிகள் அற்புதமானவை.

காட்டின் மணத்தை நுகர்ந்துகொண்டும், காட்டின் ஒலியை செவிமடுத்துக் கொண்டும் நடந்து செல்ல வெடுக்குநாறி மலையின் முதற்பகுதியைக் காணலாம். மலையின் முன்னும் பின்னுமாக ஒருவகை நாற்றம் கொண்ட மரங்கள் காணப்படுவதால் வெடுக்குநாறி மலை என்கின்ற காரணப்பெயரை இந்த மலை பெற்றுக்கொண்டதென அறிய முடிகிறது.

இந்தப்பகுதியில்தான் இந்த மலையின் இக்காலத்து சர்ச்சைக்குரிய தொல்லியல் எச்சங்கள் வெளித்தெரிய ஆரம்பிக்கின்றன. இங்குள்ள மலையின் முகப்புப் பகுதியில் புராதன பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு அவ் எழுத்துக்கள் மழை மற்றும் வழிந்தோடும் நீரினால் அரிப்பிற்கு உள்ளாகாத வகையில் எழுத்துகளின் மேற்பகுதியில் மலையைக் குடைந்து சிறு ஆழத்தில் நீரோட வழி செய்யப்பட்டிருக்கிறது. இங்கு விநாயகர், அம்மன், வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு சிலை வைத்து வழிபடுகின்றார்கள் கிராமமக்கள்.

உன்னிப்பான அவதானத்திற்குரிய மலையின் இந்த முதற்பகுதியைக் கடந்து மேலும் சில பல அடிகள் பயணப்பட மலைத்தொடரின் அடுத்த பகுதி வரவேற்கிறது. மென் சாய்வு கொண்ட இப்பகுதியால் மலையின் மேல் ஏறிச்செல்ல ஒரு அகழி போன்ற சிறிய நீர்த்தடாகம் வரவேற்கிறது. ஒரு மனிதனை மூடக்கூடிய அளவிற்கு நீர் நிறைந்து காணப்படுகின்ற சிறு நீர்த்தடாகத்தில்

▶21



## வெடுக்கு நாறி மலை பிரகடனம்

பல்லாண்டு காலமாக நாம் வழிபட்டு வந்த வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோயில் இனந்தெரியாத விசமிகளால் இடித்தழிக்கப்பட்டுள்ளது.

மனித மாண்புக்கு இழுக்கை ஏற்படுத்தும் இந்தக் கொடுஞ்செயல் குறித்து தமிழர்களாகிய நாம் சொல்லொணா மன உளைச்சலுக்கும் அறச்சீற்றத்திற்கும் உள்ளாகியிருக்கிறோம்.

தமிழரின் இதுபோன்ற தொன்மப் பண்பாட்டைப் பறைசாற்றும் வழிபாட்டிட அழிப்புகள் அண்மை நாட்களாக அதிகரித்திருக்கின்றன. எனவே இத்தகைய அழிப்புக்களின் பின்னால் நன்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிநிரல் ஒன்றிருப்பதாக ஐயுறுகின்றோம்.

இந்தத் தொடர் அழிப்புகள் குறித்து மரபுரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய தொல்லியல் திணைக்களம் அமைதிகாப்பதும் பௌத்த எச்சங்களை மாத்திரம் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதும்கூட தமிழர் மரபுரிமைகள் அழிப்பிற்கு துணைநிற்பதாகவே கருதுகின்றோம்.

உலகின் தொன்ம இனமொன்றாகிய தமிழர் மீதும் அவர்தம் வழிபாட்டு உரிமை மீதும் நிகழ்த்தப்படும் தொடர் அழிப்பும்கூட தமிழ் பண்பாட்டு இனப்படுகொலையே.

சைவர் தெய்வ சிலையுடைப்புக்களுக்கு காரணமானவர்களை கண்டுபிடிக்கவோ கைதுசெய்து தீர விசாரிக்கவோ முடியாத ஒரு நிலை இன்றும் காணப்படுகின்றது. இந்தப் பாராமுகம் குற்றச்செயல்களை அதிகரிக்கின்றது. எமது வழிபாட்டு உரிமையை அழிக்கும் செயற்பாடுகளுக்கு உற்சாகமூட்டுகிறது.

▶21



# கொந்தளித்த மக்கள் பணிந்த பிரதமர்

இஸ்ரேலின் நீதித்துறையை மாற்றியமைப்பதற்காக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ கையெழுத்திட்ட நீதித்துறையை மாற்றியமைப்பதற்கான திட்டத்தை எதிர்த்து நாடு தழுவிய போராட்டங்கள் நடைபெற்றன.

உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை ரத்துச் செய்யும் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்கும் அதே வேளையில், நீதித்துறை நியமனங்கள் மீதான கட்டுப்பாட்டை நிறைவேற்று அதிகாரியிடம் ஒப்படைக்க அவரது தேசியவாத மதக் கூட்டணியின் திட்டங்கள் இஸ்ரேலிய வரலாற்றில் மிகப்பெரிய உள் நெருக்கடிகளில் ஒன்றைத் தூண்டிவிட்டன. நாடு தழுவிய கொந்தளிப்பிற்குப் பிறகு பிரதமர் இடைநிறுத்தினார். இந்தத் திட்டத்திற்கு எதிராக தொழிலாளர்கள் பொது வேலைநிறுத்தத்தில் சேர்ந்தனர். ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் தெருக்களில் இறங்கினர். அடுத்த மாதம் பாஸ்கா விடுமுறை மற்றும் சுதந்திர தினத்திற்கான இடைவேளைக்குப் பிறகு பாராளுமன்றம் திரும்பும்வரை திட்டங்களை நிறுத்தி வைப்பதற்கான தனது முடிவை திங்களன்று தாமதமாக அறிவித்த நெதன்யாகு, நெருக்கடிக்கு அனைத்து தரப்பினரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றார். 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட ஆயத்தமான வேளையில் இஸ்ரேல் நெருக்கடியில் சிக்கி உள்ளது.

ஜெருசலேம், டெல் அவிவ் அதற்கு அப்பால் உள்ள நகரங்களில் ஒவ்வொரு வாரமும் இலட்சக்கணக்கான மக்கள் இஸ்ரேலின் தெருக்களில் இறங்கி எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசாங்கத்தின் நீதித்துறை சீர்திருத்தங்களால், தங்களின் ஜனநாயகம் பலவீனமடைந்து வருவதாக அவர்கள் அஞ்சுகின்றனர். தொடர்ந்து பத்தாவது வாரத்தில் ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அவர்களில் பலர் டேவிட் இஸ்ரேலியக் கொடியின் நீலம் மற்றும் வெள்ளை நட்சத்திரத்தை அசைப்பார்கள். இது அவர்களின் இஸ்ரேல் தங்களிடமிருந்து பறிக்கப்படுவதாக நம்பும் மக்களால் மென்மையான தேசியவாதத்தை வேண்டுமென்றே வெளிப்படுத்துகிறது.

அமைதியான முறையில் நடைபெற்ற போராட்டங்கள், கடந்த சில மாதங்களாக நாடு முழுவதும் உள்ள நகரங்களுக்கு அப்பாலும் பரவியது. மத்திய தரைக்கடல் கடற்கரையில் உள்ள டெல் அவிவ், மிகப்பெரிய கூட்டத்தை ஈர்க்கிறது. ஆனால், கோபத்தின் அடையாளக் கவனம் ஜெருசலேமில் உள்ளது, இது ஜனாதிபதி மற்றும் நாட்டின் பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகு ஆகிய இருவரின் இல்லமாகும்.

மூன்று ஆண்டுகளுக்குள் ஐந்து தேர்தல்களுக்குப் பிறகு, இஸ்ரேல் இப்போது நிலையான பெரும்பான்மையுடன் ஒரு அரசாங்கத்தைக் கொண்டுள்ளது மற்றும் பல ஆண்டுகள் ஆட்சியில் இருக்கும் வாய்ப்பு உள்ளது. எவ்வாறாயினும், புதிய அரசாங்கம் நாட்டின் வரலாற்றில் மிகவும் வலதுசாரி மற்றும் மத ரீதியாக பழமைவாதம் ஆகும். அரசாங்கம் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையில் இருந்தாலும், அவர் ஆறாவது முறையாக பிரதமராக இருந்தபோது, அவர் தனது அமைச்சரவையின் தீவிர வலதுசாரிகளில் கடுமையான தேசியவாத குரல்களால் வழிநடத்தப்படுவதாகக் கருதப்படுகிறது.

“வலதுசாரிகளில் சிலர் இதை பல ஆண்டுகளாக தங்கள் நிகழ்ச்சி நிரலில் வைத்திருக்கிறார்கள்” என்று இஸ்ரேலிய ஜனநாயக நிறுவனத்தில் ஒரு ஆராய்ச்சி உறுப்பினரான டாக்டர் கைலூரி விளக்குகிறார், ஆனால் இதுவரை அவர்களுக்கு நெதன்யாகுவின் ஒப்புதல் இருப்பதாக உணரவில்லை. “அவர்கள் இப்போது ஒரு சிறிய வாய்ப்பைப் பார்க்கிறார்கள்” என்று அவர் கூறுகிறார்.

சீர்திருத்தங்களின் விமர்சகர்கள், அவர்கள் அரசாங்கத்திடம் முழு அதிகாரத்தையும் ஒப்படைப்பார்கள், தனிநபர்கள் மற்றும் சிறுபான்மையினரை ஆபத்தில் ஆழ்த்துவார்கள், மேலும் நெதன்யாகுவின் மீது தொங்கும் ஊழல் குற்றச்சாட்டுகளை அகற்றுவதற்கான ஒரு வழிமுறை ஆகும்.

இஸ்ரேலிய பத்திரிகையாளரும் பெஞ்சமின் நெதன்யாகுவின் அங்கீகரிக்கப்படாத சுயசரிதையை எழுதியவருமான Anshel Pfeffer என்பவரும் இதே போன்ற எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

முன்னாள் பிரதம மந்திரிகள், முன்னாள் தலைமை நீதிபதி, இஸ்ரேலிய இராணுவத்தின் முன்னாள் ஜெனரல்கள் மற்றும் இராணுவப் பாதுகாப்புப் படையினர் மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் உட்பட, சீர்திருத்தங்களுக்கு எதிராக இஸ்ரேலிய சமூகத்தில் பல பிரபலமான நபர்கள் குரல் கொடுத்துள்ளனர். போராட்டக்காரர்கள் மீது பொலீசஸார் தண்ணீர்ப் பீரங்கி மற்றும் ஸ்டன் கையெறி குண்டுகளை வீசியது தேசிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மூத்த எதிர்க்கட்சித் தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நெதன்யாகுவும் அவரது ஆதரவாளர்களும் இந்தத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கும் நீதித்துறைக்கும் இடையே ஒரு சரியான சமநிலையை உறுதி செய்யும் என்றும் தனிநபர் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தாது என்றும் கூறினாலும், அவர்கள் நிலையான மற்றும் ஆவேசமான எதிர்ப்பை ஈர்த்துள்ளனர்.

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் தற்போது விசாரணையில் உள்ள நெதன்யாகு, மறுசீரமைப்பு தனிப்பட்ட உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக இருக்காது என்று முன்னர் உறுதியளித்தார், ஆனால் அதன் அத்தியாவசியங்கள் எதையும் விட்டுக்கொடுப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

இந்தத் திட்டங்களால் ஏற்பட்ட பிளவுகள் இராணுவத்தைப் பாதித்து தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக எச்சரித்து பாதுகாப்பு மந்திரி யோவ் கேலன்ட் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஒரு அசாதாரண வார இறுதியில், மாற்றியமைப்பை இடைநிறுத்துவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

நெதன்யாகுவால் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதால் ஆயிரக்கணக்கானோர் தெருக்களில் இறங்கி, இஸ்ரேலின் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் நிறுத்தத்தை வலியுறுத்தினார்.

ஹிஸ்டாட்ரட் தொழிற்சங்க அமைப்பு ஒரு பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது இது பென் குரியன் விமானநிலையத்திலிருந்து விமானங்கள் நிறுத்தப்படுவதற்கும் வங்கிகளில் இருந்து மெக்டொனால்டின் துரித உணவு உணவகங்கள் வரையிலான வணிகங்களை மூடுவதற்கும் தூண்டியது.

இஸ்ரேலின் ஷேக்கல் நாணயத்தின் ஆரம்ப பேரணியானது, அதன் இறுதி விதி நிச்சயமற்ற நிலையில், நெதன்யாகு மாற்றியமைப்பை இடைநிறுத்தியதை அடுத்து, தோல்வியடைந்தது. இஸ்ரேல் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் நீண்டகால பாதுகாப்பு நெருக்கடியையும் ஈரானுடன் அதிகரித்து வரும் பதட்டங்களையும் எதிர்கொள்ளும் நேரத்தில், கெலண்டின் பதவி நீக்கம் அரசாங்கம் தேசிய நலனை ஒதுக்கிவிட்டதற்கான அறிகுறியாக பலருக்குத் தோன்றியது.

ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு கால அவகாசம் வழங்குவதற்காக மாற்றியமைப்பை இடைநிறுத்துவதற்கான நெதன்யாகுவின் முடிவை எதிர்க்கட்சிகள் எச்சரிக்கையுடன் வரவேற்றாலும், பல எதிர்ப்பாளர்கள் அவநம்பிக்கையுடன் இருந்தனர்.

“இந்த சீர்திருத்தங்கள் முற்றிலுமாக கைவிடப்படும் வரை நான் எதிர்ப்பைத் தொடருவேன், ஏனெனில் இது சீர்திருத்தங்களின் தொகுப்பு அல்ல, இது நிர்வாகத்தின் சதி” என்று ஜெருசலேமில் 27 வயதான ஆர்ப்பாட்டக்காரர் எய்டன் கஹானா கூறினார்.

அவரது சொந்தக் கூட்டணிக்குள், சில அதிருப்தியும் இருந்தது, கடுமையான நிதி மந்திரி பெசலெல் ஸ்மோட்ரிச், மாற்றியமைப்பை இடைநிறுத்துவதற்கான முடிவை ஒரு தவறு என்று அறிவித்தார். ஆனால், பிரதமரின் முடிவை ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்தார்.

அரபு ஒலிபரப்பாளர்கள் இஸ்ரேலிய நெருக்கடியை சில அரேபியர்கள் நெதன்யாகுவின் அரசியல் அழிவுக்கு இட்டுச்செல்லும் என்று நம்புவதாகவும் மற்றவர்கள் இஸ்ரேலுக்கு இன்னும் தொலைநோக்கு விளைவுகளை ஏற்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தனர்.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பின்வாங்கியதால் போராட்டக்காரர்களின் வேகம் குறைவடைந்துள்ளது. ஆனாலும் ஆட்சிமாற்றத்துக்கான சூழ்நிலை உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ■




வானதி

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.:021 226 07 05
www.theempunal.com
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# தமிழ் மக்களுக்கு எதிரான கலாசாரப் போர்

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து ஏதோ ஒரு போர் தமிழ் மக்கள் மீது திணிக்கப்ப டுகிறது. பௌத்திற்கு முன்னுரிமை கொடுத்தால் தேர்தலில் வாக்குகளை அருவடை செய்யலாம் என்பதை சிங்கள அரசியல வாதிகள் மிகத் துல்லியமாகப் புரிந்து கொண்டார்கள். அரச இயந்திரம் அவர்களுக்குப் பக்கபலமாக உள்ளது.

தமிழ்மக்கள் வாழும் இடங்களில் உள்ள வரலாற்றுத்தொன்மங்களையும் சரித்திரச் சான்றுகளையும் அழித்தொழிப்பதிலும் கைப்பற்றுவதிலும் சிலர் முனைப்புக் காட்டுகின்றனர். சிங்கள அரசியல்வாதிகளின் உணர்ச்சிகரமான பேச்சுகள் அவர்களைத்தூண்டிவிடுகின்றன. தேரர்கள், பாதுகாப்புப் படையினர் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்றனர். நீதிமன்றத் தீர்ப்புகள் துச்சமாக தூக்கி எறியப்படுகின்றன. அந்த வரிசையில் இப்போது தொல்பொருளியல் திணைக்களம் பகிரங்கமாக இறங்கி உள்ளது. தொல்பொருளியல் திணக்களமா தொல்லை தரும் திணைக்களமா எனக் கேட்கத் தோன்றுகிறது.

இலங்கையில் தொல்பொருளியல் திணைக்களம் 1890 ஆம் ஆண்டில் அதன் பணிகளை ஆரம்பித்தாலும் தொல்பொருளியல் பணிகள் தொடர்பான அடிப்படை வேலைகள் அதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஹர்கியுலஸ் ரொபின்சன் ஆட்சிக் காலத்திலேயே தொல்பொருளியல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இலங்கையில் 823/73 ஆம் இலக்க தொல்லியல் கட்டளைச்சட்டம் (188 ஆம் அத்தியாயம்) 16 ஆம் பிரிவின் கீழ் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருக்கும் பல சைவ சமய ஆலயங்களில் பௌத்த மதம் சார்ந்த அடையாளங்கள் இருப்பதாக நல்லாட்சி அரசாங்க காலத்திலும் அதற்கு முந்திய ஆட்சிக் காலத்திலும் தொல்லியல் திணைக்களம் சிறப்பு வர்த்தமானிகள் மூலம் அடையாளப்படுத்தியுள்ளது.

அவற்றில் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம் ஆலயம், மாந்தைகிழக்கு பூவரங்குளம் பத்திரகாளி அம்மன் கோவில், குமாரபுரம் ஸ்ரீ சித்திரவேலாயுதம் முருகன் கோவில், குமுழமுனை ஆஞ்சநேயர் கோவில், பாண்டியன்குளம் சிவன் கோவில், வவுனிக்குளம் சிவபுரம் ஸ்ரீமலை கோவில், குமுழமுனை குறிஞ்சிக்குமரன் கோவில், மன்னார் திருக்கேதீஸ்வரக் கோவில், மயிலிட்டி போர்த்துக்கேயர் கோவில், ஒதியமலையில் வைரவர் கோவில், முள்ளியவளை குமாரபுரம் முருகன் கோயில், திருகோணமலை தென்னமரவடி கந்தசாமிமலை, செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயம், புல்மோட்டை அரிசி ஆலை மலை கோவில், வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம், மூதூர், சூடைக்குடா மத்தள மலைப்பகுதி முருகன் ஆலயம், திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம், மூன்றுமுறிப்பு கண்ணகி அம்மன், சிவபுரம் சிவாலயம், மாந்தை கிழக்கு ஆதிசிவன் கோயில், குஞ்சுமப்ப பெரியசாமி கோவில், ஸ்ரீ மலை நீலியம்மன் கோயில், கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் கோவில், மட்டக்களப்பு தாந்தாமலை ஆலயம், மட்டக்களப்பு கச்சக்கொடி சுவாமி மலை போன்றவை உள்ளடங்குவதாகவும் இவற்றை தொல்லியல் இடங்களைக் அடையாளப்படுத்தியுள்ளமை மத ரீதியிலான ஆக்கிரமிப்பு இலை என எப்படிச் சொல்வது.

தொல்பொருளியல் திணைக்களத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் உள்வாங்கப்படவில்லை.

வெடுக்கு நாறி மலை, குருந்தூர் மலை கன்னியா வெந்நீர் ஊற்று, யாழ்ப்பாணம், மந்திரி மனை, நெடுந்தீவு வெடி அரசன் கோட்டை ஆகியவற்றின் மீது தொல்பொருளியல் திணைக்களத்தின் பார்வை விழுந்துள்ளது.

நிலாவரையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை எதிர்ப்பினால் அகற்றப்பட்டது. கச்சதீவு என்றால் புனித அந்தோனியார் தான் ஞாபகத்துக்கு வருவார். அங்கு அரசமரம் வளர்க்கப்பட்டு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள தொல்பொருளியல் திணைக்களம் சிங்கள் மக்களுக்கு மட்டும் உரிமையானது என அங்கு கடமையாற்றுபவர்கள் நினைக்கிறார்கள். இலங்கையில் வாழும் இன்னொரு இன மக்களின் நம்பிக்கையைச் சிதறடிக்கும் செயற்பாட்டை தொல்பொருளியல் திணைக்களம் கனகச்சிதமாகச் செய்கிறது.

இது தமிழ், சிங்கள உறவுக்கு விரோதமானது தொல்பொருள் திணைக்களம் இன - மத வேறுபாடுகளுக்கு அப்பால் செயற்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவது அவசியம். ■

# சட்டங்களை இயற்றும் சட்டசபையில் பரமபத ஆட்டம்

இலங்கை அரசியல் அமைப்பின் பல சீர்திருத்தங்களை எழுதியவர் ஜே.ஆர். ஜெயவர்தனவின் மருமகன் ரணில். மாமனுடன் சிறுவயதில் இருந்து வித்தைகளை அறிந்தவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை மாணவன் ஐ.தே.கவின் பியகம தொகுதி அமைப்பாளர் நிறைவேற்று அதிகாரத்தில் இப்போது இருக்கிறார்.

இலங்கையின் தேர்தல், அரசியல் தண்டனை, ஆணைக் குழுக்களுக்கான சட்டக் கோவைகளை ரணில் விக்கிரமசிங்கவே வரைந்தார். அதனால் தான்பொதுப்பயன்பாட்டுஆணைக் குழுத் தலைவர் மிகக் கடுமையாக மின்சாரப் பட்டியல், மின்சார சபை மறுசீரமைப்பை எதிர்த்து கருத்து தெரிவிக்கும் போது பாராளுமன்றில் எழுந்து பொது பயன்பாடு ஆணைக்குழு சட்டத்தை நானே எழுதினேன். இவர் ஹோட்டல் ஒன்று havalock town இல் வைத்துள்ளார் என்றார். அதுதான் அவரது கிடுக்குப்பிடி, சட்டம் தெரிஞ்சவனுக்குத்தான் சரிவரத் தெரியும். அதன்படி அவரது பதவியை மின்சக்தி அமைச்சர் கேள்விக்கு உட்படுத்தியுள்ளார் அது பாராளுமன்றத்தின் வாக்கெடுப்போடு வீட்டுக்கு அனுப்பப்படுவார்

முன்னைய நல்லாட்சி காலத்தில் ரணில் நிறைய மறுசீரமைப்புகளை செய்ய இருந்தார். ஆனால், அதற்கு நிறைவேற்று அதிகாரத்தின் அனுமதி தேவை. ஏனெனில் அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதி மைத்திரி விவசாய பின்னணியில் இருந்து வந்தமையால் பிரபலமற்ற தீர்மானங்களை எதிர்ப்பார்.

இலங்கை அரசியல் வாதிகளில் அதிக வெளிநாட்டு தொடர்புகள் உடையவர் ரணில்.

சிறுபான்மைக் கட்சிகளிடம் உள்ள வாக்கையும் பெற்றால்தான் 133 வாக்குகள் கிடைக்கும். அப்போதுதான் சட்டத்தை நிறைவேற்றலாம். எல்லோரிடமும் இணங்கி சட்டம் இயற்றுவது முடியாத காரியம். அரசாங்கமோ 122 ஆசனங்களை வைத்துள்ளது. cyber act ஊழல் திருத்தச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், பசுமை சூழல் திருத்தம், clean energy சட்டம், முதலீட்டு சட்டங்கள் மற்றும் அதன் அமைச்சர் அதிகாரங்கள் என அனைத்தையும் பாராளுமன்றில் சமர்பித்து இதனை ஒரு சட்டம் இயக்கும் கூடமாக மாற்றப்போகிறார்.

Portcity சட்டமூலத்தை ராஜபக்ஷ அணி வடிவாக எழுதி முடிக்கவில்லை உண்மையில் அதற்கு இப்போது உலகில் உள்ள பெரு வர்த்தக நகரங்களின் சட்டங்களை சரி பார்க்கிறார் எதை உட்புகுத்தலாம் என, உதாரணமாக கொங் கொங், சிங்கப்பூர், சீனா நகரங்களின் சட்டங்களை உள்ளடக்கி மிகச் சாமர்த்தியமாக சட்டத்தை அமைப்பார் அப்போதுதான் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை வரும். போட்சிட்டுக்குள் ஒரு தனியான வர்த்தக உயர் நீதிமன்றத்தை அமைப்பார் அதன் ஊடாக அதன் சட்டங்கள் வரிகள் என அதற்கு ஏற்றால் போல் அமைப்பார். cyber act இலும் கூட Estonia, singapore, South Korea சட்டங்களை சரிபார்த்து அதனை மிகச் சிறப்பாக அமைப்பார் காரணம் புது உலகம் cyber Wall இன்றி எந்தப் பலனும் இல்லை. இலங்கையில் மாற்றத்திற்கான முதல் படியான சட்டங்கள் இந்த வருடம் முழுவதும் ரணில் இயற்றுவார். ■

ஸ்ரீகஜன்



© Parliament of Sri Lanka

# அடிக்கடி இடம்மாறும் கிளிநொச்சி பேருந்து நிலையம்

கருணாகரன்

நீண்டகால தாமதம், பலவிதமான இழு பறிகளுக்குப் பிறகு கிளிநொச்சி நகரின் புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 28.03. 2023 அன்று திறந்து வைத்துள்ளார்.

கிளிநொச்சி உருவான 100 ஆண்டுக்குள் ஆறு இடங்களில் பேருந்து நிலையம் இயங்கியிருக்கிறது. 1940-70 காலப்பகுதியில் ஆரம்பப் பேருந்து நிலையம் தற்போதைய கந்தசாமி கோவிலடியில் இருந்தது. பிறகு 1970, 80 களில் தற்போதைய பிரதேச சபை வளாகத்திலிருந்தது. 1990 களின் நடுப் பகுதியில் தற்போதைய பொலிஸ் நிலையத்திலும் தற்போதைய சந்தை வளாகத்திலும் இருந்தது. 2010 இல் அம்பாள்குளம் பகுதியில் தற்போது பொருளாதார மத்தியநிலையமாக இருக்கும் இடத்திலிருந்தது. இறுதியில் டிப்போச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்ற அமைவிடமும் நீண்டகாலத்துக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதல்ல.

சனநெரிசலும் போக்குவரத்து நெருக்கடியும் அதிகரிக்கும்போது சொல்லாமற் கொள்ளாமல் இந்தப் பேருந்து நிலையம் நிச்சயமாக வேறு இடத் துக்கு நகரும். நகர அபிவிருத்தி பற்றிச் சிந்திப்போருக்கு இந்த யதார்த்தம் புரியும். ஆகவே, இன்னொரு காவடி எடுப்புக்கு இடமுண்டு. சந்தைக்குப் பக்கத்திலே பேருந்து நிலையம் இருக்க வேண்டும் என்று சிந்திப்பதன் விளைவே இது.

ஆனால், ஏனைய இடங்களில் எல்லாம் அப்படியல்ல. கண்டி, கொழும்பு, குருநாகல், வவுனியா, யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, மட்டக்களப்பு, மன்னார், சாவகச்சேரி, சுண்ணாகம், கல்முனை, நீர்கொழும்பு, அனுராதபுரம், மதவாச்சி, காலி, மாத்தறை எங்குமே சந்தையும் பேருந்து நிலையமும் ஒன்றாக இல்லை. இது மட்டுமல்ல, பேருந்து நிலையத்துக்குள் கடைத்தொகுதி இருப்பதும் நல்லதல்ல. யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் மட்டும் பஸ் நிலையத்துக்குள் கடைத்தொகுதி உண்டு. அது மிகப் பெரிய இடைஞ்சல் என்பதோடு கழிவுகளை அதிகமாக உற்பத்தி செய்யும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், யாழ்ப்பாணம் தனியார் பேருந்து நிலையம் மிகச் சிறப்பு.

கிளிநொச்சிப் பேருந்து நிலையம் திறக்கப்படுவதற்கான ஆயத்தப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அதற்குள் கடைகளை (வணிக நிலையங்களை) அமைப்பதற்குத் தூண்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் முக்கியமானவராகச் செயற்பட்டவர் கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.வேழமாலிகிதன். தன்னுடைய முகப்புத்தகத்திலும் தனிப்பட்ட ரீதியிலும் இதைத் தூண்டினார். எதிர்கால நகரசபை அமையவுள்ள இன்றைய பிரதேச சபை வளாகத்தையே கடைத்தொகுதியிருக்கும் முன்னாள் தவிசாளர் புதிய பேருந்து நிலையத்துக்குள்ளும் கடைத்தொகுதியை அமைப்பதற்கான தூண்டலைச் செய்தது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்கதில்லைத்தான். இருந்தாலும் இது கவலைக்குரியது. மட்டுமல்ல இது மக்களை சட்டவிரோதமாகச் செயற்படத் தூண்டுவதுடன் நிர்வாக நெருக்கடியை உருவாக்க முயற்சிப்பதுமாகும். எனவே, இச்செயற்பாடு கண்டனத்துக்குரியது என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து பேருந்து நிலைய வளாகத்துள் கடைகளை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தடுக்கப்பட்டன. இதில் தொடர்ந்து உறுதிப்பாடு தேவை. ஏனென்றால் முதலில் இத்தகைய செயற்பாடுகள் மிகத் தவறானவை என்பதோடு இவை கண்டிக்கத்தக்கவை, ஏற்றுக் கொள்ள முடியாதவை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

காரணம், இது மக்களின் - பயணிகளின் உரிமைக்கு எதிரான செயற்பாடாகும். வணிக வளாகத்தை அமைத்து பயணிகளுக்கு இடைஞ்சல் செய்வதாகும். அமைக்கப்பட்டுள்ளதும் திறந்து வைக்கப்பட்டதும் வணிக வளாகமா? அல்லது பேருந்து நிலையமா? என்பதைக் குறித்து நாம் (சம்மந்தப்பட்ட அதிகாரிகளும்) சிந்திக்க வேண்டும்.

பயணிகளின் தேவைக்காக கடைகள் வேண்டுமாக இருந்தால் நேரே எதிர்ப்பக்கத்தில் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச் சந்தையும் அதன் வணிக வளாகமும் உள்ளது. அதில் இதற்கான கடைத்தொகுதியை அமைக்கலாம். அது நகரத்துக்கும் அழகாக இருக்கும். சூழலுக்கும் சிறப்பானதாக அமையும். அதுதான் பொருத்தமானதுமாகும். பிரதேச சபைக்கான வருவாயையும் அது ஈட்டித் தரும்.




மருத்துவமனை, பாடசாலை, பேருந்து நிலையம், விவசாயத்திணைக்களம், கடற்றொழில் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் போன்றவையெல்லாம் மக்களுக்கான சேவை மையங்கள். அவற்றில் மக்கள் கூடுகிறார்கள் என்பதற்காக அவற்றை வணிக வளாகமாக்க முடியுமா? அப்படிச் செய்தால் அது சுத்த முட்டாள்தனமே. மக்கள் கூடுகிறார்கள் என்பதற்காக சுடுகாட்டிலும் இடுகாட்டிலும் வணிக மையங்களை அமைத்து விட முடியுமா?

ஆகவே, இதைக்குறித்து (புதிய பேருந்து நிலையத்தில் கடைகள் அமைப்பதற்கு முயற்சிப்பதை) மாவட்டச் செயலர் (GA) பிரதேச சபையினர் மற்றும் உள்ளூராட்சி மன்ற உயர் அதிகாரிகள், போக்குவரத்துச் சபையினர் கவனமெடுக்க வேண்டும்.

பேருந்து நிலையம் எனப்படுவது பயணிகளை முதன்மைப்படுத்தி அமைக்கப்படுவதாகும். பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளையும் அதை இயக்கும் நிர்வாகத்தினரையும் கொண்ட ஒரு கட்டமைப்பு. அதிலும் நகரப் பேருந்து நிலையங்கள் நெடுந்தொலைவுப் பயணிகளை அதிகமாகக் கொண்டிருப்பதால், அவர்களுடைய தேவைகளையும் நலன்களையும் கவனத்திற் கொண்டு அமைக்கப்படுவது அவசியமாகும்.

முக்கியமாக நல்ல - சுத்தமான கழிப்பறை வசதி இருக்க வேண்டும். கழிப்பறை வசதியோடு குளியல் அறையும் உடைமாற்றும் இடமொன்றும் அமைக்கப்பட வேண்டும். இதற்குக் கட்டணம் அறவிடலாம். வெளியிடங்களிலிருந்தும் நீண்டதூரப் பயணங்களிலிருந்தும் வருவோருக்கு இது அவசியமானது. இதைச் செய்வதைப் பற்றி எவரும் சிந்திப்பதாகக் காணவில்லை. பதிலாகக் கடைகளை பேருந்து வளாகத்தில் அமைப்பதைப்பற்றியே பலரும் சிந்திக்கிறார்கள். எல்லாவற்றையும் வணிக ரீதியாகச் சிந்திப்பதன் விளைவிது. இதற்குப் பிரதான காரணம், பொதுப்போக்குவரத்தில் அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுவோரோ பயணிப்பதில்லை. அதைப் பாவிப்பதுமில்லை.

இதனால் பேருந்துப் பயணம், பேருந்து நிலைய நிலவரம் பற்றியெல்லாம் இவர்கள் அறியவும் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பில்லை. இதனால்தான் பல தவறுகள் திருத்தப்படாமலே தொடர்கின்றன.

பேருந்து நிலையங்களில் பயணிகளின் தேவைக்காக அத்தியாவசியக் கடை ஒன்றிரண்டை அமைக்கலாம். அது அந்தப் பேருந்து நிலையத்தின் தன்மையைப் பொறுத்தது. பயணிகளின் எண்ணிக்கை, சேவையிலீடுபடும் பேருந்துகளின் தொகை இதைப் பொறுத்து கடைகளின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம். இப்படியான கடைகள் (கன்ரீன்கள்) எங்குமுண்டு. புகையிரத நிலையங்களிலும் உண்டு. அதற்குத் தடையில்லை. அக்கரைப்பற்று, வவுனியா பேருந்து நிலையத்திலும் அப்படி ஒரு கடை உண்டு. அப்படித்தான் கிளிநொச்சியின் புதிய பேருந்து நிலையத்திலும் ஒரு கடைக்கு (கன்ரீனுக்கு) இடமுண்டு. ஆனால், பேருந்து நிலையத்தையே கடைகளால் நிரப்ப முடியாதல்லவா.

ஆகவே, இதைக்குறித்து உரிய அதிகாரிகளும் மக்கள் நலன்சார்ந்த செயற்பாட்டு அமைப்புகளும் கரிசனை கொள்வது அவசியம். குறிப்பாக, மக்கள் பிரதிநிதிகளுக்கு இதில் கூடுதல் பொறுப்பும் கடப்பாடும் உண்டு. மக்கள் பிரதிநிதிகள் என்றால் மக்களுடனும் அவர்களுடைய வாழ்க்கையுடனும் நெருங்கிய உறவிருக்க வேண்டும். மக்கள் பிரதிநிதி என்று சொல்வதன் அர்த்தமே இதுதான். மக்களில் ஒருவர். மக்களின் சார்பான ஒருவர். மக்களுக்காக மக்களில் இருந்து ஒருவர் எனப்பொருள்படும்.

ஆனால், நம்முடைய மக்கள் பிரதிநிதிகள் தமக்கான சிறப்புச் சலுகைகளை (கவனிக்கவும் - மக்களுக்கானது அல்ல) பெறுவதிலும் அவற்றை அனுபவிப்பதிலுமே கரிசனையாக இருக்கிறார்களே தவிர, மக்களுடைய நலன்களைக் குறித்தல்ல.

கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சி, நகரின் அபிவிருத்தி, அதன் அடையாளம். அதன் சிறப்புத் தன்மை போன்றவற்றைக் குறித்துச் சிந்திப்போரும் இந்தப் பிரதேசத்தை உள்ளத்தில் இருத்தியுள்ளோரும் இந்த மாதிரிச் சிந்தனையையும் செயற்பாடுகளையும் எதிர்க்கவும் கண்டிக்கவும் வேண்டும். அவர்கள் இவற்றைக் கண்டும் கடந்து செல்ல முற்படுவது அழகல்ல. அறிவுக்கு உகந்ததும் அல்ல.

கிளிநொச்சி இலங்கையிலேயே மிக இளைய நகரங்களில் ஒன்றாகும். போரிலே தொடர்ச்சியாக அழிவுண்ட நகரம். ஆனாலும் அது வெட்ட வெட்டத் தளைக்கும் மரத்தைப்போல, சாம்பலில் இருந்து மீண்டெழும் ஃபீனிக்ஸைப்போல மீள மீள எழுச்சியடையும் நகரம். இப்பொழுது கிளிநொச்சி மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இந்த வளர்ச்சியை ஒழுங்கான முறையில் நிர்வகித்து நெறிப்படுத்த வேண்டும். அதற்குப் பொருத்தமானவர்கள் பதவிகளில் அமர்ந்திருப்பது அவசியம். அல்லது இருப்பவர்கள் சிறப்பாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

“எதிர்கால கிளிநொச்சி நகர்” என்ற அடிப்படையில் திட்டங்கள் உருவாக்கப்படுவது அவசியம். ஒரு மாஸ்ரர் பிளான் தேவை. அதன் அடிப்படையிலேயே புதிய கட்டுமானங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும். நகர அபிவிருத்தி என்பது தனியான ஒரு அறிவியல்துறை. அதற்கெனப் படித்தவர்களும் அதில் நிபுணத்துவம் பெற்றவர்களும் உள்ளனர். அவர்கள் மிகச் சிறந்த பங்களிப்பைச் செய்யக் கூடிய நிலையில் உள்ளனர். நகர அபிவிருத்தி என்பது வெறுமனே கட்டடங்களையும் வடிகாலமைப்புகளையும் கொண்டதல்ல. அதற்கான கலை அழகும் அடையாளமும்கூடச் சேர்ந்திருக்க வேண்டும். அதுதான் பிரதேசத்தின் தனித்துவத்தையும் காட்டும்.

இதையெல்லாம் மாவட்டச் செயலர், திட்டமிடற் பிரிவுகளில் இருப்போர், துறைசாரா அதிகாரிகள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர், மக்கள் பிரதிநிதிகள் (பாராளுமன்ற உறுப்பினர்கள்) சிந்திக்க வேண்டும்.

இனியாவது நல்லனவற்றை - பொருத்தமானவற்றைச் செயற்படுத்தலாம். ■

# உருவச்சிலைகளுக்கு பின்னாலிருக்கும் அரசியலும் மதமும் சமூகமும் !

அவதானி

எப்பொழுதும் கேலியும் கிண்டலுமாக பேசியும் எழுதியும் வந்தவரான தமிழக எழுத்தாளரும் துக்ளக் ஆசிரியரும் நாடக - சினிமா நடிகருமான சோ.ராமசாமி, முன்னர் எழுதிய நாடகம் ஒன்று கல்கி இதழில் தொடர்ந்து வெளியானது.

அதில்வரும் இரண்டு பாத்திரங்கள் சென்னை மெரீனா பீச்சுக்கு செல்வார்கள். அங்கிருக்கும் மகாத்மா காந்தியடிகளின் சிலையைக் காண் பித்து ஒருவர், மற்றவரிடம், “இது யாருடைய சிலை?” எனக் கேட்பார்.

அதற்கு மற்றவர், “ இந்தியாவின் ஏழ்மைக் கோலத்தை வெளிநாட்டிலிருந்து இங்கே வருபவர்களுக்கு காண்பிக்கின்ற அடையாளச் சின்னம்” என்பார்.

சமகாலத்தில் இலங்கையில் ஆங்காங்கே எழும் புத்தர் சிலைகளைப் பார்த்து வருகின்றோம்.

பல வருடங்களுக்கு முன்னர் திருகோணமலை நகரில் ஒரு புத்தர் சிலை நாற்சந்தியில் வைக்கப் பட்டது. அதனைக் கண்டித்து அன்றைய தமிழ்த் தலைவர்கள் சட்ட நடவடிக்கையும் எடுத்தனர். அச்சிலை முறையான அனுமதியுடன் அங்கே நிறுவப்படவில்லை என்று அப்போது பேசப் பட்டது.



அச்சிலைக்கு ஏதும் நேர்ந்துவிடும் என்பதற்காக பொலிஸார், அச்சிலையைச் சுற்றி கம்பி வேலியும் அமைத்து, காவலும் காத்தனர். பின்னர் இந்த விவகாரம் காற்றோடு கலந்து சென்றுவிட்டது.

புத்தர் தனக்கு அரசும் வேண்டாம், மணி முடியும் வேண்டாம், குடும்பமும் வேண்டாம் எனச்சொல்லிக்கொண்டு வனம் சென்று தவம் புரிந்து நிர்வாணம் எய்தியவர்.

அத்தகைய ஒரு புனிதரை வைத்து இலங்கையில் அரசியல் நடக்கிறது. சமூகத்திற்கு மகோன்னதமான சேவைகளைச் செய்தவர்களுக்கும் மொழிக்கும் கலை இலக்கியத்திற்கும் பண்பாட்டுக்கும் அறிவியலுக்கும் மகத்தான சேவைகளைச் செய்தவர்களுக்காகவும் சமூகம் காலத்திற்குக் காலம் சிலைகளை நடமாடும் பிரதேசங்களில் நிலை நிறுத்திவருகிறார்கள்.

கத்தோலிக்கர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் யேசுநாதருக்கும் தேவமாதாவுக்கும் வீதியோரங் களில் சிலைகளைக் காணலாம். அத்தகைய சிலைகள் கண்ணாடிக் கூண்டுகளுக்குள் இருக்கும்.

சைவர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் வீதி யோரங்களில் பிள்ளையார் சிலைகளைக் காணலாம். அரசமரம், வேப்பமர நிழல்களில் அவர் மௌனமாக அமர்ந்திருப்பார். அவரை வழிப்பிள்ளையார் என்பார்கள். அவருக்கு தேங்காய் அடித்து வழிபட்டுச் சென்றால், செல்லும் காரியம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை தொன்று தொட்டு நிலவி வருகிறது.

இவைதவிர, இலங்கையில் பழைய பாராளுமன்ற வளாகத்திலும் சில அரசியல் தலைவர்களின் சிலை களைக் காணலாம். காலிமுகத்திடலில் பண்டார நாயக்கவுக்கு மாத்திரம் இரண்டு சிலைகள் இருக்கின்றன.

ஒன்று முன்னைய பாராளுமன்ற முன்றலில், மற்றது காலிமுக வீதியருகில் சோவியத் அரசு வழங்கியது. காலிமுக கோட்டா கோ கம போராட்டத்தின்போது யாரோ ஒருவர் அச் சிலையில் ஏறி நின்று அதன் கண்களை கறுப்புத் துணியினால் மூடிக்கட்டினார்.

அரசியல் தலைவர்களின் சிலைகளை வருடம் ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் கழுவி சுத்தம் செய்வர். அப்போது அச்சிலைகளின் தலையின் படிந்திருக்கும் பறவைகளின் எச்சம் கழுவித் துடைக்கப்படும்.



ஆனால், புத்தருக்கு இந்த தண்ணீர் குளிப்பு நடப்பதற்கு சாத்திய மில்லை. அவர் பறவை களின் எச்சம்விழாத வகையில் ஒரு கண்ணா டிப் பெட்டிக்குள்ளோ அல்லது புதிதாக அமைக்கப்பட்ட விகாரைக்குள்ளோ இருப்பார்.

பிரமாண்டமான புத்தர் சிலைகள் பற வைகளின் சரணால யமாகிவிடும். அவர் பறவைகள் உட்பட உயிரினங்கள் அனைத் தையும் நேசித்து, அன்பு மார்க்கத்தை போதித்தவர்.



ஆனால், அவரது மார்க்கத்தை பின்பற்று வதாகச் சொல்லிக்கொள்ளும் ஆட்சியாளர்களின் பூரண அனுமதியுடனும் ஆசிர்வாதத்துடனும் நாடெங்கும் புத்தர் சிலைகள் எழுந்துகொண்டி ருக்கின்றன.

பல வருடங்களுக்கு முன்னர், கொழும்புத் துறைமுகத்தை நோக்கிவரும் வெளிநாட்டுக் கப்பல்களின் மாலுமிகள் தூரநோக்கு கண்ணாடி (Telescope) ஊடாக கொழும்பின் கரையைப் பார்த்த போது, அவர்களுக்குத் தெரிந்தது கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தின் கோபுரம்தான்.

முன்னைய ஜே.ஆர்.ஜெயவர்தன, பிரேமதாச ஆட்சிக்காலத்தில், இந்த விடயம் அவர்களின் கவனத்திற்கு வந்ததும், கோட்டையில் கடலுக்கு சமீபமாக மிக உயரமான விகாரையும் தூபியும் அமைக்கப்பட்டு அங்கே புத்தர் சிலை நிர்மாணிக் கப்பட்டது.

அதன்பிறகு வெளிநாட்டுக்கப்பல்களுக்கு அந்தத் தூபிதான் தென்பட்டது. அதன் மூலம் இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை அந்த ஆட்சி யாளர்கள் புத்தர் சிலையை வைத்தே வெளிநாட்டு கப்பல்களுக்கு நிரூபித்தார்கள்.

இன்றைய ஆட்சியாளர்களின் ஆசிர்வாதத்துடன் தற்போது வடக்கிலும் கிழக்கிலும் தமிழர் பிரதே சங்களில் புத்தர் சிலைகள் திடீரென எழுகின்றன.

அதற்காக அவ்விடங்களில் ஏற்கெனவே இருந்த இந்துக்கடவுள்களின் விக்கிரகங்கள் அகற்றப்பட்டுள்ளன.

அவ்வாறு அகற்றுபவர்களுக்கு புத்தரின் உண்மையான சரித்திரம் தெரியாது போலும்.

இவ்வாறு புத்தர் இடத்துக்கிடம் சிலையாக எழுந்திருப்பதுபோன்று, சிவனின் மற்றும் ஒரு வடிவமான நடராஜரும் திருக்குறளைத் தந்த திருவள்ளுவரும் எழத்தொடங்கியிருக்கின்றனர்.

இவர்களைப்பற்றி சமய பாடத்திலும் தமிழ்ப் பாடத்திலும் கற்றுக்கொண்டிருக்கும் மாணவர் களின் வாழ்க்கைத்தரம் குறித்து சிலைகளை அமைப்போர் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

விரைவில் வடபகுதியில் படிப்படியாக பல பாடசாலைகள் மூடப்பட்டுவிடும் என்ற செய்தி அபாயச்சங்கின் ஒலியாக வெளிப்பட்டதை அறிவோம்.

வன்னி பெருநிலப்பரப்பில் வதியும் பல மாண வர்களின் உடலில் இறுதிப்போரின் வடுக்கல் எறிகணைத்துகள்களினால் நிரந்தரமாகியிருக்கிறது.

பல ஏழை மாணவர்கள் காலை உணவும் இன்றி பாடசாலைகளுக்குச் செல்லும் அவலம் இன்றும் தொடருகின்றது.

ஏழை மாணவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரம் இல்லை. அத்தகையோர் தெற்கிலும் மேற்கிலும் மலையகத்திலும் இருக்கின்றனர்.

இவர்களின் தேவைகளைக் கவனிக்குமாறு புத்தரோ, நடராஜரோ, வள்ளுவரோ கனவுகளில் தோன்றி சொல்லமாட்டார்களா..?

கட்டினார் கட்டினார் சிலைகளைக் கட்டினார், கட்டிய சிலைகளில் என்னதான் கண்டார்..? எனக்கேட்டால், பறவைகளின் எச்சத்தைக் கண்டார் எனச்சொல்லமுடியுமா...?

தமிழ்ப் பிரதேசங்களில் சிலையாக நிற்கும் பாரதி யின் கவிதைதான் நினைவுக்கு வருகிறது.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும்,
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

■

# புகலிட இலக்கியத்தின் ஒரு வரவு "தைலம்"



முருகபூபதி

"எமது முன்னோர்கள் ஐவகைத் திணைகளை எமக்கு அறிமுகப்படுத்தினர்.

குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த நிலமும் / முல்லை - காடும் காடு சார்ந்த நிலமும் / மருதம் - வயலும் வயல் சார்ந்த நிலமும் / நெய்தல் - கடலும் கடல் சார்ந்த நிலமும் / பாலை - மணலும் மணல் சார்ந்த பகுதிகளும் தமிழர்களின் அந்நிய நாடுகளை நோக்கிய புலப்பெயர்வையடுத்து அவர்களின் வாழ்வை பிரதிபலிக்கும் இலக்கியங்கள் அறிமுகமானதும் அந்தப்பிரதேசங்களின் நிலங்களும் பருவகாலங்களும் ஆறாவது திணையை அறிமுகப்படுத்தியிருக்கிறது. பனியும் பனிசார்ந்த நிலங்களுமே அந்த ஆறாம் திணையாகியிருக்கிறது.

"கடந்த ஜனவரி மாதம் தமிழ்நாடு வேரல் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள தைலம் (அவுஸ்திரேலியக் கதைகள்) நூலைப் படித்த போது, மேற்குறிப்பிட்ட எனது முன்னைய பதிவே நினைவுக்கு வந்தது.

அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் எழுத்தாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி இந்த நூலை தொகுத்திருக்கிறார். இவரதும் கதை உட்பட அவுஸ்திரேலியாவில் வதியும் மேலும் பதினொரு படைப்பிலக்கியவாதிகளின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அவுஸ்திரேலியாவை தமிழக எழுத்தாளர் ஜெயமோகன் "புல்வெளி தேசம்" என வர்ணித்துள்ளார். மரங்களும் செழித்து வளருவதற்கு ஏற்ற பருவகாலங்களை கொண்டிருந்தாலும் கோடை காலத்தில் காட்டுத்தீ பரவல் தவிர்க்கமுடியாத நாடு இந்த கடல் சூழ்ந்த கண்டம்.

இங்கு யூகலிப்ரஸ் இனத்தைச்சேர்ந்த மரங்கள் செழித்து வளர்ந்து, இந்தக் காட்டுத்தீக்கு தீனி தருகின்றன. அவை எரிந்துபோனாலும், மீண்டும் துளிர்த்து பசுமையை போர்த்திவிடும்.




தைலம் நூலின் தொகுப்பாசிரியர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, இந்தப் பெயரை சூட்டுவதற்கு சொன்ன காரணத்தை இங்கே காணலாம்.

"அவுஸ்திரேலியாவின் அடையாளங்களில் ஒன்று யூகலிப்ரஸ் (Eucalyptus) தமிழில் இதை தைலமரம் என்று குறிப்பிடுவதுண்டு. இங்கே தைலம் என்பது தனியே யூகலிப்ரஸை மட்டும் குறிக்காமல், வாழ்க்கையின் சாரத்தை - அதன் தைலத்தைக் குறிப்பதாகவே கொள்ளப்படுகிறது. அதைப்போல அவுஸ்திரேலியச் சூழலின் சாரத்தை - அதன் தைலத்தைக் குறிப்பதாகவே கொள்ளப்படுகிறது. அதைப்போல அவுஸ்திரேலியச் சூழலின் சாரத்தை - அதன் தைலத்தையும். "எட்டு மாநிலங்கள் கொண்ட பெரிய தேசம் அவுஸ்திரேலியா. அனைத்து மாநிலங்களிலும் எழுத்தாளர்கள் - குறிப்பாக தமிழ்ச் சிறுகதை படைப்பாளர்கள் வசிக்கிறார்கள். அவர்களில் சிலர் கதைத் தொகுதிகளையும் ஏற்கெனவே வெளியிட்டுள்ளனர். அத்துடன் அவர்களில் சிலரது கதைகள் பனியும் பனையும் உயிர்ப்பு முதலான முன்னர் வந்த தொகுப்புகளிலும் இடம் பெற்றுள்ளன. அத்துடன் சிலகதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு Being Alive என்றநூலிலும் இடம்பெற்றுள்ளன.

அந்த வரிசையில் தற்போது மற்றும் ஒரு வரவாக எஸ். கிருஷ்ணமூர்த்தி தொகுத்திருக்கும் தைலம் வெளிவந்துள்ளது.

கன்பரா யோகன், தெய்வீகன், அருண். விஜயராணி, அசன், முருகபூபதி, நடேசன், எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஜே.கே, தாமரைச் செல்வி, ஆசி கந்தராஜா, கே.எஸ்.சுதாகர், தேவகி கருணாகரன் ஆகியோ ரின் 12 சிறுகதைகள் தைலம் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு சிறுகதையும் புகலிட வாழ்வின் கோலங்களை சர்வதேச பார்வையுடனும் தாயகம் பற்றிய நினைவுகளுடனும் பேசுகின்றன. Bloom where you are planted என்ற பைபிள் வாசகம் ஒன்றிருக்கிறது. இத்தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் கதைகளை எழுதிய பன்னிரண்டுபேருமே இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

இவர்கள் தாயகத்தில் ஆழமாக வேர்பதித்து வாழ்ந்து, பிடுங்கப்பட்ட மரங்களாக புலம்பெயர்ந்து வந்து புதியதேசத்தில், முற்றிலும் மாறுபட்ட பருவகாலங்களில் வாழ நேர்ந்தவர்கள். அனைத்தும் அந்நியமாகியிருக்கும் புகலிட மண்ணில் தங்கள் வாழ்வின் தரிசனங்களை கதைகளாக்கியிருக்கிறார்கள்.

சமகாலத்தில் இலங்கை பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தமது MPhil, B.A பட்டங்களின் ஆய்வுக்காக சிறுகதைகளை உட்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் எவரேனும் மாணவர்கள், தத்தம் தாயகம்விட்டு புலம்பெயர்ந்து சென்று எழுதுபவர்களின் புகலிட இலக்கியக் கதைகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளத் தயாரானால், அவுஸ்திரேலியாவில் தமிழ்ச் சிறுகதைகளின் படைப்பு மொழி, இங்குள்ள தமிழ் எழுத்தாளர்களின் படைப்பூக்கம் பற்றி எழுதுவதற்கு தைலம் என்ற இக்கதைத் தொகுப்பும் உசாத்துணையாகலாம்.

" தமிழில், புலம்பெயர் இலக்கியம் புதிய திணையைச் செழுமையாக அடையாளப் படுத்தியுள்ளது. இதில் பல்வேறு பிராந்தியங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் விதவிதமான குணமும் அழகும் கொண்டவை.

அந்த வகையில் இந்தத் தொகுப்பிலுள்ள சிறுகதைகள் அவுஸ்திரேலியச் சூழலையும் அங்குள்ள வாழ்க்கையையும் சாராம்சப்படுத்துகின்றன. இந்தத் தொகுப்பில் அதுவே கவனம் கொள்ளப்பட்டுள்ளது. இது போல இன்னும் ஒரு தொகுதியைக் கொண்டு வரக்கூடிய அளவுக்குக் கதைகளும் எழுத்தாளர்களும் அவுஸ்திரேலியாவில் உண்டு.

அதை இன்னொரு தொகுதியாகக் கொண்டு வரலாம் என்று திட்டமிட்டுள்ளோம். இத்தொகுப்புக்குக் கிடைக்கும் வரவேற்பு அடுத்த தொகுதியை விரைவு செய்யும்" எனவும் தொகுப்பாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி இந்நூலில் தெரிவித்துள்ளார்.

**பிரதிகளுக்கு:**
**veralbooks2021@gmail.com**
**sellakrish@gmail.com**

■

# ராகுலின் பதவியைப் பறித்த மோடி



ஊர்மிளா

தேர்தல் காலத்தில் அரசியல் தலைவர்களும் பேச்சாளர்களும் வரம்புமீறிப் பேசுவது வழமை, 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில் பேசிய ராகுல் தம்மை அவமதித்துவிட்டதாக ஒருவர் தொடுத்த அவதூறு வழக்கில் ராகுலுக்கு இரண்டு வருட சிறைத் தண்டணை விதிக்கப்பட்டுள்ளது. சாதாரண வழக்காக விசாரிக்கப்படும் அவதூறு வழக்கு கிரிமினல் வழக்காக விசாரிக்கப்பட்டது.

மோடி, அமித்ஷா போன்றவர்களுக்கு இணையாக காங்கிரஸில் தலைவர்கள் யாரும் இல்லை. ராகுலின் பாதயாத்திரையின் பின்னர் அவர் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. அது தவிர அதானி பற்றி நாடாளுமன்றத்தில் ராகுல் எழுப்பிய கேள்விக்கு பிரதமர் மோடி இன்னமும் பதிலளிக்கவில்லை. ராகுலுக்கு எதிரான தீர்ப்புக்கு இவை பிரதானமானவையாகக் கருதப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் பிரச்சாரம் செய்தபோது "நீரத் மோடி, லலித் மோடி, நரேந்திரமோடி என எல்லா திருடர்களின் பெயருக்குப் பின்னால் மோடி இருப்பது ஏன்?" எனக் கேள்வி எழுப்பினார்.



ராகுலின் பேச்சு மோடி எனும் சமூகத்தை அவதூறு பண்ணிவிட்டது எனக் கருதிய குஜராத்தின் முன்னாள் அமைச்சரும் பாரதீய ஜனதாக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினருமான புர்னேஸ் மோடி என்பவர் 16.04.2019 இல் குஜராத்தில் வழக்குத் தொடர்ந்தார். 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி அவர் வழக்கை வாபஸ் பெற்றார். நாடாளுமன்றத்தை அதானி பற்றி ராகுல் கேள்வி எழுப்பியது, ராகுலுக்கு எதிரான வழக்கு தூசு தட்டப்பட்டது. ஐந்து நாட்களில் விசாரிக்கப்பட்டு அவசர அவசரமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதைவிட அவரசமாக நாடாளுமன்றப் பதவி பறிக்கப்பட்டு, அரச பங்களாவில் இருந்து வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டது. மேன்முறையீட்டுக்கு 30 நாள் அவகாசமும் பிணையும் கொடுக்கப்படபின்னர், அரசாங்கத்தின் பங்களாவில் இருந்து வெளியேறுமாறு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருட சிறைத்தண்டனை பெற்றால் உடனடியாகப் பதவி பறிக்கப்படும். ஆறு வருடங்களுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாது. காங்கிரஸுடன் ஒட்டு உறவு இல்லாமல் இருந்த அரசியல் கட்சிகள் ராகுலுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளன. பிரிந்து நின்ற மம்தா, கெஜ்ரிவால் ஆகியோர் ராகுலுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பி உள்ளனர். பிரிந்து நின்ற தலைவர்களை அவதூறு வழக்கு ஒற்றுமையாக்கி உள்ளது. பாரதீய ஜனதாவின் வீழ்ச்சிக்கு இது காரணமாக அமையக் கூடும். தீர்ப்பைப் பற்றி கவலை இல்லாமல் ரகுல் தனது வழமையான பணிகளைத்தொடர்கிறார். அரசியல் பழிவாங்கல் வழக்கைச் சந்தித்த தலைவர்கள் மீண்டு வந்து விஸ்வரூபம் எடுத்த வரலாறு உள்ளது.

ராகுலுக்கு எதிராக அமலாக்கத் துறை விசாரிக்கும் நேஷனல் ஹெராரல்டு ஊழல் வழக்கும் வேகமெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் ஏற்கெனவே இக்கட்டான சூழலில் உள்ள நிலையில் இது முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் கட்சியில் இருந்து சில ஆண்டுகளாகவே பல முக்கிய தலைவர்கள் விலகி வருகின்றனர். அதில் பெரும்பாலானோர் நேரடியாக பா.ஜ.கவில்தான் ஐக்கியமாகிறார்கள். 2019 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸும் படுதோல்வி அடைந்தது. குறிப்பாக, ராகுல் காந்தியே ஸ்மிருதி ராணியிடம் அமேதியில் தோல்வியடைந்தார். அப்போது அவர் கேரளாவின் வயநாடு தொகுதியில் போட்டியிட்டதால் அவரால் எம்.பியாக முடிந்தது. என்றாலும் காங்கிரஸ் கட்சியை பா.ஜ.கவை எதிர்கொள்ளும் அளவுக்கு வலுவான ஒரு கட்சியாக உருமாற்றம் செய்யவும் தேவையான சீர்திருத்த நடவடிக்கைகளைக் கொண்டு வரவும் ராகுல் காந்திக்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கலாம். அசுர பலத்துடன் இருக்கும் பா.ஜ.கவை தொடர்ந்து ஆதாரத்துடனும் ஆக்கபூர்வமாகவும் விமர்சித்து வந்தால் மட்டுமே அது மக்கள் அரங்கில் எடுபடும் என்பதால் அதை நோக்கியும் ராகுல் காந்தி இறங்க வேண்டும். இதை வைத்து எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியிலும் ஈடுபட வேண்டும்.



இந்திரா காந்தி, ஜெயலலிதா, லாலு பிரசாத் யாதவ் உள்ளிட்டவர்கள்கூட ராகுல் காந்தியைப் போல் இதற்கு முன் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

1971 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் உத்தர பிரதேசத்தின் ரேபரேலி தொகுதியில் இந்திரா காந்தி வெற்றி பெற்றார். இந்த தேர்தலில் இந்திரா காந்திக்கு முகவராக செயல்பட்ட யஷ்பால் கபூர் அரசு ஊழியர் ஆவார். எனவே, அரசு இயந்திரத்தை தவறாகப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டி இந்திரா காந்தியிடம் தோல்வியடைந்த ராஜ் நாராயண் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதை விசாரித்த நீதிமன்றம், கடந்த 1975 ஜூன் 12 ஆம் திகதி இந்திரா காந்தி குற்றவாளி, அவரது தேர்தல் வெற்றி செல்லாது என்று தீர்ப்பளித்தது. அடுத்த 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடவும் தடை விதித்தது. அதன்பிறகு நாட்டில் அவசரநிலை அறிவிக்கப்பட்டு அரசியல் அமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. தமிழக முதல்வராகப் பதவி வகித்து வந்த ஜெயலலிதா 2014 ஆம் ஆண்டு சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளி என்று பெங்களூர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால், முதல்வர் பதவியை ஜெயலலிதா இழந்தார்.

மாட்டுத்தீவின ஊழல் வழக்கில் சிக்கிய லாலு பிரசாத் யாதவ், கடந்த 2013 ஆம் ஆண்டு மக்களவையில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். மேலும் அவருக்கு தேர்தலில் போட்டியிட 11 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை அதன் பிறகு 6 ஆண்டுகள் போட்டியிட என மொத்தம் 11 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கப்பட்டது.

சமாஜ்வாடி கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஆசம்கான், கடந்த 2019 மக்களவைத் தேர்தலின் போது பிரதமர் மோடி, ஆதித்யநாத் உள்ளிட்ட பா.ஜ.க தலைவர்கள் குறித்து அவதூறாகப் பேசியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் ஆசம் கானுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து எம்.எல்.ஏ பொறுப்பில் இருந்து ஆசம் கான் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

தேர்தல் ஆணையத்தால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட முதல் அரசியல்வாதி உம்லேஷ் யாதவ்தான் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல் செலவீனங்களை குறைத்துக் காட்டியதற்காக உம்லேஷ் யாதவை தகுதி நீக்கம் செய்த தேர்தல் ஆணையம் அவர் தேர்தலில் போட்டியிட 3 ஆண்டுகள் தடை விதித்தது. உம்லேஷ் யாதவ் உத்தர பிரதேசத்தின் பிசவுலி தொகுதியில் கடந்த 2007 ஆம் ஆண்டு போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

கொலை முயற்சி வழக்கில், லட்சத்தீவைச் சேர்ந்த தேசியவாத காங்கிரஸ் எம்.பி முகமது பைசலுக்கு லட்சத்தீவு நீதிமன்றம் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்க, கடந்த ஜனவரி மாதம் உத்தரவிட்டது. இதையடுத்து அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டு இருந்தார். எனினும், தீர்ப்பை எதிர்த்து முகமது பைசல் மேல்முறையீடு செய்ததை அடுத்து தண்டனையை நீதிமன்றம் நிறுத்திவைத்து உத்தரவிட்டது. முகமது பைசலின் சிறைத் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டதால் லட்சத்தீவு இடைத் தேர்தலை ஆணையம் நிறுத்திவைத்துள்ளது. ■



# இலங்கைத் தீவின் எதிர்காலம்?



செல்வின்

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையின் பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கிய அந்நியச் செலாவணி நெருக்கடியும் அதன் காரணமாக எதிர்வு கூறமுடியாத அளவுக்கு அதிகரித்த பணவீக்கமும் தீவின் அனைத்து மக்களையும் மிகவும் கடுமையாகப் பாதித்துள்ளது. எனினும் அதற்கு விதிவிலக்காக இந்த நாட்டின் கடந்த காலத்தை சீரழித்துக் கொள்ளை கொண்ட குடும்பங்கள் எந்த வித தடுமாற்றமுமின்றி தங்கள் ஆடம்பர வாழ்க்கையினையும் அரசியல் சித்துவிளையாட்டுக்களையும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றார்கள்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பு சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன்வசதிகள் பற்றி சாதகமான முடிவுகள் எட்டப்பட்டதும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் வெடிகொளுத்தி ஆனந்தக் கூத்தாடினர். மூழ்கிக் கொண்டிருக்கின்ற படகினை தன்னந்தனியனாக பொறுப்பேற்று ஒரு சாதகமான திசை நோக்கி நிலைநிறுத்தியதற்காக எதிர்க் கட்சிகள்கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினை பாராட்டத்தவறவில்லை.

சர்வதேச நாணயநிதியத்துடன் கடந்த காலத்தில் பதினாறு தடவைகள் இலங்கை அரசு இத்தகைய கடன் ஒப்பந்தங்களுக்கு போயிருந்தாலும் அக்காலங்களில் தன்னால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த விடயங்களை முழுமையாக நிறைவேற்றுவதில் இலங்கை அரசு தவறியுள்ளது என்பதனையும் சர்வதேச நாணயநிதியம் கவனத்திற் கொண்டுதான் தற்போதைய தீர்மானத்தை எடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் முழுமையாக ஒரு நிதி நிறுவனமாக செயற்படுவதுடன் அந்தந்த நாடுகளின் அரசியல் விடயங்களை முன்னிபந்தனையாக வைத்து தீர்மானங்களை எடுப்பதில்லை என உலகினை நம்புமாறு கோருகின்றது. நேரடியாகவும் வெளிப்படையாகவும் சர்வதேச நாணய நிதியம் அரசியல் சார்ந்த நிபந்தனைகளையும் நிர்ப்பந்தங்களையும் முன்வைக்காவிட்டாலும் அந்நிதியத்தை முகாமை செய்வதில் செல்வாக்கினைக் கொண்டிருக்கும் நாடுகள் தங்களது அரசியல் பொருளாதார நிபந்தனைகளை குறிப்பிட்ட கடன்பெறும் நாடுகள் மீது விதிப்பதற்கும் அழுத்துவதற்கும் தவறுவதில்லை.

இது ஒருவகையில் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார ஆலோசனைகளை ஒருபக்கமாகவும் அந்நிதியத்தைக் கட்டுப்படுத்தும் நாடுகளின் அரசியல் நிபந்தனைகள் மறுபக்கமாகவும் கொண்ட ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகவே உள்ளன.

இலங்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியும் உத்தரவாதங்களும் உடனடியாக செயற்பாட்டிற்குள் வருவதாகக் கூறப்பட்டாலும் அது தொடர்ச்சியான நான்கு வருடங்களுக்கான பகுதிக் கடன்களாகவே இருக்கின்றது.

கிடைத்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் கடனையும் கடன் உத்தரவாதத்தையும் தனது தகுதிகளாகக் காட்டிக்கொண்டு இலங்கை மேலதிக கடன்களை வேறுபல நாடுகளிலிருந்தும் நிதிநிறுவனங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளும் வசதிகள் தற்போது ஏற்பட்டிருக்கின்றது என்பது மிகவும் சாதகமான விடயமாகும்.

கிடைக்கப்பெறும் கடன்வசதிகளைக்கொண்டு உடனடித்தேவையான எரிபொருள், உணவுகள், உயிர்காக்கும் மருந்துகள், அத்தியாவசிய தொழில்நுட்ப மற்றும் இயந்திர உபகரணங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்து உள்நாட்டின் பற்றாக்குறை நெருக்கடியினை ஓரளவுக்கு குறுங்காலத்திற்கு சமாளிக்க முடியும் என்பது வரவேற்கத்தக்கது.

எனினும் அதிகரித்த பொருட்களின் சந்தை விலைகளும் மேலதிகமாக உருவாகிய வேலையிழந்தோர் படைகளின் குடும்பங்களின் தங்கிவாழல் சுமையும் உடனடியாக குறைவதற்கான வாய்ப்புக்கள் மிக மிகக்குறைவாகவே இருக்கின்றன.

சுற்றுலாத்துறையினை விரிவுபடுத்தி அதிக சுற்றுலாப்பயணிகளை உள்ளீர்ப்பதன் ஊடாக அதிக அந்நியச் செலாவணி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகள் பேசப்பட்டுக்கொண்டிருப்பதோடு ரஷ்யாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வருவதாக அறிக்கைகளை மேற்கோள்காட்டி செய்திகள் தொடர்ந்து வருகின்றன. சமகாலத்தில் ரஷ்யாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகளின் செலவு செய்யும் சக்தியும் அவர்கள் வருகையினால் கிடைக்கும் அந்நியச் செலாவணி வருமானமும் மிகவும் கீழ் மட்டமாகவே உள்ளதாக சுற்றுலாத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

அதே போன்று பல உள்நாட்டு உற்பத்தித் துறைகளுக்கு பொறுப்பான அமைச்சுக்களும் திணைக்களங்களும்கூட தங்களது நிறுவன இருப்புக்காக தங்களது துறைசார் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதாக விடும் அறிக்கைகளின் நம்பகத்தன்மை மிகவும் பலவீனமாக உள்ளது.

மறுபக்கத்தில் அண்மைக்காலத்தில் இலங்கைத் தீவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினையும் அந்நியச் செலாவணிப் பிரச்சினையினையும் புரிந்து கொள்வதிலும் தீர்வுகளைத் தேடுவதிலும் நேர்மையான அணுகுமுறைகளைப் பின்பற்றுவதற்கு அரசும் அரசியல்வாதிகளும் மட்டுமல்லாமல் அரசின் கொடுப்பனவிலும் சலுகைகளிலும் தங்கியுள்ள புத்திஜீவிகளும் ஆலோசகர்களும் தயாராக இல்லை என்பது இலங்கையின் துயரமான பதிவாக உள்ளது.

கடந்தகால பொருளாதார நெருக்கடிக்கும் அந்நியச் செலாவணிக் கையிருப்புக்கும் காரணமான ஓட்டைகளைக் கண்டறிந்து அடைப்பதற்குரிய அவசரத்தையும் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணர்ந்திருந்தாலும்கூட அவரால் அதற்கான முனைப்புக்களை முன்னெடுக்க முடியாதவாறு அவரது கால்கள் கட்டப்பட்டுள்ளது.

நீண்ட தடிகளை தனது காலில் பிணைத்து தனது உயரத்தை அதிகரித்துக்காட்டி நடனமாடும் சாகசக்காரனுக்கு மட்டும்தான் தெரியும் கரணம் தப்பினால் மரணம் என்பது. அத்தகைய வேசம் போட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவினால் சுயமாக எதுவுமே செய்து நாட்டின் அந்நியச் செலாவணியை கொள்ளை கொண்டு போன ஓட்டைகளை அடைக்கமுடியாது. அத்தகைய பெரிதும் சிறிதுமாக பலநூறு ஓட்டைகளை அடைக்காமல் நாட்டினை மீட்கவும் முடியாது.




நாட்டினை பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து மீட்பதற்கு வேண்டிய அர்ப்பணிப்பும் ஆர்வமும் நேர்மையும் வினைத்திறனும் கொண்டவர்களாக அரசாங்கத்தின் பணித்துறை ஆட்சி மாற்றப்படவேண்டும். அளவுக்கு மீறிய வேலையாட்களையும் வினைத்திறனும் விளைதிறனும் பொறுப்புக்கூறல் கடப்பாடும் இல்லாத அரசின் மிகப்பெரிய வெள்ளை யானையான அரசநிர்வாகத்துறையும் அதன் அதிகார சபைகளும் தங்களை மீளாய்வு செய்வதற்கான வாய்ப்புகளை எதிர்நிலை அரசியல் செய்யும் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் அனுமதிக்கப்போவதும் இல்லை.

தங்களது உரிமைகளின் பெயரால் போராடமுற்படும் தொழிற்சங்கங்கள் தங்களது தொழில் வாண்மை சார்ந்த அறங்களையும் மீறி பொதுமக்களின் நலன்களைப் பணயம் வைக்கும் வேடிக்கை இங்குதான் நிகழ்கின்றது.

ஏழைகளும் நாளாந்தக் கூலிகளும் குறைந்த மட்ட மாதவருமானம் பெறும் பணியாளர்களும் காட்ட முடியாமல் இருக்கும் தங்களது நியாயமான கோபத்தின் பெரு நெருப்பினைவிட உயர்வருமானம் பெறும் வர்க்கமும் உயர்பதவி அந்தஸ்துகளை அனுபவிக்கும் வர்க்கமும் காட்டும் பந்தா மிகப் பெரிதாக ஊதிப்பெருப்பிக்கப்படுகின்றது.

இலங்கையில் ஏற்பட்டது போன்றளவில் இல்லாவிடினும் அதனை ஒத்ததான பொருளாதார நெருக்கடி அண்மையில் பாகிஸ்தான் நாட்டில் ஏற்பட்டபோது அங்கு அமைச்சர்களின் வேதனம் உட்பட சலுகைகள் யாவும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

ஆனால், இலங்கையில் அமைச்சர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பது பற்றி தீவிரமாக ஆலோசிக்கப்படுகின்றது. 2 ஆம் உலக மகாயுத்தத்தின்பின்பு ஜப்பானியர்கள் தங்கள் நாட்டினை மீளக்கட்டியெழுப்புவதற்காக உழைத்தபோது தங்களது வெளிநாட்டுப்பயணங்களையும் ஆடம்பர வாழ்க்கையினையும் இடைநிறுத்தினார்கள் அல்லது தவிர்த்தார்கள்.

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் தனிநாடாக லீக் குவான் ஜீ தலைமையில் பிரிந்தபோது சுத்தமான குடிதண்ணீருக்குக்கூட வளமில்லாத சிங்கப்பூரியன்கள் தங்கள் தேசத்திற்காக கடுமையாக வாரத்தின் ஆறுநாட்களும் நீண்டநேரங்கள் அடிப்படையில் கடுமையாக உழைத்தார்கள். ஏனெனில் அங்கு தொலைநோக்கும் நேர்மையும் கொண்ட தலைமைத்துவம் இருந்தது. நாட்டினைக் கட்டியெழுப்புவதற்காக அனைத்து இனங்களையும் மொழிகளையும் அங்கீகரித்து அணைத்து முன்செல்லும் தீட்சர்ணயம் மிக்க ஆளுமை இருந்தது.

ஆனால், இலங்கை இன்னமும் தனது மீட்பருக்காக கண்டறிய முடியாமல் திக்குத் தெரியாத காட்டில் அலைகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடியின் மூலத்தை எங்கே தேடுவது? அது வெறுமனே முன்னைய ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் முறைகேடுகளும் ஊழல்களும் தானா? அல்லது அதற்கு முந்தியதாக ஈழத்தமிழ்த்தேசிய இனத்தின் மீது நடத்திய கொடூர ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு வாங்கப்பட்ட வரம்பு மீறிய யுத்த தளபாடங்களின் செலவுகள் காரணமாக ஏற்பட்டதா? அல்லது இவற்றைவிடவும் வேறுகாரணங்கள் உண்டா என்பதனை எமது விருப்புகளுக்கும் பயங்களுக்கும் அப்பால் ஆராயவேண்டும்.

“ஒரு சொட்டுத் தண்ணீரையும் கடலுக்கு சென்று விழ விடமாட்டேன்” என்று கூறி பாரிய குளங்கள் அமைத்த 2 ஆம் பராக்கிரமபாகு ஆண்ட தேசம் 1948 இல் சுதேசிகளின் ஆட்சியின் கீழ் வந்தபோது சீன தேசத்துடன் “இறப்பருக்காக அரிசி” என்ற ஒப்பந்தத்தின் கீழ் அத்தியாவசிய உணவான அரிசியை இறக்குமதி செய்வதற்கு ஒப்பந்தம் செய்தது ஏன்?

“தனது கனவு இலங்கையின் அபிவிருத்தியை முன்மாதிரியாகக் கொண்டு சிங்கப்பூரினைக் கட்டியெழுப்புவதே” என 1960களில் விதந்துரைத்த சிங்கப்பூரின் தேசநிர்மாணி மாண்புமிகு. லீ குவான் ஜீ காட்டிய இலங்கை 30 வருடத்தின் பின்பு சிங்கப்பூரின் வளர்ச்சியினை தங்கள் கனவுத் தேசமாகக் கொள்ளுமளவிற்கு வீழ்ந்து போனதா? தன்னைத் தானே சீரழித்துக்கொண்டதா?

எங்கே தவறு நிகழ்ந்துள்ளது?

ஐரோப்பியரின் குடியேற்றவாத ஆட்சியதிகாரம் இந்தத் தீவில் வருவதற்கு முன்பு இந்தத் தீவின் மக்களின் பொருளாதாரம் சுயசார்புப் பொருளாதாரமாகவே இருந்தது. இந்த ஆசீர்வதிக்கப்பட்ட தீவின் மக்கள் வனப்பும் வளமும் மிகு தீவின் இயற்கை வளங்களை தங்கள் இயலளவுக்கு ஏற்ப பயன்படுத்தியும் பண்படுத்தியும் பாதுகாத்தும் வந்தார்கள்.

ஒரு சிறிய தீவு, காடும் கரையோரங்களும் மலையும் மடுவும், குளிரான சீதோசணநிலை கொண்ட பிரதேசங்களும் வரண்ட பிரதேசங்களும் ஆழ்கடலும் குடாக்கடலும் ஆறும் அருவியும் முத்தும் இரத்தினமும் வனவிலங்குகளும் வான்பறவைகளும் என செழித்து இருந்தது.

மிளகும், வாசனைத் திரவியங்களும் யானைத்தந்தமும் முத்தும் என பரிசுப்பொருட்களும் ஏற்றுமதிப்பண்டங்களும் மாதோட்டம் போன்ற துறைமுகங்களால் சீனம், பாரசீகம், உரோமம், காவிரிப்பூம்பட்டினம் என கடல்தாண்டி நாவாய்களில் உலகெங்கும் பெருமை சேர்த்தது.

இத்தகைய தீவினை ஐரோப்பியர் கைப்பற்றிய போது அவர்கள் மத்திய மலைநாட்டின் வளமிகு காலநிலையும் வளமான மண்ணும் தேயிலை, இறப்பர், கோப்பி போன்ற பயிர்களுக்கு உகந்ததாக இருப்பதனைக் கண்டறிந்தனர். மத்திய மலை நாட்டின் கிராமியப் பொருளாதாரத்தையும் இயற்கை வளங்களையும் மட்டுமன்றி கண்டிய சிங்கள பௌத்த மக்களின் பண்பாட்டுச் செழுமை மிக்க வாழ்வியலையும் சிதைத்து பெருந்தோட்டங்களை உருவாக்கினர்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கைத் தீவின்...

(08 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

அன்றைய காலகட்டத்திலிருந்து இலங்கையின் பொருளாதாரம் பெருந்தோட்டப் பொருளாதாரம், கிராமியப் பொருளாதாரம் என்ற இரட்டைச் சக்கரவண்டியில் பயணிக்கத் தொடங்கியது.

பிரித்தானியரின் பெருந்தோட்ட முனைப்புகளின் நிபந்தனைகளுக்கு அடிபணிய மறுத்த கண்டிய சிங்கள மக்களை புறந்தள்ளி இந்தியாவின் தமிழ்நாட்டுக் கிராமங்களில் வறுமையாவும் சமூக வக்கிரங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களை பெருந்தோட்டக்கூலிகளாக இலங்கைத் தீவிற்கு கொண்டு வந்த பிரித்தானியர் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை இந்தத் தீவின் பெரும் பொருளாதாரமாக்கினர். பெருந்தோட்ட விளைவுகளை துறைமுகங்களுக்கு கொண்டு செல்வதற்காக மத்திய மலைநாட்டிற்கும் கொழும்புக்கும் இடையில் தரைப் பாதைகளும் இரும்புப் பாதைகளும் அமைத்தனர். இதனால் இலங்கைத் தீவின் சர்வதேச உறவுகளின் தலைவாசல்கள் வடக்குக் கிழக்கு கரையோரங்களிலிருந்து மேற்கிற்கு மாற்றப்பட்டது.

இலங்கையைவிட்டு பிரித்தானியர் 1948 இல் வெளியேறும் போது இலங்கையின் பொருளாதாரத்தின் நாற்பது வீதத்தை பெருந்தோட்டத்துறை கொண்டிருந்தது. பிரித்தானிய குடியேற்றவாத ஆட்சிக்கால ஏற்றுமதி வருமானம் அவர்களுக்கு சென்றிருந்தாலும் சுதேசிகளின் சுதந்திர ஆட்சியில் அது முழுமையாக இந்தத் தீவிற்கு சொந்தமானது.

இன்றைய கீழ்நிலை தற்செயலானதா? அல்லது தற்கொலை முயற்சியா? இல்லை இவையெல்லாம் இந்தத் தீவில் நிகழ்த்தப்பட்ட பொருளாதாரப் படுகொலைக் குற்றங்களா?

**முதலாவது குற்றம்:** நாட்டின் நாற்பது வீத பொருளாதாரத்தின் முதுகெலும்பான மக்களை நாடற்றவர்களாக்கி படகேற்றியது.

பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்டு தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவந்து குடியேற்றப்பட்ட தொழிலாளர்களின் கடுமையான உழைப்பாலும் அவர்களின் இரத்தத்தாலும் வேர்வையாலும் தியாகத்தாலும் செழுமையாக்கப்பட்ட பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மேலும் வளம்படுத்துவது என்ற உயரிய தொலைநோக்கு பார்வையிலிருந்து தடம்மாறினர். சிங்களத் தலைவர்கள் பெருந்தோட்டத்தின் உயிர்நாடியாக இருந்த கூலி உழைப்பாளர்களை நாடற்றவர்களாக்கி அவர்கள் இலங்கையின் ஜனநாயக ஆட்சியில் கொண்டிருந்த உரிமையினையும் மறுத்து பல இலட்சம் கடின உழைப்பும் பெருந்தோட்ட வேளாண்மையில் சிறப்புத் தேர்ச்சியும் கொண்ட உழைப்பாளர் படையினை நாட்டினைவிட்டு ஏதிலிகளாக வெளியேற்றினர்.

இதனைவிட முட்டாள்தனமான விடயம் இத்தீவின் வரலாற்றில் வேறெதுவுமாக இருக்க முடியாது.

மகாவம்சத்தின் கூற்றுப்படி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு தனது சொந்த தந்தையான அரசனாலேயே ஒழுக்கங்கெட்டவர்கள் என தண்டிக்கப்பட்டு கடலிலேயே படகேற்றி அனுப்பப்பட்டு இந்தத் தீவில் கரையொதுங்கி அடைக்கலம் புகுந்த விஜயனதும் அவனது தோழர்கள் எழுநூறு பேர்களின் பரம்பரையென்று பெருமை பேசுபவர்கள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய ஆட்சியாளர்களினால் சட்டமுறையாக இத்தீவின் பொருண்மியம் சிறக்க உழைப்பாளிகளாக அழைக்கப்பட்டு தங்கள் இரத்தத்தையும் வியர்வையினையும் சிந்தி பெருந்தோட்டப் பயிருக்கு உரமாகிய தலைமுறையினை வந்தேறு குடிகள் எனக்கூறி நாடற்றவர்களாக்கி படகேற்றி அனுப்பினர். இது நவீன யுகத்தின் மனுக்குலத்திற்கெதிரான குற்றமாகவும் மாபெரும் பொருளாதாரப் படுகொலையாகவும் இத்தீவின் வரலாற்றில் பதியப்பட வேண்டியது.

தமிழ்நாட்டிலிருந்து வந்து இத்தீவின் வளம் செழிக்க உழைத்தவர்களை இந்தியாவிலிருந்து வந்த குடியேறித் தமிழர்களாக பார்த்தவர்கள் தங்கள் மூதாதையரின் தலைவனும் தோழர்களும் பெண்ணெடுத்து வம்சம் பெருக்கியது முத்தமிழர் நிலத்தில் ஒன்றான பாண்டியநாட்டிலிருந்து என்பதனை மிகவும் சௌகரியமாக மறந்து விட்டனர்.

**இரண்டாவது குற்றம்:** நாட்டின் வினைத் திறனையும் விசுவாசமுள்ள பொதுச்சேவையாளர்களையும் பணியிலிருந்து அகற்றி கதவடைத்தது

பிரித்தானியரின் ஆங்கிலக்கல்வியினைக் கற்று குடியேற்றவாத ஆட்சியாளர்களின் முடிக்குரிய கீழ்ப்படிவுள்ள ஊழியர்களாக இந்தத் தீவில் மட்டுமல்ல சிங்கப்பூர் மலேசியா சென்னை என கடல் தாண்டியும் விசுவாசமாகவும் வினையாண்மையுடனும் பணிபுரிந்த தமிழ்மொழியைத் தாய்மொழியாக பெருந்தொகையான அரசாங்க ஊழியர்களை "சிங்கள மொழி மட்டும்" சட்டத்தின் மூலம் அரச துறையிலிருந்து வெளியேற்றியது இலங்கையின் வினைத்திறனான சேவைத்துறையினைச் சீரழிக்க ஆட்சியிலிருந்த சிங்கள பௌத்த தேசியவாத சிந்தனையாளர்கள் செய்த இரண்டாவது படுகொலையாக அமைந்தது.

**மூன்றாவது குற்றம்:** நாட்டின் மூலதனவாக்கத்தையும் தொழிலாண்மையினையும் சொத்துருவாக்கத்தையும் திட்டமிட்டு தீயிட்டு அழித்தது

இலங்கைத் தீவின் கிராமிய வாழ்வியலையும் பொருளாதாரத்தையும் தங்களது சிறிய வியாபார மற்றும் தொழிலாண்மை முயற்சிகளால் சிறக்கச் செய்து சிங்கள மக்களுடன் நெருங்கி வாழ்ந்த தமிழர்களின் பொருண்மிய ஆற்றல்களையும் சொத்துக்களையும் நிர்மூலமாக்குவதற்காக காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்தவர்களின் பின்புலத்தில் நிகழ்த்தப்பட்ட இனக்கலவரங்களும் வன்செயல்களும் இந்தத் தீவின் மூலதன ஆக்கத்திறனுக்கும் சொத்துருவாக்கத்திற்கும் தொழிலாண்மையின் பெருக்கத்திற்கும் கிராமிய வாழ்வியலின் ஒருங்கிணைந்த எழுச்சிக்கும் எதிரான குற்றம் என்பதனை இன்றுவரை ஏற்றுக்கொள்ள மறுப்பது மிகத்திட்டமிட்ட பாரிய குற்றவியல் ஆகும்.

**நான்காவது குற்றம்:** கடும் உழைப்பினால் துறைசார்கல்வியில் பட்டங்கள் பெற்று தொலைதூர கிராமங்கள் உட்பட சேவைகள் புரிந்த கல்விப் பாரம்பரியத்திற்கு மொழிவாரி தரப்படுத்தல் மூலம் சாவுமணியடித்தது.

வடக்கு கிழக்கெங்கும் பரவியிருந்த அமெரிக்க மிசனறியும் ஆறுமுகநாவலரின் வழித்தடமும் ஸ்ரீ இராமகிருஸ்ன சபையின் துறவறமும் போற்றிக் கட்டியெழுப்பிய கல்வி நிறுவனங்களால் செழுமை பெற்ற மாணவர் பரம்பரை இலங்கையின் பல்கலைக்கழகங்களின் துறைசார் பீடங்களை முதன்மையாக நிறைத்தது. அவ்வாறு கற்ற தமிழ் மாணவர்கள் நாட்டின் பட்டிதொட்டியெங்கும் நகரம் கிராமம் என வேறுபாடு காட்டாமல் அர்ப்பணிப்போடு பணியாற்றி மக்கள் சேவகம் செய்தனர். உயிர்காத்தனர், சமூக நலம் காத்தனர். கிராமங்களையும் நகரங்களையும் கட்டியெழுப்பி அம்மக்களுக்கு வளம் சேர்த்தனர்.

அத்தகைய மனிதவளத்தினை இலங்கைக்கான மனிதவளமாக பார்த்து பாராட்டாமல் அங்கீகரிக்காமல் தமிழ் மனிதவளமாக நோக்கி அவர்களின் கல்வித் தொடர்ச்சிக்கும் பணியாற்றல் பண்பிற்கும் தடைபோட்ட அதிமேதாவித்தனம் இலங்கைத் தீவில் மட்டும்தான் நாங்கள் கண்டுகொள்ள முடியும்.

சிங்கள ஆட்சியாளர்களும் இன்றுவரை கற்றுக் கொள்ளத் தயாராகவில்லை. தமிழ் தேசியவாதிகளும் ஆக்கபூர்வமாக சிந்தித்து முன்னகரத் தயாராகவில்லை.

2009 போருக்குப் பின்னான தசாப்தத்தில்கூட தங்களால் வெற்றிகொள்ளப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டதாக கொள்ளப்படும் ஈழத்தமிழர்கள் கொண்டிருக்கும் அறிவாற்றல்கள், புலமை, தொழிலாண்மை, மூலதனத்திரட்சி, உலகெங்கும் பரந்திருக்கும் அவர்களது தொடர்பாற்றல்கள் என்ற விடயங்களைப் பெருக்கி நாட்டினைக் கட்டியெழுப்பும் சிந்தனையோ அணுகுமுறையோ மாறி மாறி வந்த எந்தவொரு சிங்கள ஆட்சித்தரப்பிற்கும் தலைவருக்கும் இன்றுவரை வரவில்லை.

இன்றுவரையும்கூட தமிழர்களும் அவர்களது வாழ்நிலமும் வளங்களும் சிங்கள பௌத்தத்தின் இறைமைக்குட்பட்டது என்ற வாதம் அனைத்து சிங்கள அரசியற்கட்சிகளாலும் பல்வேறு வடிவங்களில் பிரகடனப்படுத்தப்படுகின்றது. ஒட்டுமொத்தத்தில் வேறுபட்ட வடிவங்களான குடுவைகளில் உள்ள ஒரே இனத்தேசியமாகவே காணப்படுகின்றது. நாளாந்தம் தமிழர்களது தேசம் கோறைப்படுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப்படுகிறது.

அத்தகைய பாரபட்சமான இனமேலாதிக்க வெறிகொண்ட சிங்கள பௌத்த தேசியவாதிகள் தாங்கள் கடந்த எண்பது வருடங்களாக தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்த இனவாத கோட்பாடுகள் கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றின் விளைவினை தற்போது இந்தத் தீவு தற்போது அறுவடை செய்கின்றது.

இந்த நிலைமையிலும் தமிழர்கள் இந்தத் தீவில் எவ்வாறு சரிநகர் சமானமாக வாழ வேண்டும் என்பதனை சுயமாகக் கண்டறிய மறுப்பது "சிங்கத்தின் பசிபோக்க நாளொரு மிருகம் தானாக முன்வந்து சிங்கத்தின் குகைக்குச்சென்று பலியாகும் உடன்படிக்கையினை ஒத்த விடயத்திற்கு ஈழத் தமிழ்ச்சமூகத்தை அழைத்துச் செல்ல முயற்சிக்கும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களது சாதூரியத் தனத்தையே காட்டுகின்றது.

இதனை மௌனமாக அனுமதித்துக்கொண்டு கடந்து போகும் தமிழ்ச்சமூகத்தின் புத்திசீவிகளும் குடிசார்சமூகமும் செயற்பாட்டாளர்களும்கூட ஈழத்தமிழ் இனஅழிப்பிற்கு உடந்தையானவர்களே. ■

# பாராளுமன்றத்திற்கு அருகில் புதிய ஜனாதிபதி மாளிகை

பாராளுமன்றத்திற்கு அருகில் புதிய ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகத்தை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளது.

வர்த்தகத் தலைநகரான கொழும்பில் உள்ள தற்போதைய கட்டடங்கள் கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்திற்காக மீண்டும் உருவாக்கப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

புதிய கட்டடங்கள் நவீன, விசாலமான மற்றும் அதிநவீன வசதிகளுடன் ஜனாதிபதி மற்றும் அவரது ஊழியர்களுக்கு சேவை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிர்வாகத் தலைநகரான ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டையிலுள்ள பாராளுமன்றம் மற்றும் ஏனைய அரசாங்க அலுவலகங்களுக்கு இலகுவான அணுகலை வழங்கும் நோக்கில் ஜனாதிபதியின் கட்டடங்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.



மேலும், தற்போது கொழும்பில் மலர் வீதியில் அமைந்துள்ள பிரதம மந்திரி அலுவலகம் மற்றும் அலரிமாளிகையில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமும் ஸ்ரீ ஜயவர்தனபுரத்திற்கு மாற்றப்படும், இது இலங்கையின் அரசியல் அதிகாரத்தின் மையமாக மாற்றப்படும்.

ஜனாதிபதி செயலகம் மற்றும் ஜனாதிபதி மாளிகை இடம் மாற்றப்படுவது இது முதல் தடவையல்ல. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்க பண்டாரநாயக்க குமாரதுங்க (CBK) ஆட்சிக் காலத்தில் , பாராளுமன்றத்திற்கு அருகாமையில் இவ்வாறான ஒரு வசதிக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும், விவரிக்க முடியாத சூழ்நிலையால் திட்டம் திடீரென நிறுத்தப்பட்டது.

புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான காலக்கெடுவை அரசாங்கம் அறிவிக்கவில்லை, ஆனால் அது நிர்வாகத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ■

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சாதக பாதக அம்சங்கள்

சாம்பசிவம் ஹரிகரன்

ஒரு நாட்டின் ஜனநாயகம் வெற்றியளிக்க வேண்டுமாயின் அந்த நாட்டு மக்களின் உரிமை மீது அரசின் தேவையற்ற தலையீடுகள் தவிர்க்கவேண்டும் என்பது தாராண்மைவாத ஜனநாயகத்தின் அடிப்படையாகக் காணப்படுகின்றது. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டம் ஜனநாயகத்தை பிரதானப்படுத்தினாலும் அதன் அரச கொள்கை தத்துவமானது அரசின் செயற்பாடுகள் கொள்கை வடிவமைப்புகள் ஜனநாயகத்தை முதன்மைப்படுத்தி தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினாலும் இலங்கையில் அத்தகைய தீர்மானங்கள் முதன்மைப்படுத்தப்பட்டனவா? என்ற கேள்வியே எழுகின்றது. இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து இன்றுவரை அவசரகாலச் சட்டத்தாலும் 1979 ஆம் ஆண்டிலிருந்து பயங்கரவாத தடைச் சட்டத்தாலும் நிர்வகிக்கப்பட்ட நாடு என்ற அடிப்படையில் இலங்கையின் ஜனநாயகம் பின்னோக்கி பயணிப்பதற்கான அடிப்படையாக எடுத்து விளக்க முடியும். அந்த வகையில் பயங்கரவாத தடைச்சட்டப் பிரிவுகளும் அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளும் இலங்கையின் மனித உரிமை, சட்டத்தின் ஆட்சி என்பனவற்றை மலினப்படுத்தி இருப்பதை வரலாற்றடிப்படையில் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது

அந்த வகையில் பயங்கரவாத தடைச் சட்ட ஏற்பாடுகளைத் திருத்தி சர்வதேச நியமங்களுக்கு



உட்பட்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றை கொண்டு வருகின்றோம் என்ற பெயரில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றிய ஆய்வுகள் அத்தியாவசியமாய் அமைகின்றது. இதற்கென கடந்த வாரம் ஒரு புதிய சட்டமூலம் பயங்கரவாதத்துக்கு எதிரானது என்ற பெயரில் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. உண்மையில் இச்சட்டமூலம் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு உட்பட்டு வரையப்பட்டுள்ளதா என்பதை ஆய்வுக்கு உட்படுத்தல் பொருத்தமானதாக அமைகின்றது. இச்சட்டமூலம் பயங்கரவாதம் என பரந்த வரையறுப்புகளை தன்னகத்தே கொண்டு வரையப்பட்டு நீதி சிறைச்சாலை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டதை அவதானிக்க முடிகின்றது.

பயங்கரவாத செயல்களிலிருந்தும் இலங்கையினுள் அல்லது வெளியில் புரியப்பட்டவையும் பயங்கரவாதத்துடன் இணைந்தவையுமான வேறு தவறுகளில் இருந்தும் பயங்கரவாதம் என்ற குறித்த தவறாக அமைகின்ற குறித்த செயல்களில் இருந்தும் இலங்கையின் பந்தோபஸ்தினையும் இலங்கை மக்களைப் பாதுகாப்பதற்கும் இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்காக ஆயத்தம் செய்வதற்கு இலங்கை மக்களையும் ஆட்புலத்தைப் பயன்படுத்தலைத் தடுப்பதற்கும் பயங்கரவாதத்துடன் இணைந்த செயலொன்றை செய்யும் ஆட்களை கண்டுபிடிப்பதற்கும் அடையாளம் காண்பதற்கும் பற்றுகைக்கு உட்படுத்துவதற்கும் தடுத்து வைப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும் அவருக்கெதிராக குற்றவழக்கு தொடுப்பதற்கும் அவரை தண்டிப்பதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான சட்டமூலமொன்று என இச்சட்டமூலம் அடையாளப்படுத்துகின்றது. இச்சட்டமூலமானது ஏற்கெனவே பல்வேறு தரப்புகளால் ஆபத்தானது என விமர்சிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தை நீக்கி புதிய ஒரு சட்டம் ஒன்றை உருவாக்கும் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட சட்டமாக அமைகின்றது.

இச்சட்டமூலம் பற்றிய விவாதங்கள் எப்படியிருப்பினும் மிக நீண்ட விடயங்களையும் செயல்களையும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் கீழ் தவறொன்றாக குற்றமொன்றாக அடையாளப்படுத்தக் கூடிய தவறாக அடையாளப்படுத்துகின்றது. ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டப் பிரிவில் சில ஏற்பாடுகளுடன் ஒத்து போவதாகவும் சில ஏற்பாடுகளோடு வேறுபடுவதாகவும் இச்சட்டமூலம் அமைகின்றது. குறிப்பாக, இதன் நீண்ட பயங்கரவாத செயல்களுக்குள் அரசாங்கத்திற்கு எதிராக புரியப்படுகின்ற விமர்சனங்கள் கருத்துகளை உள்ளடக்க முடியும் என்பது, சட்டமூலத்தை விமர்சிப்பவர்களின் விமர்சனமாக அமைகின்றது. மக்களின் கருத்து வெளிப்பாட்டு உரிமை போராட்டம் நடத்தும் உரிமை, அரசாங்கத்தை விமர்சிக்கின்ற தரப்புகளையும் உள்ளடக்க முடியும் என்பதே இதன் அடிப்படைச் சவாலாக அமைகின்றது. பயங்கரவாதத்தை தெளிவாக வரையறுக்காமல் மிகநீண்ட அடிப்ப டையில் வரையறுத்தல் என்பது இதற்கான கதவைத் திறந்து விடுகின்றது. குறிப்பாக, வெறுப்புணர்வை தூண்டுகின்ற பேச்சுகள் என் பவற்றில் தமிழர்கள் நீண்டகாலமாக வலி யுறுத்தி வரும் சுயநிர்ணய உரிமை கோரிக் கையின் அடிப்படையிலான அதிகார பகிர் வையும் உள்ளடக்க முடியுமா? என்ற கேள்வியை கடந்த காலங்களில் சில சட்ட மற்றும் மனித உரிமை நிபுணர்கள் எழுப்பியிருந்ததையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

இச்சட்டமூலத்தின் சில நல்ல விடயங்கள் சிலவற்றையும் நாம் அவதானிக்க முடியும். குறிப்பாக அந்தரங்கங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் சில ஏற்பாடுகள் இதில் காணப்படுகின்றன. இதன் 24 ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு கைதுகளின் போதும் சந்தேக நப ரின் அந்தரங்கத்தன்மைக்கு உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும் என வலியுறுத்துகின்றது. பெண் சந்தேக நபரின் கைதானது பெண் அலுவலரின் முன்னிலையில் அல்லது சமூகத்தில் செய்யப்பட வேண்டும் என சட்டம் தெளிவாகக் கூறுகின்றது. பெண் சந்தேக நபரைத் தேடுதலும் வினவுதலும் பெண் அலுவலரின் பிரசன்னத்துடன் செய்யப்பட வேண்டும் என சட்டம் வலியுறுத்துகின்றது.

இதன் பிறிதொரு அடிப்படையாக கைது செய்யப்படும் போது அவரின் வாழ்க்கைத்துணை, தாய் தந்தை அல்லது நெருங்கிய உறவினரிற்கு 24 மணிநேரத்தில் அறிவிக்கப்பட வேண்டும் என சொல்கின்றது. அத்தகைய அறிவிப்பானது கைது செய்யப்படும் நேரமும் திகதியும் இடமும் கைது செய்யப்படுவதற்கான காரணம் கட்டுக்காவல் தடுப்புக்காவலிடம் கைது செய்யப்படும் அதிகாரியின் பதவி இலக்கம் பெயர் குறித்த விடயங்கள் உள்ளடக்கங்கள் அமைதல் வேண்டும் என வலியுறுத்துகின்றது. அத்துடன் அந்த அறிவிப்பும் தகவலும் புரியக்கூடிய மொழியில் வழங்கப்பட வேண்டும் எனவும் சட்டம் கூறுகின்றது. அத்துடன் பொலிஸ் தலைமையதிபதி இது தொடர்பான ஆவணங்களைப் பேணி வருவதை நிர்ப்பந்தித்தல் போன்றன சட்ட மூலத்தின் சாதகமான பக்கங்களாகும். அத்துடன் கைது செய்த உத்தியோகத்தர் தகுதிவாய்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடம் 24 மணி நேரத்தில் ஒப்படைத்தல் அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தல் ஆகியனவும் இதில் குறிப்பிடத்தக்க நல்ல விடயங்களாகும்.



அத்துடன் கைது இடம்பெற்று குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அறிவித்தல், சட்டத்தரணியை சந்தேக நபர் அணுகுவதற்குரிய உரிமையைப் பாதுகாத்தல் ஆகியன இதில் இருக்கின்ற பிறிதொரு சாதகமான பக்கமாகும் அத்துடன் நீதவானொருவருக்கு சட்டத்தின் கீழ் சந்தேக நபரின் சேமநலன் நல்வாழ்வை முன்னிறுத்தி கலந்துரையாடல் நேர்காணலைச் செய்தல், சந்தேக நபரின் கருத்துரைகளைப் பதிவு செய்தல், சட்ட மருத்துவ பரிசோதனைக்கான பணிப்புகளை வழங்குதல் ஆகியவற்றிற்கு சட்டம் வாய்ப்பளிக்கின்றது. இவை இச்சட்டத்தின் சாதகமான பக்கங்கள் ஆகும்.

**சட்டத்தின் பாதகமான அம்சங்கள்**

விளக்கமறியலை நீடிப்பதற்கு விண்ணப்பம் செய்ய சட்டத்துறை தலைமையதிபதிக்கு சந்தர்ப்பத்தை வழங்கல், தடுப்புக்காவல் உத்தரவை நீடிக்கச் செய்ய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவரின் பரிந்துரையின் கீழ் பிரதி பொலிஸ் மா அதிபருக்கு வாய்ப்பு சந்தர்ப்பம் வழங்கல் ஆகியன சர்வதேச மனித உரிமை பொறிமுறைகள் நியமங்களில் இருந்து வேறுபடுவதற்கான அடிப்படையாகும். ஆனாலும் தடுப்பு வைத்தல் கட்டளை 12 மாதத்துக்கு விஞ்சக்கூடாது எனவும் சட்டம் கூறுகின்றது. அத்துடன் தடுப்புக்காவல் விளக்கமறியல் தொடர்பான ஏற்பாடுகள் சாதாரண பிணை வழங்கல் ஏற்பாடுகள் சாதாரண சட்ட ஏற்பாடுகளில் இருந்து விலகிச்செல்லுதல் இச்சட்டமூலத்தின் பாதகமான பக்கமாகும்

இதேவேளை இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் தடுப்புக்காவல் கட்டளை தொடர்பான நிவாரணத்துக்கான மீளாய்வு சபையில் அரச அல்லது ஜனாதிபதியின் தலையீடு இருக்கும் வகையில் வழங்கப்பட்டமை பாதகமான அடிப்படையாகும். இதன் அங்கத்தவராக சட்டம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மனித உரிமை தொடர்பில் குற்றவியல் நீதி தொடர்பில் நிபுணத்துவம் வாய்ந்த ஜனாதிபதியால் நியமிக்கப்படும் இருவர் என மூவர் பெயரிடப்பட்டுள்ளனர். இதில் மூவர் சார் பதவி நியமனத்திலும் ஜனாதிபதியின் செல்வாக்கு காணப்படுகின்றமை ஜனாதிபதியின் செல்வாக்கை அதிகரிக்க சட்டம் வாய்ப்பேற்படுத்திக் கொடுத்தமைக்கு சான்றாகும். அத்துடன் சாதாரண சட்டத்தின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் நீதிமன்றம் முன்னாலேயோ நீதிபதி முன்னாலேயோ 48 மணி நேரத்துக்குள் முற்படுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றது இது கைது செய்யும் உத்தியோகத்தரால் 24 மணி நேரத்துக்குள் பொலிஸ் நிலையத்திலும் அதில் இருந்து 48 மணி நேரத்துக்குள் நீதிமன்றத்திலும் முற்படுத்த வேண்டும் என வலியுறுத்துவதன் ஊடாக 72 மணி நேரமாகக் காணப்படல் சித்திரவதை செய்யப்படுவதில் இருந்து இயன்ற வரையில் பாதுகாப்பு பெறும் உரிமை மீறப்படுவதற்கு வாய்ப்பேற்படுத்தல் என்பது மனித உரிமை சார் நிபுணர்களின் கருத்தாக அமைகின்றது. அத்துடன் பிணைக்கான ஆட்சேபனையை தெரிவிக்கும் சந்தர்ப்பத்தை சட்டம் பொலிஸ் தரப்புக்கு வழங்குவதன் ஊடாக சொந்த சுதந்திரம்

(20 ஆம் பக்கம் பார்க்க...)

## கனவுத் தோழன்

இளமைக் காலம்
இனிமைத் தேனாக,
இதய இராகம்
இடைவெளியின்றி
இசைக்கின்றது

வாசிக்கத் துடிப்பதேனோ!
எந்தன் இருதயம்
உன்னைப் பார்த்திட
நினைப்பதேனோ!




இரவாக நீ
கனவாகத்தான்
வருகிறாய்!
சுகமாக நெஞ்சில்
உட்சுவாசம்
தருகிறாய்!

நிஜத்தின்
தோழன் ரன்
நீ என சாய்கையில்
கனவின்
நிழலாக விடிகிறாய்!

எந்தன்
ஈரிதழ் உன்னை

ஆரூயிர் நீ என
முத்திரை பதித்திட
எந்தன் பேனா முனை
தயங்குது தோழா!
ஏனெனில்
விரலின் குருதியோ
எழுத்தாயுதம்
நானென்கிறது.

இசை

## என்றும் என்னுடன் வா!

தனி மரமாக
பயணம் செய்தேன்
துணை மரமாக
என்னுடன் வந்தான்




மொட்டாக இருந்த
என் வாழ்வு
அவன் வந்ததும்
பூவாக மாறியது

மகிழ்வோடு இருந்தேன்

சிரிப்பாய் எப்போதும்
என் உணர்வோடு
கலந்து இருந்தான்

என்னில்
கலந்தவனுக்கு
என்னைத் தவிர
வேறு என்ன
வேண்டும்.

அபி யது

## கைபேசி பாவனை

கண்மூடித்தனமாக
கையடக்கத் தொலைபேசி
கையை மட்டுமா கண்ணையும்
தான் மறைக்கிறது

வேண்டுகின்றோம்
விலைமதிப்பற்ற நோய்களை

கிடைத்தது ஒருவாழ்கை
வரமாக அதைப் பெற்று

டினோபன்



காலை கூவும் சேவல்
தூங்கி விட்டதுவோ
இல்லை கையடக்கத்
தொலைபேசிதான் கூவி
விட்டதுவோ

கண் திறக்குமுன்னே
கை தேடும்
கண்திற பின்னும்
புலன் ஐந்தும்
புலனத்தை நாடும்

நிஜ உலகின்
நிழல்களை
கண்ணை மறைக்கும்
கர்ம வினைகளை
விலை கொடுத்து

நோய் இன்றி
உறவுகள் சூழ்ந்து இருக்க
உன்னதமாய் வாழ்ந்திடுவோம்

தொலைபேசி
தொல்லை பேசியாய்
மாறி மனிதத்தை தொலை
தூரம் தொலைக்க முன்னே
தேவைக்கு மட்டும் நாடுவோம்
தேவை முடிந்த பின்னே
அதைவிட்டு ஓடுவோம்.....

## பேரழகி



இஸ்ரோ விஞ்ஞானிகள்
நொறுக்கிய ராக்கெட்
சந்திராயனை நிலவில்
தேடிக் கொண்டு
உள்ளனர்

அவர்கள் அறியவில்லை
நொறுங்கிய
என் இதயமும்
சந்திராயனும்
அந்த நிலவு மகளின்
காலடியில் விழுந்து
கிடக்கிறது என்று..

அவளைப் புகைப்படம்
எடுத்த கலைஞன்
வியந்து போனார்
போட்டோப் பிரதியில்
ரதியின் உருவம்
தெரிந்ததால்

அமெரிக்காவில் உலக அழகிப்
போட்டி நடந்து கொண்டிருந்தது
அந்நேரம்
இவளோ தன்னால் கலவரம்
ஏற்படாது உலக அமைதி
வேண்டி கோவிலில்
நடந்துகொண்டிருந்தாள்

இவளின் கீர்த்தி
கிடைக்கும் என்று
நினைத்தவர்களுக்கு எல்லாம்
தீயை மட்டுமே பரிசளித்து
மகிழ்ந்தாள்

இவள் தாவணி கட்டி
நடந்து வரும்
பூ ஹனி

வண்டுகள்
நுழையாது பூச்செண்டுகள்
நுழையும் மாங்கனி

இவள் பல் பல்லா அது
இல்லை இல்லை
ஆக்ஸ்போர்டை விட
மிகப்பெரிய பல்கலைக்கழகம்

கல்லூரியில் இவளைப்
பார்க்கும் இளைஞர்கள்
அனைவரும் கள் ஊறியே
செல்கின்றனர்.

வி.அபிவர்ணா

## நாகத்து நஞ்சு போல தீது மாற்றி வாழலாம்

நஞ்சும் இங்கே
மருந்தாகிப் போக
மற்றவர் தந்த துயரும்
நன்மை ஆகாதோ?

நெஞ்சில் இதயம்
சந்தம் மாறாது துடிக்க
துயரும் வந்து மாற்றும்
அந்த சந்தத்தை பாரும்

வாய்ப்பு வருமென
காத்துக் கிடக்கவோ?
வாய்ப்பை நாமே ஆக்கி
வாழ்ந்து போகலாமே!

நாகம் தந்த நஞ்சு
நாடி வழி ஓடி நமை
கொன்று போட்டு காலம்
மாறிப் போனது காணும்

நதுநசி



பயமும் கூடி வர
துடிப்பு வேகமும் கூடும்
மகிழ்ந்து நிற்கும்
வேளையும் இது நிகழும்

மாற்றம் நிகழ்வது
எப்போது அறியும்
மாறிட சூழலும் அஃது
அமைந்திட அறிவோம்

விதி வழி என ஒரு
மதி வழி சென்று மாறவோ?
அந்த விதி வழி நம்
சிந்தை வழி மாற்றலாம்

புற்று நோய் வந்து
நம்மைக் கொன்று போட
முன் கொன்ற நஞ்சு
வந்து காத்துக் கிடக்கிறதே!

தீதும் அவர் செய்து
கடந்து போக நாமும்
அழுது நொந்து போகவோ?
நாக நஞ்சாக மாற்றலாமே!

படைப்பு வழி கிடக்கு
வாழும் வழி நன்றே!
புத்தி கொண்டு எழுந்து
நடந்து போனால் போதும்.

தீம்புனலின் இரண்டாவது ஆண்டு சிறப்பிதழில் தீம்புனல் பற்றிய கவிதைகளை theempunal@gmail.com அல்லது 077 713 3542 என்ற வாட்ஸ் அப் இலக்கத்திற்கு அனுப்பலாம்

# கொரோனா பாதித்தவர்களுக்கு இரைப்பை, குடல் கோளாறு வாய்ப்பு





கொவிட் - 19 தொற்று பாதித்து மீண்டவர்களுக்கு, நீண்டகால இரைப்பை, குடல் கோளாறுகள் உருவாகும் அபாயமும் இரிட்டபுள் பவல் சிண்ட்ரோம் நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளதாக, உலகின் 14 நாடுகளில் எடுக்கப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

கொவிட் 19 தொற்றின் பரவல் குறைந்தாலும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பின்விளைவுகள், தாக்கங்கள் நீடித்து வருகின்றன. அந்த வரிசையில், கொவிட் பாதித்தவர்களுக்கு நீண்டகால இரைப்பை, குடல் கோளாறு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக, ஆய்வு கண்டறிந்துள்ளது.

**இரிட்டபுள் பவல் சிண்ட்ரோம்**

இரிட்டபுள் பவல் சிண்ட்ரோம் (IBS - Irritable bowel syndrome) என்பது, நீண்டநாள் பாதிக்கக்கூடிய ஒரு நோய். இது பெருங்குடலைப் பாதிக்கும் குடல் தொடர்பான பல கோளாறுகளை உருவாக்குகிறது. இதில், மாற்றப்பட்ட குடல் இயக்கம், வீக்கம், சாப்பிட்டவுடன் மலம் வெளியேற்றுவது மற்றும் வயிற்றுப் பிடிப்பு உள்ளிட்டவை அடங்கும்.

இந்த ஆராய்ச்சி 'ஹகட்' என்னும் இதழில் வெளியாகியுள்ளது. இந்த ஆராய்ச்சி முடிவானது, இரிட்டபுள் பவல் சிண்ட்ரோம் இப்போது மக்களிடையே அடிக்கடி ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது.

**எத்தகைய பாதிப்பு?**

"SARS-CoV-2 வைரஸ், இரைப்பைக் குழாயையும் பாதிக்கும் என்பது நாம் அறிந்தது. மேலும் கொவிட்- 19, இரிட்டபுள் பவல் சிண்ட்ரோம்க்கு வழிவகுக்கும் சாத்தியத்தை உறுதிப்படுத்துகிறது" என்று இந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட மருத்துவ ஆராய்ச்சியாளர் ஜியோவானி மராஸ்கோ தெரிவித்துள்ளார்.

இத்தாலி, பங்களாதேஷ், சைப்ரஸ், எகிப்து, இஸ்ரேல், இந்தியா, மாசிடோனியா, மலேசியா, ருமேனியா, ரஷ்ய கூட்டமைப்பு, செர்பியா, ஸ்பெயின், சுவீடன் மற்றும் துருக்கி ஆகிய 14 நாடுகளில் உள்ள 36 இடங்களில், கொவிட்டால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் 2,183 பேரை, தொடர்ந்து 12 மாதங்களுக்கு ஆய்வுக்காக மருத்துவர்கள் கண்காணித்து வந்தனர். மேலும், கொவிட்-19 பாதிக்கப்படாதவர்களோடு இவர் களை ஒப்பிட்டு பார்த்து, இந்த ஆய்வை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றனர்.

**ஆராய்ச்சி முடிவுகள்**

இந்த ஆய்வில், "கொவிட்டால் பாதிக்கப்படாதவர்களைவிட, தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில்தான் இரைப்பை, குடல் அறிகுறிகள் அதிகமாகக் காணப்பட்டன" என்று தெரிவித்துள்ளனர். இது மட்டுமன்றி ஆராய்ச்சியாளர்கள் மற்றோர் ஆய்வையும் மேற்கொண்டனர். அதாவது கொவிட் பாதிப்புக்கு உள்ளானவர்களில் ஆறு மாதத்தில் இருந்து 12 மாதம் வரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் மத்தியில் அதிகமாக மன அழுத்தம், சோர்வு, கவலை போன்றவை ஏற்பட்டுள்ளதை அந்த ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது. மேலும், நோய்த்தொற்று ஏற்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகும் சிறுகுடலில் கொரோனா வைரஸின் தடயங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

"நேச்சர் கம்யூனிகேஷன்ஸ்" இதழில் வெளியிடப்பட்ட மற்றொரு சமீபத்திய ஆய்வு, தொற்று ஏற்படாதவர்களோடு ஒப்பிடும்போது கொவிட் தொற்று ஏற்பட்டவர்களுக்கு கல்லீரல் பிரச்சினைகள், கடுமையான கணைய அழற்சி, எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி, அமில ரிஃப்ளக்ஸ் மற்றும் அல்சர் போன்ற இரைப்பை குடல் கோளாறுகள் உருவாகும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

உலக அளவில் கொவிட் 19 பரவுவதையும் குடல், மூளை தொடர்பான கோளாறுகள் அதிகரிப்பதையும் வைத்துப் பார்த்தால் இன்னும் அதிக அளவில் நோய்கள் கண்டறியப்படும் என மருத்துவ மற்றும் அறுவைசிகிச்சை அறிவியல் துறை பேராசிரியர் ஜியோவானி பார்பரா தெரிவித்துள்ளார். ■

# சருமஅழகை மீட்டெடுக்கும் ஸ்கின் ஃபாஸ்டிங்

சிலமணி நேரத்திற்கு எதுவும் சாப்பிடாமல் வயிற்றில் உள்ள செரிமான உறுப்புகளுக்கு ஓய்வு கொடுப்பதை, நாம் விரதம் என்று சொல்வோம். அதைப்போல, நமது உடலில் உள்ள முக்கிய உறுப்பான சருமத்தைப் பராமரிப்பதற்காக சில நாட்கள் சில மாதங்கள் வரை சருமத்தில் எந்த அழகுசாதனப் பொருட்களையும் பயன்படுத்தாமல் இருப்பதை சரும விரதம், அதாவது ஸ்கின் ஃபாஸ்டிங் என்று சொல்கிறோம்.



ஸ்கின் ஃபாஸ்டிங் என்பது நமது சருமத்தில் பயன்படுத்தும் அழகுசாதனப் பொருட்களை மெதுவாகக் குறைத்துக்கொண்டு சருமத்தின் இயல்பை மீண்டும் கொண்டுவரும் வரையில் எந்த அழகுசாதனப் பொருட்களையும் பயன்படுத்தாமல் இருப்பது.

பொதுவாகவே நமது சருமத்தில் இயற்கை சுழற்சி (Nature Cycle) நடந்து கொண்டுதான் இருக்கும். Stratum Corneum என்று சொல்லக்கூடிய நமது சருமத்தின் மேலுள்ள லேயரை இறந்த செல்கள் என்று சொல்வார்கள். இந்த செல்கள் சருமத்தில் இருந்து தானாகவே 28 நாட்களில் இறந்து மீண்டும் மறுசுழற்சி செய்து புது செல்களாக உருவாகும்.

சருமத்தின் இறந்த செல்களை அகற்றி, புது செல்களை உருவாக்குவதற்காகவே சீரம், கிறீம் போன்றவற்றைப் பயன்படுத்துகிறோம். இதனை 'ஸ்கின் ஆக்டிவ்ஸ்' என்று சொல்வோம். ஸ்கின் ஆக்டிவ்ஸ் என்பவை ரெட்டினால் (Retinol), ஆல்பா ஹைட்ராக்ஸி ஆசிட் (Alpha Hydroxy Acid) மற்றும் சாலிசிலிக் ஆசிட் (Salicylic Acid) போன்றவை. இவை அனைவரும் பொதுவாக உபயோகிப்பவை. இந்த மாதிரி தயாரிப்புகளை அதிகமாகப் பயன்படுத்துவதால் சருமத்தின் மேல் லேயர் முழுவதுமாக பாதிக்கப்படக்கூடும்.

சருமத்தைப் பாதுகாக்கும் இயற்கையான பேரியரானது, சருமத்தில் இருந்து அகன்றுவிட்டால் சருமம் சென்சிட்டிவ்வாகவோ, சிவந்தோ, எரிச்சலுடனோ மாறக்கூடும். ஸ்கின் ஆக்டிவ்ஸை பயன்படுத்துவதால் ஸ்கின் பேரியர் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதனால், ஸ்கின் ஆக்டிவ்ஸை சில நாட்கள் நிறுத்தி வைப்பது நல்லது. எனவே அனைத்து ஸ்கின் ஆக்டிவ் பொருட்களையும் உடனடியாக நிறுத்தாமல் அதிக வீரியமாக (Strong) இருக்கும் ரெட்டினால், DHA, PHA போன்றவற்றை நிறுத்தினாலே போதுமானதுதான்.

சருமத்துக்கு மாய்ஸ்ச்சரைசர், சன்ஸ்கிறீம் போன்றவை அவசியம். ஸ்கின் ஃபாஸ்ட்டிங் செய்யும்போது இவற்றை மட்டும் பயன்படுத்திக்கொண்டு, ஸ்கின் ஆக்டிவ்ஸை நிறுத்தி வைக்கலாம். முக்கியமாக, மருத்துவர்கள் பரிந்துரைத்த சருமப் பராமரிப்பு பொருட்களைப் பயன்படுத்தாமல் இருக்கவே கூடாது. அதிக முகப்பருக்கள் உள்ளவர்கள், எக்ஸிமா (eczema) போன்ற சருமப் பாதிப்புகள் உள்ளவர்கள் கட்டாயமாக அவற்றை நிறுத்தவே கூடாது. பிக்மென்ட்டேஷன் எனப்படும் மங்கு பிரச்சினை உள்ளவர்களும் மருத்துவர்கள் பரிந்துரைத்த கிறீம்களை நிறுத்தாமல் இருப்பதே நல்லது.

மருத்துவ ஆலோசனை பெற்று சருமத்திற்கு ஏற்ற மாதிரியான ஸ்கின் ஃபாஸ்டிங் எடுத்துக் கொள்ளலாம். ஸ்கின் ஃபாஸ்டிங்கை அனைவரும் செய்ய வேண்டும் என்று அவசியம் இல்லை.

சருமத்தில் எந்தப் பாதிப்பும் இல்லாதவர்கள், நல்ல தயாரிப்புகளைப் பயன்படுத்துபவர்களுக்கு ஸ்கின் ஃபாஸ்டிங் தேவையில்லை. ஏற்கெனவே பயன்படுத்தும் பொருட்களையே தொடர்ந்து உபயோகிக்கலாம். சருமத்தில் எந்த மாதிரியான அழகு சாதனத்தை உபயோகித்தாலும் சென்சிட்டிவ்வாக உணர்ந்தாலோ அல்லது எரிச்சலாக இருந்தாலோ அவர்கள் மருத்துவர்களிடம் ஆலோசனை பெற்று ஸ்கின் ஃபாஸ்டிங் மேற்கொள்ளலாம். தோராயமாக, இரண்டு அல்லது மூன்று வாரங்கள் அந்தத் தயாரிப்புகளை நிறுத்தி வைக்கலாம்.

ஸ்கின் ஃபாஸ்டிங்கின் போது மேக்கப் ரிமூவல் மிகவும் அவசியம். மைசெல்லர் வாட்டர் (Miceller Water) என்று சொல்லக்கூடிய மேக்கப் ரிமூவரைப் பயன்படுத்தி மேக்கப்பை அகற்றலாம். பிறகு, இரவு நேரங்களில் மாய்ஸ்ச்சரைசர் பயன்படுத்திக்கலாம். ஸ்கின் ஃபாஸ்டிங்கில் இருக்கும்போது ஃபேஷியல் செய்வதையும் தவிர்க்கலாம். ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிடுவது ஸ்கின் ஃபாஸ்டிங்கின் பலன்களை அதிகரிக்கும்.

தினமும் 2 முதல் 3 லீற்றர் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம். இதனால், சருமம் ஈரப்பதத்துடன் இருக்கும். இதுதவிர பழங்கள், காய்கறிகள் எடுத்துக் கொள்ளலாம். இது சருமத்தைப் புத்துணர்வோடு வைக்கும். கற்றாழை ஜெல், தயிர், கடலைமாவு, மஞ்சள், ஸ்கிரப் போன்றவற்றைப் பயன்படுத்துவதையும் ஸ்கின் ஃபாஸ்டிங் செய்யும்போது தவிர்க்கலாம். ■

# செயற்கை நுண்ணறிவு ஆபத்தானதா?



குமாரவேலு கணேசன்

செயற்கை நுண்ணறிவு என்னும் விடயம் கடந்த சில மாதங்களாகவே பட்டி தொட்டி யெல்லாம் பேசப்படும் சமாச்சாரமாக செயற்கை நுண்ணறிவு என்னும் விடயம் மாறி யுள்ளது. முக்கியமாக ChatGpt இன் வேகமான வளர்ச்சி எல்லோரையும் ஆச்சரியமூட்டும் வகை யில் உள்ள அதேவேளை ஒருவித பயத்தையும் கூடவே கொண்டுவருகின்றது என்று சொன்னால் மிகையாகாது. கடந்த வருட பிற்பகுதியில் அறி முகப்படுத்தப்பட்ட ChatGpt 3 யின் மேம்படுத்தப் பட்ட வடிவமான ChatGpt 4 தற்போது 20-25% அதிக திறனுடையதாகவும் பல புதிய திறமைகளுடனும் வெளிவந்துள்ளது. இந்த வேகத்தில் அவ்வாராய்ச்சி முன்னெடுக்கப்பட்டால் AI singularity என்று சொல் லப்படும் மனித நுண்ணறிவை மிஞ்சும் ஒருங்கு புள்ளியை மிகவிரைவில் அடைந்துவிடும் என்று பலரும் எதிர்வுகூறத் தொடங்கியுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு எப்படியெல்லாம் அழிவுக்கு பாவிக்கப்படமுடியும் என்பதை பெரும்பாலான திரைப்படங்களும் கதைகளும் சொல்கின்றன. அவையெல்லாம் தற்போதுள்ள அறிவியல் வளர்ச்சியில் சாத்தியமில்லாவிடினும் எதிர்காலத்தில் சாத்தியமாகும்போது அதுவே மனித இன அழிவிற்கு வழிகோலும் என்ற கருத்தை பலரும் முன்வைக்கின்றனர்.

இப்படியான அசுர வளர்ச்சி நல்லதல்ல என்றும் தற்போதைய வளர்ச்சியின் விளைவுகளை அறியும் வரை ஆராய்ச்சியை 6 மாதத்திற்கு தள்ளிவைக் குமாறு ஆராய்சிகளை ஆரம்பித்தவர்களில் முக்கியமானவரான எலோன் மஸ்க் உட்பட பல அறிஞர்கள் தற்போது வேண்டுகோள் விட்டுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு என்னும் கருதுகோள் கிட்டத்தட்ட 200 வருடங்களுக்கு முன்பாக வந்த "The Sandman" by E.T.A. Hoffmann (1816) என்னும் சிறுகதையுடன் ஆரம்பமாகின்றது என்று பலரும் குறிப்பிடுகின்றனர். ஆனால், ஆயிரம் வருடங்க ளுக்கு முன்பாக எழுதப்பட்ட மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் பிரம்மாஸ்திரம் என்னும் ஆயுதம் பற்றிய கதையை நாம் மறந்துவிடுகின்றோம்.



பிரம்மாஸ்திரம் என்பது செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் பேரழிவு ஆயுதமாக விரிக்கப்படு கிறதுடன் குறிப்பிட்ட நபர்களை அவர்களின் DNA அல்லது பிற குணாதிசயங்களின் அடிப்படை யில் குறிவைக்கும் என்று மேலும் சொல்லப் படுகின்றது. இலங்கையை தனது வசிப்பிடமாக பல தசாப்தங்களாகக் கொண்ட ஆர்தர் சி கிளார்க் என்னும் விஞ்ஞானியின் space odyssy (1968) என்னும் புனைகதை இந்தச் செயற்கை நுண்ணறிவு பற்றிய முக்கிய புனைகதைகளில் ஒன்றாகும். இக்கதை பின்பு திரைப்படமாகவும் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

100 வருடங்களுக்கு முன்பாக வெளிவந்த ஊமைப் படமான Metropolis (1927) என்னும் ஜேர்மனிய திரைப்படமே AI பற்றிய முதலாவது திரைப்படம் ஆகும். அண்மையில் வெளி வந்த AI திரைப்ப டங்களில் M3GAN, Ex.Machina, Blade Runner, Westworld, The Matrix, Wall-E என்பன குறிப்பிடத்தக்கவை.

ரோபோ படமும் அண்மையில் வெளி வந்த 'சிங்கிள் சங்கரும் சிமார்ட் போன் சிம்ரனும்' என்னும் திரைப்படமும் AI இல் வந்த தமிழ் திரைப்படங்களில் முக்கியமானவை.

செயற்கை நுண்ணறிவில் இயங்கும் ChatGPT என்னும் செயலியை மாணவர்கள் பலரும் வீட்டுப் பாடங்களைச் செய்ய பாவிக்கின்றனர் என்றும் இணையவழிப் பரீட்சைகளுக்கு விடையெழுத உபயோகிக்கின்றனர் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்து பல கல்வி நிறுவனங்கள் இணையவழிப் பரீட்சைகளை நிறுத்தியுள்ளன.

கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கான் அக்கடமியானது செயற்கை நுண்ணறிவை இணைத்து தானும் AI ஜோதியில் கலந்துள்ளது. தக்கன பிழைக்கும் என்ற டார்வினின் கோட்பாட்டை நாம் எல்லோரும் நினைவு கூர வேண்டிய தருணம் இது. நான் கான் அக்க டமியைப்பற்றி சிறிய அறிமுகத்துடன்தொடர் கின்றேன்.

கான் அக்கடமி என் பது அமெரிக்காவில் வசிக்கும் MIT பட்ட தாரியான சல்மான்கான் என்னும் கல்வியியலா ளரால் 2008 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற கல்வி அமைப்பாகும். யூடியூப் மற்றும் கான் அக்கடமியின் சொந்த வலைத்தளத்தில் ஹோஸ்ட் செய்யப் படும் வீடியோக்களின் வடிவத்தில் இந்த அமைப்பு குறுகிய காணொளிப்பாடங் களை உருவாக்குகிறது. கணிதம், அறிவியல், வரலாறு, பௌதிகவியல், இரசாயனவியல் உட்பட ஆரம்பக்கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை இப்பாடங்கள் உள்ளன. எவருக்கும், எங்கும் இலவச, உலகத் தரம் வாய்ந்த கல்வியை வழங்குவதே கான் அக்கடமியின் நோக்கமாகும். இது உலகெங் கிலும் உள்ள மில்லியன் கணக்கான கற்பவர்களால் பயன்படுத்தப்படுகிறது. அதன் உள்ளடக்கம் பல மொழிகளில் கிடைக்கிறது. ஆரம்பப் பள்ளி மாணவர்கள் முதல் தங்கள் திறன்களை மேம்ப டுத்த விரும்பும் பெரியவர்கள்வரை அனைத்து வயதினரும் இதில் கற்கின்றனர். ஆரம்பத்தில் பில் கேட்ஸ் வழங்கிய US$1M இந்த அமைப்பு வளர உதவினாலும் தற்போது தனிநபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் நன்கொடைகளால் இயங்கி வருகின்றது.

இலங்கையில் போர் முடிவடைந்த காலத்தில் யுனெஸ்கோவின் நிதியனுசரணையில் இந்தக் காணொளிகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப் பட்டன. பதிலுக்கு தமிழில் நான் உட்பட பலர் தன்னார்வமாக இந்த மொழிபெயர்ப்பில் ஈடு பட்டோம். ஆனால், இலங்கைத்தமிழுக்கும் இந்தி யத்தமிழுக்கும் இடையில் நிலவிய கலைச்சொற்களின் (Glossary) வேறுபாட்டினால் இம்முயற்சி பெருமள வில் தடைப்பட்டது. நாம் இரசாயனம் என்னும் போது அவர்கள் வேதியல் என்பார்கள். நாம் பௌதிகம் என்னும் போது அவர்கள் இயற்பியல் என்பார்கள். சக(+), சய(-) என்றால் அவர்களுக்கு என்னவென்றே தெரியாது, கூட்டல் கழித்தல் என்றே எல்லாவற்றையும் சொல்வார்கள். மல்லுக்கட்டிக் களைத்து நானும் இறுதியில் கைவிட்டேன். அக் காலப்பகுதியில் அமெரிக்காவில் வசித்து வந்த முனைவர் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் யாழ்ப் பாணத்தில் SERVE Learn என்னும் ஒரு இலாப நோக்கற்ற ஒரு நிறுவனத்தை நிறுவி இலங்கைப் பாடத்திட்டத்தை மிக நேர்த்தியாக காணொளி வடிவத்தில் கொண்டு வந்தார்.

கடந்த வாரம், கான் அக்கடமியானது சாட்ஜிபிடி 4 (ChatGPT4) ஐ இணைத்து கான்மிகோ (Khanmigo) என்னும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. சாட்ஜிபிடியைப் போலல்லாமல், கான்மிகோ மாணவர்களுக்கான பள்ளி வேலையைச் செய்யாது அவர்கள் கற்றுக்கொள்ள உதவும் ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் செயல்படும் என்று இலாப நோக்கற்ற கற்றல்வள கான் அக்கடமியின் நிறுவனர் சல்மான் கான் கூறுகிறார். இது ஆசிரியர்களுக்கு கற்பித்தலுக்கான ஆயத்தப்பாடங்களைச் செய்ய வும் மிகவும் உதவியாகவிருக்கின்றது.

எந்தவொரு தொழில்நுட்பத்திற்கும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் உள்ளன. அவற்றை முறையாக பாவிப்பதற்கான வழிவகைகளைச் செய் யாமல் விட்டு அவற்றை வெறுமனே எதிர்ப்பதனால் நாம் வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் உலகத்தில் பின்தங்கிவிட நேரிடலாம். "தக்கன பிழைக்கும்."

■

# இரு மலர்கள்

தொடர்கதை

மலர் 20

யாழ் சத்யா

ஒருநாள் இவள் ஸாமைப் பற்றிக் கூறுவதைக் கேட்ட சந்திரஹாசன் அருண்யாவைக் கூப்பிட்டு கண்டித்திருந்தார். கவியோடு ஸாமைப் பற்றிக் கதைத்து அவள் மனதைக் குழப்ப வேணாம் என்று. அதன் பிறகு அருணியும் அதை நிறுத்தி விட்டாள். அவளுக்கா சொல்வதற்கு வேறு கதைகள் இல்லை...

ஸாமின் மனதிலோ கவியைத் தவிர வேறு நினைப்பில்லை. அருணியின் கெட்டித்தனத்தைக் கண்டு எப்படியாவது அவளை அகிலஇலங்கை ரீதியில் முதலிடம் வரவைக்க வேண்டும் என்ற வெறியில் அவளைவிடக் கடுமையாக உழைத் தான். கடந்தகால வினாக்கள், எல்லா மாவட்டங்களிலும் வெளிவரும் மூன்று பாட பரீட்சை வினாத்தாள்கள் என்று எதையும் விட்டு வைக்காமல் கடும் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தான்.

அவன் இராப்பகலாக முழித்திருந்து சிறுகுறிப்புகள் அருணிக்காக எடுப்பதைக் கண்டு ஒருநாள் அந்தோனிகூட ஸாமைப் பார்த்து கேலியாக சிரித்தார்.

“அடே தம்பி... நீ சோதினை எடுக்கேக்க இப்பிடி படிச்சிருந்தாய் என்றால் நீ முதலாவதாக வந்திருப்பியே...”

“அப்பிடி இல்லைப்பா... இதே பாடங்களை நான் கம்பஸில மேலதிக விளக்கங்களோட படிக்கிறன். அதால இப்ப எனக்கு A/L(+2) பாடம் ஈஸியா இருக்கு. அருண்யா உண்மையிலேயே நல்ல கெட்டிக்காரிப்பா. ஆனா என்ன சரியான விளையாட்டுப் புத்தி... படிக்க கள்ளம்... அதுதான் நான் நோட்ஸ் எடுத்து குடுத்தால் கொஞ்சம் பஞ்சி இல்லாமல் படிப்பாள்.”

“சரி தம்பி. படிப்புக்கு செய்யிறது போற வழிக்கு நமக்கும் புண்ணியம்... உன்ர படிப்பையும் கவனிச்சுக் கொண்டால் சரி..”

“சரிப்பா... என்னைப் பற்றிக் கவலைப்படாதீங்கோ... நான் என்ர பாடமெல்லாம் அன்றன்றைக்கே படிச்சிடுற... அதால கிழமை நாட்கள் அருணிக்கு... இன்னும் ரெண்டு மாசம் தானேப்பா சோதினைக்கு கிடக்கு...”

“அக்காக்காரி மாதிரி அவளும் முதலாவதாக வந்தால் எங்கட ஊருக்குத்தானே பெருமை. ஒரு இனத்தையே தலைமை தாங்குற அறிவுள்ள மண்ணுடா இது... இவ்வளவு நாள் சண்டைகளுக்குப் பிறகு இப்பதான் பிள்ளையள் திரும்பப் படிக்கத் தொடங்கியிருக்குதுகள்...”

“ஓமப்பா... வீரத்தில மட்டுமில்ல.. படிப்பிலையும் நாங்க குறைஞ்ச ஆக்களில்லை என்று காட்டணும்...”

“ஆனா இந்த பாழ்படுவாங்கள் பிள்ளையளை படிக்க விடுறாங்களே... சரியா பிள்ளையள் படிக்க உக்காருற எட்டில இருந்து பத்து மணிக்கு கரண்டை நிப்பாட்டுறாங்கள். சோதினை கிட்ட வரவர தான் பாட்டுக் கோஷ்டியளைக் கொண்டு வந்து போடுறாங்கள்...

கரண்ட் ஊருக்க வந்த உடன எங்கட சனமும் முதல் வேலையா ரிவிதானே வாங்கிச்சுதுகள்... இவ்வளவு நாளும் காணாததை கண்ட பொடி பெட்டையள் எல்லாம் அதே தவமாக் கிடக்குதுகள்...

வெளி மாவட்டத்துக்காரனெல்லாம் அந்த இந்த சாமானுகள் என்று கொண்டு வந்து விக்க இதுகளும் என்ன ஏதென்று இல்லாமல் வாங்கி ஏமாறுதுகள்...

எல்லாத்தையும்விட கொடுமை எங்கட பொம்பிளைப் பிள்ளையளிட உடுப்புகள்... இறுக்கிப் பிடிச்ச குட்டைப் பாவாடையளைப் போட்டுக் கொண்டு காலை வளைச்சு வளைச்சு சைக்கிள் ஓடிப் போகுதுகள்... தம்பியவங்களிட கட்டுப்பாட்டில இருக்கேக்க உப்பிடி அரைகுறையாக திரியலாமே...

எல்லாம் கலிகாலம் முத்திப் போச்சு... நாகரிகம் என்ற பெயரில எங்கட கலாசாரத்தை மாத்தப் பாக்கிறாங்க.. எங்கட சனமும் விடயம் புரியாமல் காணாததைக் கண்டிட்டு நின்று ஆடுதுகள்...

“ஓமப்பா... இந்த பிள்ளையளிட உடுப்புகள் சரியான மோசம். போன சனிக்கிழமை பருத்தித்துறை டவுணுக்க உந்த டைட்ஸ்கேட் போட்டவையை சைக்கிளால இறங்கி வீடு வரைக்கும் உருட்டிக் கொண்டு போக சொல்லிட்டாங்களாம் அண்ணனவை...”

“அட ஓமப்பன்... சங்கத்தில பொடியள் சொன்னவங்கள்தான். யாழ்ப்பாணப் பக்கமும் ஒழுக்கமாக உடுப்பு போடேல்ல என்றால் கூப்பிட்டு வைச்சு கண்டிச்சு அனுப்புறாங்களாம்”

“எங்கட சனத்துக்கு அடைச்சு வைச்சு திறந்து விட்ட பீலிங். வெளிய வந்ததும் என்ன செய்யிற என்று தெரியாமல் தலைகால் புரியாமல் நின்று ஆடுதுகள்..”

“சமாதானப் பேச்சுவார்த்தை எப்பிடி முடியப் போகுதோ தெரியேல்ல... அதுக்குள்ள எல்லாக் கறுமத்தையும் அனுபவிச்சிடோணும் என்ற ஆசை எங்கடயளுக்கு... அதுகளையும் குறை சொல்லி என்ன செய்யிற... நாங்கள் ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்து கிடைச்ச சமாதானம் இது எண்டதை எங்கட சனங்கள் மறந்து போகுதுகளே...”

“மறந்த என்று சொல்லேலாதப்பா... முப்பது வருடமா சண்டை சண்டை என்று எங்கட சனம் என்ன நல்ல விடயத்தை அனுபவிச்சதுகள் சொல்லுங்கோ பாப்பம்... நீங்கள் கப்பலால கொழும்பு போய் கொண்டு வந்து தந்துதானே எங்களுக்கு அப்பிளே தெரியும்...

படம் பார்க்கிற என்றால் பள்ளிக்கூட லீவுக்கு வெய்ட் பண்ணிக் காத்திருந்து ஊரச்சனம் எல்லாம் ஒரு வீட்டில கூடி காசு சேர்த்து ரிவி, ஜெனரேட்டர் வாடகைக்கு எடுத்து ஒரே இரவில விடிய விடிய தொடர்ச்சியாக நாலோ, ஐந்தோ படம் பார்ப்பம்...

அப்பிடி வாழ்ந்திட்டு இப்ப கரண்ட் இரவில கொஞ்ச நேரம் என்றாலும் இருக்குது என்று, பொழுதுபோக்கு விடயங்களில கவனம் செலுத்துறதை பிழை சொல்லேலாதேப்பா...”

“அதை நான் பிழை சொல்லேல்ல தம்பி... ஆனால், கண்ட படங்களையும் பார்த்துதானே உந்த பிள்ளையள் உப்பிடி உடுப்புகள் போடுதுகள்...”

“படத்தைப் பார்த்து இல்லப்பா... விக்கிற கடைக்காரங்களைக் கேட்கணும் இதை நீங்கள்...”

“அவன் வருமானத்துக்கு எதையும் விப்பான். வாங்கிற எங்கடையளுக்கு அறிவு எங்க போச்சு...”

“ம்ம்... அதை விடுங்கப்பா... நாளைக்கு கம்பஸில பொங்கு தமிழ் செய்றாங்க... கவி பாடுறாள் போல...”

“ஏனடா அந்த பிள்ளை உதுகளில பாடுது... இப்ப சமாதானம் என்றாலும் நாளைக்கே நாட்டு நிலைமை எப்பிடி மாறும் என்று தெரியாது... தேவையில்லாமல் ஏன் வில்லங்கத்தை விலை குடுத்து வாங்குவான்?”

“என்னப்பா நீங்களே இப்பிடி சொல்லுறியள்..? பொங்கு தமிழ் என்ன சட்டவிரோத நிகழ்ச்சியே இல்லையே... பள்ளிக்கூட, கம்பஸ் பிள்ளைகள், பொதுசனம் எல்லாம் சேர்ந்து ஆர்மி பிடிச்சு வைச்சிருக்கிற எங்கட நிலங்களை திரும்ப தரச் சொல்லிக் கேட்கிறதை சர்வதேச சமூகத்திற்குக் காட்ட செய்யிற ஒரு எழுச்சி நிகழ்வுதானே... இதில பாடுறதில என்னப்பா வரப் போகுது..? அவள் எழுச்சிப் பாட்டுத்தான் பாடுறாளாம். பொங்கு தமிழில நாடகம் போடுற ஆக்களில எண்பது வீதமான ஆக்கள் பொம்பிளைப் பிள்ளையள் தானப்பா... கவி வல்வெட்டித்துறைப் பெட்டையப்பா... அவள் இரத்தத்திலேயே யாருக்கும் பயப்பிடாத வீரம் கலந்திருக்குப்பா...”

“இல்லையப்பு... நீங்கள் பொடியங்கள் பரவாயில்லை. நாளைக்கு பொம்பிளைப் பிள்ளையள்ட எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கவேணும் எல்லே... திரும்ப எப்ப சண்டை தொடங்குதோ தெரியேல்ல... அந்தப் பயத்திலதான் சொன்னனான். எதுக்கும் அந்த பிள்ளையை கவனமாப் பார்த்து கொள்ளப்பன்...”

“ஓமப்பா... எனக்கு அதைவிட வேற என்ன வேலை..?

அப்பாவும் மகனும் நாட்டு நடப்பை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை ஸாம் காப்பாற்றப் போவது கவின்யாவை இல்லை வேறோருவரை என்று.

ஸாம் காப்பாற்றப் போகும் அந்த நபர் யார்?

(மலரும்...)



சிறுகதை

# பிரபலம்

உடுவை எஸ்.தில்லைநடராசா

கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு முன்பாக உள்ள பூந்தோட்ட வீதியிலிருந்து முளைத்துச் செல்லும் கிளைவீதியொன்றின் வழியாகப் பலர் மத்தியான உச்சி வெயிலையும் பொருட்படுத்தாது சென்றனர். அவர்களில் அநேகமானவர்கள் அரசாங்க அலுவலகங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் வேலை பார்க்கும் உத்தியோகத்தவர்களாவர். வெயில் என்றால் வயிறு கேட்குமா?

அந்தச் சிறிய வீதியிலுள்ள கடையொன்றில் மத்தியானச் சாப்பாட்டுக்காக நடுத்தரக் குடும்பத் தலைவர்களும் புதிதாக வேலைக்குச் சேர்ந்தவர்களும் செல்வது வழக்கம். விலைவாசி உயர்ந்து விட்ட இந்த நாட்களிலும் சிக்கனச் செலவில் சிறந்த சாப்பாட்டை அங்கே பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை அநேகமானவர்களுக்கிருந்தது.

பூந்தோட்ட வீதி வழியாக ஒரு கட்டையனும் ஒரு நெட்டையனும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். கட்டையனின் பெயர் கந்தசாமி. நெட்டையனின் பெயர் ஜெறோம். ஒரே கந்தோரில் வேலை செய்வதால் இருவரும் நண்பர்கள்.

“மச்சன் இண்டைக்கு எங்கே சாப்பிடுவோம்” ஜெறோமைக் கேட்டான் கந்தசாமி.

“நீ எங்கை கூட்டிக்கொண்டு போறியோ, அங்கை வாறன்” என்றான் ஜெறோம்.

“கி.வா.ஜகந்நாதன் சொன்னமாதிரி “பைனான்சியல் புரொப்பிளமாக்கிடக்கு. அது பரவாயில்லை இண்டைக்கு இஞ்சை போவம்.” சொல்லிக்கொண்டே, பூந்தோட்ட வீதியிலிருந்து பிரிந்து செல்லும் சிறிய வீதி வழியாகத் திரும்புகின்றான் கந்தசாமி. அவனைத் தொடர்ந்து ஜெறோமும் அந்தச் சிறிய வீதியில் நடக்கின்றான்.



“ஐயா வாங்கோ” என்று கந்தசாமியையும் ஜெறோமையும் வரவேற்றார். சாப்பாட்டுக் கடை வாசலில் நின்ற கிழவர். இருவரும் கைகளைக் கழுவிக் கொண்டு சாப்பாட்டு மேசையின் முன்னால் அமர்ந்தார்கள்.

ஒருவர் இரண்டு இலைகளைப் போட்டுவிட்டு, தண்ணீர்ச் செம்பையும் கொண்டு வந்து வைத்தார். இன்னொருவர் பாத்திரத்திலிருந்த சோற்றை இலைகளில் கொட்டிக் கொண்டு “ஐயாவுக்கு என்ன கறி வைப்பம்?” என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு பதிலாக “ஆடு, இறால்,கோழி, நண்டு” என்று பல விடைகளை அடுக்கிக்கொண்டு போனார்.

“எங்களுக்கு அதொண்டும் வேண்டாம், மீன் கொண்டு வாங்கோ”

மீன் வேண்டுமென்றான் கந்தசாமி. ஆட்டிறைச்சி சாப்பிட ஆசை இருந்தாலும் அதற்கு அவனது பொருளாதாரநிலை இடம் கொடுக்காது. கடன் கிடன் வாங்கிச் சாப்பிட்டாலும் சம்பளத்தன்று கையைக் கடிக்கும். வீட்டுக்கு அனுப்பும் காசைத்தான் குறைத்து அனுப்ப வேண்டும். சோறு வைத்தவர், “மீனாம் மீன்” என்று கத்திவிட்டு மற்றவர்களுக்குச் சோறு வைக்கிறார். சாப்பிடுபவர்களின் விருப்பத்தைப் பொறுத்து “ஐயாவுக்கு ஆடு” “இஞ்சாலை ஒரு கோழி” கணவாய் கொண்டு வா” “தம்பி ஒரு முட்டை இப்படியான கட்டளைகளை அடிக்கடி பிறப்பித்துக்கொண்டிருந்தார்.

ஜெறோமுக்கும் கந்தசாமிக்கும் மரக்கறி வந்து விட்டது. மீன் குழம்பு வரச்சிறிது தாமதம். மீன் வரும் வரையில் காத்திருக்கத் தயாராக இல்லை இருவரும். கத்தரிக்காய்க் கறியுடன் சோற்றைப் பிசைந்து கொண்டே, “மைச்சான் இந்தக் கல்லுக் குவியலுக்கை இடைக்கிடை சோறும் கிடக்கு” என்று ஜெறோம் சொல்லியதும் கந்தசாமிக்குச் சிரிப்பு உண்டாகியது.

“பெரிய பகிடி விடுறாய். உன்ர சொந்தமோ? என்று கேட்ட கந்தசாமி சோற்றைக் குழைத்த போது,

“ஐயா கொஞ்சம் கையை எடுங்கோ, குழம்பு விட” என்றார் மீன் குழம்பு விநியோகஸ்தர்.

“மச்சான், ஒரே முள்ளாக்கிடக்கு இது என்ன மீன்..” என மீனின் இனத்தை ஜெறோமிடம் வினவினான் கந்தசாமி.

“கொய் மீன். முள்ளெண்டாலும் நல்ல ருசி” என்று சொல்லிவிட்டு பொரிச்ச மீனை ஒரு கடி கடித்தான் ஜெறோம்.

இரண்டாம் தரமும் சோறு வைத்தாகி விட்டது. கந்தசாமி ஹோர்லிக்ஸ் போத்தலோடு சொதியைத் தன் இலையில் ஊற்றியபோது, மீன் குழம்பு விநியோகஸ்தர் ஓடிவந்து, ஐயா கலக்கிப் போட்டு ஊத்துங்கோ. இல்லையெண்டால் பிறகு சாப்பிட வாற ஆக்கள் வெறும் தண்ணியைத்தான் ஊத்திச் சாப்பிட வேண்டிவரும்” என்று சொல்லிக் கொண்டே போத்தலின் வாயை உள்ளங்கையால் பொத்திக்கொண்டு போத்தலை ஒருதரம் ஆட்டிச் சொதியைக் கலக்கி வைத்தார்.

சாப்பிட்டு முடியப் போகும் தருணத்தில் கந்தசாமி தன் இலையிலிருந்த கொய்மீன் முட்களை ஜெறோமின் இலையில் தூக்கி வைத்தான். இப்படிச் செய்ததில் அவனுக்கொரு மகிழ்ச்சி. நண்பர்களோடு சாப்பிடும்போது பக்கத்திலிருப்பவரின் பப்படம், பொரியல் முதலியவற்றை ‘அபக்’ கென்று எடுத்துச் சாப்பிடுவது, பாயாசம், மோர் முதலியவற்றில் வாய் வைப்பது கந்தசாமிக்கு பிரியமான செயல்கள்.



கந்தசாமியின் செயல்கள் ஜெறோமுக்குக் கோபத்தை உண்டாக்கவில்லை. ஒரு சிரிப்பைத்தான் வரவழைத்தது. கந்தசாமியும் சிரித்துக் கொண்டே “என்ன விடயம் சிரிக்கிறாய் மச்சான்” என்று கேட்டான்.

“இல்லை மச்சான். நான் கனக்க மீன் திண்டனான் எண்டு பார்க்கிறவங்கள் நினைக்கட்டுமெண்டு நினைச்சுத்தான் உன்ர இலையிலிருந்த முள்ளை என்ர இலையில வைச்சனி. நீ நினைச்சதுக்கு மாறாக ஆரும் நினைச்சாங்களெண்டால்...” என்றிழுத்தான் ஜெறோம்.

“எப்படி நினைப்பினம்?” என்று கேட்டுவிட்டு இலையின் நாலா பக்கமும் சிதறிக்கிடந்த சோற்றுப் பருக்கைகள் கறி முதலியவற்றை வலக்கையால் ஒதுக்கி இலையின் நடுப்பகுதிக்குக் கொண்டு வந்தான் கந்தசாமி.

“நீ மீனோடை சேர்த்து முள்ளையும் திண்டிட்டாய் என்று எண்ணி, பாக்கிறவங்கள் சிரிப்பார்கள்” சொல்லிக் கொண்டே ஜெறோம் இலையைத் தூக்கிக்கொண்டு கை கழுவும் தொட்டிக்குப் போனான்.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு கந்தோருக்குச் சென்ற கந்தசாமி, பக்கத்திலிருந்த பாலசிங்கத்திடம் வாரப் பத்திரிகையொன்றை வாங்கினான்.

மின்சார விசிறியின் கீழிருந்து வாரப் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்ட ஆரம்பித்தான். பத்திரிகையிலுள்ள துணுக்குகளையும் சிறு விடயங்களையும் தான் முதலில் வாசிப்பது கந்தசாமியின் வழக்கம். துணுக்குகளை வாசித்துக்கொண்டு வரும்போது, பெர்னாட்சாவின் படத்தோடு பிரசுரிக்கப்பட்டிருந்த துணுக்கொண்றையும் வாசிக்க நேர்ந்தது.

“ஒரு நாள் பெர்னாட்சாவும் அவரது நண்பர் ஒருவரும் பேரீச்சம்பழம் சாப்பிட்டு விட்டதால், அவருடைய கோப்பையில் பழத்தின் கொட்டைகள் அதிகமாக இருந்தன.

நண்பர் அந்தக்கொட்டைகளைத் தூக்கி பெர்னாட்சா கொட்டைகள் போட்ட கோப்பையில்கொட்டினார். அப்போது பெர்னாட்சா சிரித்துக் கொண்டே “ நண்பரே! இந்தச் செய்கையால்தான் அதிகம் பேரீச்சம்பழம் சாப்பிட்டுவிட்டதாக யாரும் நினைக்கமாட்டார்கள்.

பதிலாக நீங்கள் பழத்தோடு கொட்டைகளையும் சாப்பிட்டு விட்டதாக எண்ணிக் கேலி செய்வார்கள்” என்றார்.

இந்தத் துணுக்கை வாசித்த கந்தசாமிக்கு சிரிப்புடன் சிந்தனையும் வந்தது.

“பெர்னாட்சா சொல்லிய துணுக்கு என்றபடியால் படத்தோடு பெரிய பகிடியாகப் பேப்பரிலை போட்டிருக்கிறாங்கள்.

ஜெறோமும் சாப்பிடும் போது சரியாக இப்படித்தானே ஒரு பகிடி விட்டவன். நான் அதை மறந்து போனேன்” என்று சிந்தனையில் மூழ்கினான் கந்தசாமி.

பெரியவர்களின் சிறிய திருவிளையாடல்களையும் பெரிதாக வெளியிடும் பத்திரிகைகளும் வானொலியும் சிறியவர்களின் பெரிய விடயங்களைக் கூடப் பிரபலப்படுத்தமாட்டார் என்பது கந்தசாமிக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

■

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

63

ரமணி

சினிமா வாய்ப்புத்தேடி சென்னைக்கு குடி பெயர்ந்த கண்ணதாசன், நடிகர், கவிஞர், கதாசிரியர், வசனகர்த்தா, தயாரிப்பாளர் போன்ற பல அவதாரங்களை எடுத்துள்ளார். என்றாலும் கவிஞர் என்பதே அவரது அடையாளமாகும். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, கவிஞர், போல் கவிஞர் என்றால் அது கண்ணதாசனை மட்டும்தான் குறிக்கும்.

சினிமாவால் கோடிகோடியாகச் சம்பாதித்த கவிஞர் சினிமாவில் முதலீடு செய்து பெருத்த நஷ்டமடைந்தார். விதி, வீம்பு, பழக்கவழக்கம் எல்லாம் கவிஞருக்கு எதிராக நின்றன.

திரைப்பட பாடலாசிரியராகக் கொடிகட்டிப் பறந்த கண்ணதாசன், சொந்தமாக படக் கம்பனி தொடங்கி படங்களைத் தயாரித்தார். சில படங்கள் தோல்வி அடைந்ததால், அவர் பெரும் சோதனைகளை அனுபவிக்க நேர்ந்தது.

கண்ணதாசன் தயாரித்த முதல்படம் 'மாலையிட்ட மங்கை'. பட உலகில் இருந்து விலகி இருந்த டி.ஆர். மகாலிங்கத்துக்கு, இப்படம் புதுவாழ்வு அளித்தது. நாடக நடிகையாக இருந்த மனோரம்மாவை, திரை உலகில் அறிமுகப்படுத்திய படம் இதுதான் முதல்பட வெற்றி அடுத்த படத்தைத் தயாரிக்கும் ஆசையைத் தூண்டியது. இரண்டாவதாகத் தயாரித்த 'சிவகங்கை சீமை' சிறந்த படம். நடிப்பு, வசனம், கதை அனைத்தும் மெச்சும்படியாக இருந்தன. ஆனால், வீரபாண்டிய கட்டபொம்மனுக்குப் போட்டியாக சிவகங்கைச் சீமையிலே வெளியானதால் தோல்வியடைந்தது.

கட்டபொம்மனுக்கும் சிவகங்கை சீமைக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. இரண்டு படங்களும் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக நடந்த போராட்டங்



களை சித்தரிப்பவை. 'சிவகங்கை சீமை' யில் எஸ்.எஸ்.ராஜேந்திரன், பி.எஸ்.வீரப்பா, டி.கே.பகவதி, வளையாபதி முத்துகிருஷ்ணன், குமாரி கமலா, எஸ்.வரலட்சுமி, எம்.என்.ராஜம் ஆகியோர் நடித்தனர். திரைக்கதை-வசனத்தை கண்ணதாசன் எழுத, கே.சங்கர் டைரக்ட் செய்தார். இது, கறுப்பு-வெள்ளைப் படம். படம் தயாரானதும், அதை ஏ.வி.மெய்யப்ப செட்டியாருக்கு கண்ணதாசன் போட்டுக் காட்டினார். படத்தைப் பார்த்த ஏ.வி.எம், 'படம் நன்றாக வந்திருக்கிறது. ஆனால், கட்டபொம்மன் படத்துடன் மோதவேண்டாம். அந்தப் படம் வெளியாகி, இரண்டு மாதங்களுக்குப் பிறகு வெளியிடுங்கள்' என்று யோசனை தெரிவித்தார். இதை கண்ணதாசன் கேட்கவில்லை. கட்டபொம்மனும், சிவகங்கை சீமையும் ஒரே சமயத்தில் (1959 மே) வெளிவந்தன.

சிவாஜி கணேசன், பத்மினி, ஜெமினி கணேசன், எஸ்.வரலட்சுமி, ஜாவர் சீதாராமன் ஆகியோர் நடிக்க 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்தை பத்மினி பிக்சர்ஸ் தயாரித்தது. பி.ஆர்.பந்துலு டைரக்ட் செய்த இந்தப் படம், தமிழின் முதல் டெக்னிக் கலர் படம். சிவாஜியின் உணர்ச்சிகரமான நடிப்பு வீரபாண்டிய கட்ட பொம்மனை உச்சத்துக்குக் கொண்டு சென்றது. சிவாஜிகணேசனின் அற்புத நடிப்பு, பிரமாண்டமான சண்டைக் காட்சிகள், கண்ணைக் கவரும் வண்ணம் இவற்றால், கட்டபொம்மன் ஓகோ என்று ஓடியது. ஆனால், சிவகங்கை சீமை தரமானதாக இருந்தும் கட்டபொம்மனை எதிர்த்து நிற்க முடியாமல் தோல்வி அடைந்தது.

'சிவகங்கைச் சீமை' படத்தால் தொண்ணூறாயிரம்ரூபா நஷ்டமடைந்தார். அதை ஒரு வருடத்திற்குள் தீர்த்து விட்டு நிம்மதியாக இருந்திருக்கலாம். ஆனால், வலிமையான விதி கண்ணதாசனைப் பற்றியது. மேலும் மேலும் இழுத்தது. 'கவலை இல்லாத மனிதன்' என்றொரு படத்தை ஆரம்பித்த கவிஞர் கவலையில் இருந்து மீள முடியாமல் தவித்தார். கண்ணதாசனின் நிலமையை அறிந்த இயக்குநர் பீம்சிங் உதவி செய்ய முன்வந்தார். சிவாஜி நடிக்க ஒரு படத்தை இயக்க ஒப்புக்கொண்டார். சிவாஜி பிம்சிங் இணைந்த படங்கள் வெற்றி பெற்ற காலம் அது. விதி வலியது. கண்ணதாசன் கேட்கவில்லை. சந்திரபாபுவை கதாநாயகனாக்கி கவலை இல்லாத மனிதனை எடுத்தார். சிவாஜியைவிட அதிக சம்பளத்தைக் கேட்டார் சந்திரபாபு. கண்ணதாசன் ஒப்புக்கொண்டார். சந்திரபாபுவின் ஏமாற்று வேலைகள் பற்றி பலரும் கண்ணதாசனுக்கு எடுத்துக் கூறினார்கள். நண்பன் கைவிடமாட்டான் என கண்ணதாசன் நம்பினார்.

நன்றி இல்லாத ஊழியர்கள், பொறுப்பில்லாத பார்ட்னர், எல்லோருமாகச் சேர்ந்து பணத்தைப் பாழாக்கினார்கள். சந்திரபாபு தன் வழக்கப்படி, பேசிய தொகைக்கு மேல் கேட்டுக்கொண்டும், வாங்கிக்கொண்டும் இருந்தார். அந்தத் துயரங்களையும் அவமானங்களையும் சொல்லாமலிருக்க முடியவில்லை. நான்கு நாட்களில் எடுக்க வேண்டிய 'கிளைமாக்ஸ்' கட்டத்தை, நான்கு மணி நேரத்தில் எடுத்தார்கள். முழுமுதற்காரணம் சந்திரபாபு.

தான் அனுபவித்த துயரங்களை கண்ணதாசன் சுயசரிதையில் சொல்லியுள்ளார். அன்று காலை ஏழு மணிக்கு 'ஷூட்டிங்'. எடுக்கப்பட வேண்டியதோ 'கிளைமாக்ஸ்' கட்டம். டி.எஸ்.பாலையா, எம்.ஆர்.ராதா, ராஜசுலோசனா அத்தனை பேரும் 'செட்'டிற்கு வந்துவிட்டார்கள். பேசிய தொகைக்கு மேல் இருபதாயிரம் அதிகமாகப் பெற்றுக் கொண்டிருந்தும் கூட, சந்திரபாபு சரியாக வரமாட்டார் என்பதாலே அதிகாலையில் குளிக்கக்கூட இல்லாமல் நானே அவர் வீட்டிற்குப் போனேன். அவர் தூங்குவதாகச் சொன்னார்கள். நான் வெளியில் சோபாவில் இரண்டு மணிநேரம் உட்கார்ந்திருந்தேன். பொறுத்துப் பொறுத்து பார்த்துவிட்டு, பையனைக் கூப்பிட்டு, 'சந்திரபாபு எழுந்துவிட்டாரா?' என்று கேட்டேன்.

'அவர் பின்பக்கமாக, அப்பொழுதே போய்விட்டாரே' என்றான் பையன். இந்த அவமானம் மட்டுமல்ல. படம் என்ன ஆகுமோ என்ற பயம், கடன்காரர்களுக்கு என்ன சொல்லப் போகிறோம் என்ற கவலை எல்லாம் என்னைச் சூழ்ந்து கொண்டன. பிறகு, நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களிடம் சொல்லி அழுதேன். அவரும், அண்ணன் டி.எஸ்.பாலையா அவர்களும் காரை எடுத்துக்கொண்டு, சந்திரபாபுவைத் தேடி அலைந்ததை என்னால் மறக்க முடியாது. 1960 செப்ரெம்பர் மாதம் படம் வெளியான போது என்னைக் கடன்காரனாக நிறுத்தின.

அன்றைய கணக்குப்படி ஐந்து இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் கடன். பின்நாளில் வட்டி ஏறி, ஏழு இலட்சமாகப் பரிணமித்தது. தோல்விகளையும் துயரங்களையும் தாங்கிக் கொள்வதில் எனக்குப் பழக்கம் உண்டு சிறுவயதில் இருந்தே அந்த அனுபவம் உண்டு. ஆகவே, 'கவலை இல்லாத மனிதன்' படத்தின் தோல்வி என்னை விரக்தி அடையச் செய்யவில்லை. ஆனால், அது உருவாக்கிக் கொடுத்த ஆறு இலட்ச ரூபாய்க் கடன், அடிக்கடி என்னை பயமுறுத்திக் கொண்டிருந்தது. அப்போது என் கம்பனியின் பெயரில் பதினொரு கார்கள் இருந்தன. ஏழு 'ஹபியட்' கார்கள், இரண்டு 'ஹிந்துஸ்தான்' கார்கள், ஒரு 'பிளைமவுத்' கார், ஒரு 'ஸ்டேஷன் வேகன்' கம்பனிக்கு எதிரே அந்தக் கார்களை நிறுத்தி வைத்தால் கம்பனியில் ஏதோ விழா நடப்பது போல் தோன்றும். அத்தனை கார்களிலும் ஒரே ஒரு பியட் காரை மட்டும் வைத்துக்கொண்டு, பாக்கி அனைத்தையும் கார் மீது பணம் கொடுத்தவர்களின் வீடுகளில் கொண்டு போய் விட்டு விட்டேன்.

சில கார்களின் மீது இரண்டாயிரம், மூவாயிரம்தான்



பாக்கி இருந்தது என்றாலும், அந்தக் கார்களை விற்று மீதிப்பணத்தைக் கொடுக்கும்படி அவர்களிடமே சொல்லிவிட்டு வந்துவிட்டேன். யார் கொடுப்பார்கள்? அப்படி நாணயமானவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஏதோ இரண்டொருவர் இரக்கப்பட்டுக் கொஞ்சத் தொகை கொடுத்தார்கள் மற்ற அனைத்துமே போய்விட்டன. கம்பனி வீட்டைக் காலி செய்து, இருந்த சாமான்களை எல்லாம் அள்ளிக் கொண்டு வந்து வீட்டிலே போட்டேன்.



சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் பெறக்கூடிய ஆடையணிமணி உபகரணங்களை எல்லாம் எட்டாயிரம் ரூபாய்க்கு விற்றுவிட்டேன். வேலையாட்களையெல்லாம் நிறுத்திவிட்டேன். படம் எடுப்பதை நிறுத்திவிட்டேன், கம்பனியை மூடிவிட்டேன் என்றதும் சுமார் முப்பது கடன்காரர்கள் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்கள்.

மூன்று மாதங்களுக்குள்ளாக 34 வழக்குகள் கோர்ட்டுக்கு வந்துவிட்டன. நேரே வழக்கறிஞர் வி.பி.ராமனிடம் போனேன். 'ஒரு வருடத்துக்குள் பணம் சம்பாதித்து கடனை கட்ட முடியுமா?' என்று கேட்டார் அவர். 'முடியும்' என்றேன். ஒரு பக்கம் கடன் வந்தால், ஒரு பக்கம் வரவு வரவேண்டும் அல்லவா? அந்தப் பக்கம் அடி விழுந்தபோது, இந்தப்பக்கம் ஏராளமான படங்களுக்கு சந்தர்ப்பம் வந்தது. நோட்டெழுதி வாங்கிய கடனுக்கு, பாட்டெழுதி வாங்கிய பணம் போகத் தொடங்கிற்று! இவ்வாறு கண்ணதாசன் குறிப்பிட்டுள்ளார்.

'கவலை இல்லாத மனிதன்' படத்துக்குப்பிறகு, சென்னை மாநகராட்சி கவுன்சிலராக இருந்த கே.முருகேசனுடன் கூட்டுச் சேர்ந்து, 'வானம்பாடி' என்ற படத்தை கண்ணதாசன் எடுத்தார். இந்தப் படம் வெற்றிகரமாக ஓடியது.

கண்ணதாசனுடைய கடனில் ஒரு பகுதியை அடைக்க இப்படம் உதவியது. பின்னர், கோவை செழியனுடன் சேர்ந்து 'சுமை தாங்கி' என்ற படத்தைத் தயாரித்தார்.

இந்தப்படமும் இலாபம் சம்பாதித்துக் கொடுத்தது. 'மொத்தத்தில் அப்போதெல்லாம் ஏராளமாகப் பணம் புரண்டு விளையாடிற்றே தவிர, கையிலே தங்கவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார் கண்ணதாசன். 1962 இல் இந்தியா மீது சீனா படையெடுத்தது. அதை அடிப்படையாக வைத்து கண்ணதாசன் கதை-வசனம் எழுதிய 'இரத்தத் திலகம்' என்ற படத்தை பஞ்சு அருணாசலம் தயாரித்தார். சிவாஜி கணேசனும் சாவித்திரியும் நடித்த இப்படம் வெற்றிகரமாக ஓடியது.

இப்படத்தில் ஒரு காட்சியில், 'பழைய மாணவர் முத்தையா'வாக கண்ணதாசன் தோன்றி, 'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு ஒரு கோலமயில் என் துணையிருப்பு' என்று பாடுவார். 1964 இல் மீண்டும் சொந்தப் படத்தயாரிப்பில் ஈடுபட்டார், கண்ணதாசன்! படத்தின் பெயர் 'கறுப்பு பணம்' பாலாஜி, டி.எஸ்.பாலையா, கே.ஆர்.விஜயா ஆகியோர் நடித்த இப்படத்தில் முக்கிய வேடத்தில் கண்ணதாசனே நடித்தார். படம் சுமாராகத்தான் ஓடியது.

'கவலை இல்லாத மனிதன்' அனுபவத்திற்குப் பிறகும் சொந்தப்படம் தயாரித்தது பற்றி கண்ணதாசன் பின்னர் எழுதும்போது, 'ஒரு தவறு செய்துவிட்டு, மீண்டும் ஒரு தவறு செய்துவிட்டேன்' எனக் குறிப்பிட்டார். ■

இலங்கை பொருளாதார ரீதியிலான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அல்லாமல் இதற்கு முன்னரான காலத்தில்கூட விவசாயத்துறையில் பல பிரச்சினைகள் இருந்துள்ளன.

இந்தப் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி அதற்கான தீர்வுகளை உருவாக்கி தொழில்முயற்சி யாக்க வேண்டியதும் அந்த தொழில் முயற்சிகளுக்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டியதும் அவசியமாகிறது.

உலகளவில் வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாயத்துறையில் தனியார் முதலீடுகள், தனிநபர் முயற்சிகளே அதிகளவில் உள்ளன இதனாலேயே விவசாயத்துறையும் வளர்ந்த நாடுகளில் வெற்றியடைந்துள்ளது. மேலும் வளர்ந்த நாடுகளில் விவசாயத் துறையில் உள்ள பிரச்சினைகளை அடையாளப் படுத்தி அதற்கான விஞ்ஞான ரீதியிலான தீர்வு காணும் ஆராய்ச்சிகள் ஏராளம் நடைபெற்று உள்ளது தொடர்ந்தும் ஆராய்ச்சிகள் செய்யப்ப

விமலதாஸ்




விவசாய பீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இலங்கையில் வடபகுதியில் வருடாந்தம் 80 இற்கும் மேற்பட்ட விவசாயப் பட்டதாரிகளை உருவாக்கும் உயர் கல்வி நிலையம் இதுவாகும். வரலாற்று ரீதியாக கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாண திருநெல்வேலி பகுதியில் இயங்கி தற்போது மீண்டும் கிளிநொச்சியில்

விவசாயபீடத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வளாகம் பண்ணை என்பன நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

**யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய மாணவர் ஒன்றியம்**

இறுதியாண்டு மாணவர்களின் இணைவுடன் இயங்கும் மாணவர் ஒன்றியம் கடந்த காலத்தில் இயங்கிய அக்ரிடெக் இலும் பெரும்பங்காற்றியிருந்தனர். எதிர்கால சமூகத்திற்கான விவசாயத்துறையின் எதிர்கால பங்காளிகளாக இருப்பதோடு வருடாந்திரம் பசுந்தோகை எனும் விவசாயத்துறை சார்ந்த புத்தகத்தையும் வெளியிட்டு வருகின்றனர்.

**நிகழ்வின் ஏனைய அனுசரணையாளர்கள்**

1.தீம்புனல்- இணையத்தளம் மற்றும் மின்னிதழ் மூலம் தமிழ் மக்களிடம் தகவல் பரிமாற்றத்தினை வழங்கும் அமைப்பாகும்

2. TAMIL ECONOMIC FORUM - தமிழ் மக்களது பொருளாதார விருத்திக்கான செயற்றிட்டங்களை தமிழர் நிலப்பரப்பில் காத்திரமான செயற்றிட்டங்களுடன் செயற்படும் புலம்பெயர் மற்றும் புலத்திலுள்ள தமிழர்களது அமைப்பு

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தில் AGRITECH 102




டுகிறது. இவை தங்களது, உற்பத்திச் செலவை குறைத்தும் அதிக வருமானத்தை ஈட்டும் வழிவகைகளை தேடியதன் மூலம் விவசாய அபிவிருத்தியை அடைந்துள்ளன.

நமது நாட்டிலும் நமது பிராந்தியத்திலும் எமது விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் விவசாயத் துறை சார்ந்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி அதனை ஆராய்ச்சிக்குட்படுத்தி அதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் எண்ணத்தில் யாழ்ப்பாண விவசாய பீடத்தின் பட்டதாரிகள் குழு (AGRITASK FORCE) Agritech எனும் நிகழ்வினை நடத்தி வருகிறது.

**AGRITECH**

அக்ரிடெக் என்பது தொடர்ச்சியாக இடம் பெறும் நிகழ்வாகும். 2019 ஆண்டு முதன் முதலாக கிளிநொச்சி அறிவியல் நகர் விவசாய பீடத்தில் நடைபெற்றது பின்னர் 2020, 2021, 2022 ஆண்டுகளில் நேரடியான நிகழ்வாக நடத்தப்படாத போதும் நிகழ்நிலையில் விவசாயத்துறை சார்ந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கி பயணித்தது.

**AGRITECH 102**

அக்ரிடெக் தொடர் வரிசையில் இரண்டாவது நிகழ்வு மார்ச் மாதம் 23 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடம் அறிவியல் நகர் கிளிநொச்சியின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்விற்கான ஏற்பாடுகளை AGRITASK FORCE குழு, விவசாய பீடம்- யாழ்ப்பாண பல்கலைக்கழகம், AHEAD, UBL CELL, JAICA, விவசாய பீட மாணவர் ஒன்றியம் ஆகியோர் இணைந்து ஒழுங்கமைத்தனர்.

**Agri Taskforce**

Agri Task force என்பது விவசாயத்துறை சார்ந்து இயங்கும் சுயாதீனமான குழு ஆகும். இந்தக் குழுவில் ஆரம்பத்தில் 4 விவசாய பட்டதாரிகள் இணைந்து கொண்டனர். தற்போது 12 பேர் முழுநேரமாகவும் பகுதி நேரமாகவும் இணைந்து செயல்படுகிறார்கள்.

விசாலமான ஆய்வுகூட வசதிகளுடன் இயங்கி வருகிறது.

**AHEAD**

உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் AHEAD இந்த நிகழ்வின் பிரதான அனுசரணையாளர்களில் ஒரு அங்கமாகும் AHEAD என்பது உலக வங்கியின் நிதியுதவியுடன் கூடிய உயர்கல்வித் துறைக்கு ஆதரவளிக்கும் இலங்கை அரசாங்க நடவடிக்கையாகும்.

கிளிநொச்சி அறிவியல் நகர் விவசாய பீடத்தில் பல செயற்றிட்டங்களை இவர்கள் முன்னெடுத்து வருகின்றனர், கடந்த காலங்களில் விவசாய பீடத்திலிருந்து விவசாயிகளுக்கு பல பயிற்சி நெறிகளை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**UBL**

பல்கலைக்கழகம் மற்றும் பொது/தனியார் நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை நிலையான வளர்ச்சியை பொருளாதாரத்தில் அடைய உதவும் நோக்குடன் இயங்கும் அமைப்பாகும் கடந்த ஆண்டு விவசாயபீட மாணவர் மற்றும் விரிவுரையாளர் இணைந்து உருவாக்கிய வில்வம் பழ யோக்கட் வர்த்தகரீதியில் உருவாக்கவும் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பையும் இதனது காப்புரிமையையும் பெற உதவியது.

**JAICA**

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் என்பது ஜப்பான் அரசாங்கத்திற்கான உத்தியோகபூர்வ மேம்பாட்டு உதவியின் பெரும்பகுதியை வழங்கும் ஜப்பான் அரசாங்க நிறுவனம் ஆகும். இது வளரும் நாடுகளில் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு உதவுதல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் பணியாற்றுகிறது. இவ்நிறுவனத்தின் 2.2 பில்லியன் நிதியுடன்

3. சிறகுகள் அமையம் - தமிழ் மக்களது கல்வி மற்றும் தனிநபர் மேம்பாட்டிற்காக பல குழுக்களுடன் இணைந்தும் தனித்தும் செயற்படும் இளைஞர்களது அமைப்பு

4. புதிய வெளிச்சம்- இயற்கை விவசாயத்தினை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக பல ஆக்கபூர்வமான நிகழ்வுகள் கருத்தமர்வுகளை மக்களுக்கு வழங்கி வரும் அமைப்பு

5. இந்திரா குழுமம் வடமாகாண விவசாயத்துறையில் விவசாய ஆலோசனை கருத்து உருவாக்கம் விவசாய விரிவாக்கம் பயிற்சிகள் விவசாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்திவரும் அமைப்பாகும். இந்த அமைப்பின் தலைவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது

6. www.agricultureinformation.lk இணையத்தளம் மூலம் விவசாய விரிவாக்கத்தினை மேற்கொள்ளும் அமைப்பாகும். இந்த அமைப்பின் தலைவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது

7. Thaayin care நீடித்து நிலைபெறக்கூடிய மாற்று சக்திவளங்களை விவசாயத்துறையில் பயன்படுத்துவதற்கான திட்டங்களுடன் இயங்கும் அமைப்பாகும், இந்த அமைப்பின் தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது




8. தமிழர் பொருமிண்யம் - தமிழ் மக்களது பொருளாதார முன்னேற்றத்தினை இலக்காகக் கொண்டு வாரந்தோறும் வெளிவரும் மின்னிதழ்

**Agritech 102 நிகழ்வில்**

இந்தாண்டு இடம்பெற்ற அக்ரிடெக் நிகழ்வில் விவசாயபீடம் இயந்திரவியல்பீடம் மற்றும் தொழில்நுட்ப பீட விரிவுரையாளர்கள் மாணவர்களுடன் விவசாயத்துறைசார்ந்து இயங்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் பங்கேற்றனர். நிகழ்வில்

**(18 ஆம் பக்கம் பார்க்க...)**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக...

(17 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

வருகை தந்தவர்கள் தங்களது விபரங்களைப் பதிவு செய்து கொண்டதோடு ஏற்பாட்டாளர்களால் வரவேற்கப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டது. விவசாய பீடத்திற்கான ubl இன் ஒருங்கிணைப்பாளர் Dr.N.Kannan வரவேற்புரை ஆற்றினார். அக்ரிடெக் 102 நிகழ்வு பற்றிய அறிமுகம் அக்ரிடாஸ் போஸ் சார்பில் வி.விமலதாஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

இதன்பின்னர் விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.வசந்தரூபா அவர்கள் உரையாற்றினார் உரையில் விவசாயத்துறையில் உள்ள இடர்பாடுகளை எதிர்கால விவசாயத்துறை சார்ந்து இயங்க இருக்கும் மாணவர்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை இந்த நிகழ்வு உருவாக்கியுள்ளது எனவும் இந்த இடர்பாடுகள் மற்றும் சவால்களை ஆராய்ந்து பெறுமதியான வெளியீடுகளை சமூகத்திற்கு வழங்குவதோடு புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு மாணவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களை வரவேற்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீடமானது, விவசாயத்துறை சார்ந்து இயங்கும் விவசாயிகள், அரச -அரச சார்பற்ற நிறுவனங்கள் குழுக்களுடன் இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்பையும் குறித்த நிறுவனங்கள் விவசாய பீடத்துடன் இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்பையும் அக்ரிடொக் நிகழ்வு வழங்கியுள்ளது. மேலும் இந்த நிகழ்வினை JAICA உடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த அனைவருக்கும் நன்றிகள் என தெரிவித்தார்.

தமது நிறுவனம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தில் 2.2 பில்லியன் பெறுமதியில் அமைத்துக் கொடுத்த முதலீட்டின் வெளியீடுகளை பலன்களைப் பெறக்கூடிய வாய்பை உருவாக்கின்ற மற்றும் அதற்கான ஒரு நம்பிக்கை தரும் ஆரம்பப் புள்ளியாக இந்த நிகழ்வினை நாம் பார்க்கின்றோம் எனத் தெரிவித்தான்

இந்த நிகழ்வில் விவசாய சமூகத்தில் இருந்து முன்மொழியப்பட்ட விடயங்கள் தொழில் முயற்சிகளுக்கு JAICA நிறுவனம் நிதியுதவியளிக்க முடியும் எனவும் Agritech இனது அடுத்தகட்ட நகர்வுகளுக்கும் இனிவரும் வருடாந்த நிகழ்வுகளுக்கும் அனுசரணை வழங்குவோம் எனவும் தெரிவித்துக்கொண்டார்.

இந்த Agritech நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்த விவசாய பீடத்தினையும் பிற ஏற்பாட்டுக் குழுவையும் வெகுவாக பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

நிகழ்வில் நடராஜா ஸ்ரீகந்தராஜா பங்கேற்று விவசாயத்துறை குறிப்பாக, வட மாகாண விவசாயத்துறை பற்றியும் சேதன விவசாயம் பற்றியும் தனது கருத்துகளை முன்வைத்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயந்திரவியல் பீடத்தின் பீடாதிபதி பேசுகையில் Agritech நிகழ்வு ஏற்பாட்டுக்கு வாழ்த்துகள் தெரிவித்ததோடு கிளிநொச்சி மற்றும் வடமாகாணம் சார்ந்து இயங்கும் சில சிறு முயற்சியாண்மையாளர்களை தனிப்பட்ட முறையில் தான் அறிவேன் எனவும் இவர்களுக்கான விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை அடையாளப்படுத்தி உள்ளதாகவும் விவசாயிகள் தொழில்நுடங்களைப் பெறுவதிலும் முதலீடுகளைப் பெறுவதிலும் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் அறுவடையோடு மாத்திரமே விவசாயிகள் மட்டுப்படுத்தப்படுகிறார்கள் எனவும் அறுவடைக்குப் பின்னரான தொழில் வாய்ப்புக்கள் நுட்பங்களுக்கான வழிகாட்டல்குறைவாக இருப்பதாகவும் தெரிவித்து இருந்தார்.







இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு உரிய நுட்பங்களை வழங்குவதோடு தொழில்துறையில் உள்ள இடர்பாடுகளை ஆராய்சிகளை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்ய முடியும் இதற்கான முயற்சியாக ஆரம்பிக்கப்பட்டு உள்ள Agritech இல் பங்குபற்றுபவராகவும் இயன்றளவு பங்களிப்பை வழங்க முடியும் எனவும் தெரிவித்துக் கொண்டார்.

தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி பேசும் போது Agritech 102 இன் முக்கியத்துவம் பற்றியும் இந்த நிகழ்வு நடத்த வேண்டியதன் முக்கியத்துவம் எதிர்பார்ப்பு பற்றி கூறியிருந்தார். மற்றும் நிகழ்வை நடத்தும் ஏற்பாட்டாளர்கள் பற்றிய தகவலை முறையாக வழங்குமாறும் கேட்டுக்கொண்டார் பீடாதிபதிகளது உரைக்குப் பின்னர் சிறு தேநீர் இடைவேளைக்காக அனைவரும் அழைக்கப்பட்டு சிற்றுண்டி வழங்கப்பட்டது.




சிற்றுண்டி இடைவேளைக்குப்பின்னர் விவசாயபீடத்தின் ஆறு துறைகளின் தலைவர்கள் தங்களது துறையில் விவசாய பீடத்தில் ஏற்கெனவே செய்த ஆராய்ச்சிகள், செய்யக்கூடிய ஆராய்ச்சிகள், ஆராய்ச்சி செய்வதற்கு காணப்படும் வளங்கள் பற்றி சிறு உரையாற்றினார்கள் இடைவேளைக்குப் பின்னர் விவசாயபீடத்தின் ஆறு துறைகளின் தலைவர்கள் தங்களது துறையில் விவசாயபீடத்தில் ஏற்கெனவே செய்த ஆராய்ச்சிகள் செய்யக்கூடிய ஆராய்ச்சிகள் ஆராய்ச்சி செய்வதற்கு காணப்படும் வளங்கள் பற்றி சிறு உரையாற்றினார்கள் இதன்பின்னர் ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்ட பிரச்சினைகள் தொழில் முனைவோர் பிரச்சினையை அடையாளப்படுத்தியோர் அவையில் முன்வைத்தனர்.




காலநிலைமாற்றம் அக்வாபோனிக்ஸ் ஹைட்ரோபோனிக்ஸ் கால்நடைத்தீவனம் இரசாயனங்கள்தெளிப்பு கழிவு முகாமைத்துவம் விலங்கு உணவு விவசாய இயந்திர உருவாக்கம் நீர்ஆவியாதலைக் கணித்தல் போன்ற தலைப்புக்களில் பிரச்சினைகள் முன்மொழியப்பட்டன.

இந்நிகழ்வில் பங்குபற்றிய விவசாயபீடம் உட்பட பிறபீடங்களின் விரிவுரையாளர்களாலும் மாணவர்களாலும் உள்வாங்கிக் கொள்ளப்பட்டது.

மதியநேர போசனத்திற்குப் பின்னர் அடையாளப் படுத்தப்பட்ட பிரச்சினைகள் தனித்தனி குழுக்களாக பிரிந்தும் இணைந்தும் விவாதிக்கப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்பில் சென்ஸ் அக்ரோ இனது தலைமை நிர்வாக அதிகாரி மில்லர் அலெக்சாண்டர் ராஜேந்திரன் பங்குபற்றி தனது கருத்துகளையும் விவசாயத்துறை சார்ந்த வாய்ப்புக்களையும் மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

ஏற்கெனவே கட்டமைக்கப்பட்ட தகவல் குறிப்புகளில் தங்களது விவாதங்களை குறித்துக்கொண்டனர். துறைவல்லுனர்கள் தங்களது கருத்துகளையும் பதிவு செய்தனர்.

குழுவான கலந்துரையாடல்கள் முடிந்தபின்னர் தங்களது கலந்துரையாடல்களின் தொகுப்பை குழு சார்பில் ஒருவர் அவையில் முன்வைத்தனர்.

இறுதியாக கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடுத்தகட்ட நகர்விற்கு கொண்டு செல்வதற்கான வாய்ப்புக்கள் சாதக நிலைமைகள் ஆராயப்பட்டு இதன் தொடர்ச்சியை நிகழ்வின் ஏற்பாட்டுக்குழு பொறுப்பெடுத்தது.

நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் விவசாயபீட மாணவர் ஒன்றிய மாணவர் தலைவர் நன்றி தெரிவித்து நிகழ்வை முடித்து வைத்தார்.

**நிகழ்வில் நடந்த மேலும் சில முக்கிய விடயங்கள்**

நிகழ்வு நடந்த இடம் முழுவதும் பொலித்தீன் பாவனையற்ற இடமாகப் பேணப்பட்டது.

மதியநேர விருந்து உபசாரத்தில் விவசாயபீடத்தின் கண்டுபிடிப்பான வில்வம்பழ யோக்கட் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

காலநிலை மாற்றம் தொடர்பான ஆராய்ச்சிக்கான நிதி வழங்கல் காவேரிக்கலா மன்றத்தினால் அறிவிக்கப்பட்டது.

விவசாயத்துறை சார்ந்த தொழில் முனைவோர்களது விளம்பர பதாதைகள் நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டன.

விவசாயபீடத்தின் துறைத்தலைவர்களால் முன்மொழியப்பட்ட சில விடயங்கள் ஆராய்ச்சிக்கு உட்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டது

**உசாத்துணை**

https://theempunal.com/e-paper/
https://www.agricultureinformation.lk/agritech102/
https://www.facebook.com/AgritechSL
https://www.agri.jfn.ac.lk/?page_id=2960
https://www.agri.jfn.ac.lk/?p=2353
https://theempunal.com/e-paper/

# குறள் இன்பம்

32

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

**திருக்குறளின் காமத்துப்பால் இலக்கணம் வகுத்துள்ள காதல் இலக்கியத்தின் இனிமையைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத் தொடர்.**

**நினைந்தவர் புலம்பல்**

இந்தப் பாகத்தில் "நினைந்தவர் புலம்பல்" என்ற தலைப்பில், 121 ஆம் அதிகாரத்தில் உள்ள குறட்பாக்களின் சிறப்பை வாசகர்களோடு பகிர்ந்துகொள்ளலாம் என்றால், அதன் முதலாவது குறளே வள்ளுவர் ஏனைய அதிகாரங்களில் கூறியுள்ள ஒரு விடயத்தினைப் பற்றி சிறிது விபரமாகச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கி விட்டது. குடித்தால் கள் இனிக்கும், நினைத்தால் காதலியின் சுகம் இனிக்கும் என்ற வள்ளுவரின் சொற்களையும் கள் உண்ணாமை என்று அவர் கொடுத்துள்ள தனியான அதிகாரத்தின் குறள்களையும் மேய்ந்து இன்பம் காணாமல், நினைந்தவர் புலம்பலின் இரண்டாவது குறளுக்கு நகர முடியவில்லை.

**கள்ளும் காமமும்!**

அந்த முதலாவது குறள் இதுதான்,

**"உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்**
**கள்ளினும் காமம் இனிது" (1201)**

துணைவியோடு முன்னர் கூடியனுபவித்த இன்பத்தை இப்போது நினைத்தாலும் இப்போதே அனுபவிப்பதைப்போல மகிழ்ச்சியுண்டாகிறது.

அதனால், குடிக்குபோது மட்டும் மகிழ்ச்சியைத் தருகின்ற கள்ளைவிட, காமம் மிகவும் இனியதாகும் என்று இந்தக்குறள் சொல்கிறது. ஒரு கணவன் தன் மனைவியோடு அல்லது காதலன் தன் காதலியோடு அனுபவித்த இன்பத்தை நினைத்து மகிழ்ந்து கூறுவதாக இது அமைந்துள்ளது.

திருக்குறளில் சில குறட்பாக்களிலும் இவ்வாறு கள்ளையும் காமத்தையும் ஒப்பிட்டு வள்ளுவர் வடித்துள்ளார். அவற்றையும் ஒருமுறை படித்துப் பார்க்காமல், கடந்து செல்ல முடியவில்லை.

**"உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்**
**கண்டார் மகிழ்செய்தல் இன்று" (1090)**

மது தன்னைக் குடித்தவருக்குத்தான் மகிழ்ச்சியைக் கொடுக்கும் காம உணர்ச்சியைப் போலத் தன் துணைவரைக் கண்டவருக்கே அது மகிழ்ச்சியைத் தாராது. அதாவது, மதுவைக் குடித்தால் போதை தெளியும்வரை மகிழ்ச்சி கிடைக்கும். ஆனால், துணைவரைக் கண்டாலே போதும் அது நீண்டகாலம் மகிழவைக்கும்.

**"உள்ளக்களித்தலும் காண மகிழ்வதும்**
**கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு" (1281)**

நெஞ்சில் நினைத்ததும் களிப்பைக் கொடுக்கவும் கண்ணால் கண்டதும் மகிழ்ச்சியைக் கொடுக்கவும் மதுவினால் முடியாது. ஆனால், காமத்தினால் முடியும். அதாவது, மதுவைக் குடித்தால் மட்டுமே களிக்கவும் மகிழவும் முடியும் காதலில் வீழ்ந்தவர்களுக்குத் தம் காதலரைக் கண்டாலும் மகிழ்ச்சியுண்டாகும் நினைத்தாலும் களிப்பு உண்டாகும்.

இந்தக் குறள்களில், கள்ளைவிடக் காதல் அல்லது காமம் இனிமையானது, நீண்டகாலம் மகிழ்ச்சியைக் கொடுப்பது, கண்டாலும் இன்பம் தருவது, கலந்தாலும் இன்பம் கிடைப்பது என்றெல்லாம் குறிப்பிட்டு, மதுவையும் காதலையும் ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

கள்ளுண்ணாமை என்று தனியொரு அதிகாரத்தை அமைத்து, பொருட்பாலில், பொருளியலில் அதனைத் தொகுத்து, அதில் பத்துக் குறள் களை எழுதிவைத்தவர் திரு வள்ளுவர். அந்த பத்துக் குறள்களிலும் மதுவின் தீமைகளை மிகவும் காரசாரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

- மதுப்பழக்கம் உள்ள அரசர்கள் தமது புகழை இழந்துவிடுவார்கள், அவர்களிடம் பகையரசர்களுக்குப் பயம் இருக்காது.
- மதுவை அருந்தாதீர்கள், அருந்தினால் பெரியோரிடம் உங்களுக்கு மதிப்புக் கிடைக்காது.
- தனது மகன் எதைச் செய்தாலும் தாங்குகின்ற பெற்ற தாய்கூட அவளின் முன்னால் மது அருந்துவதை சகிக்கமாட்டாள்.
- மது அருந்துபவர்களிடம் இருந்து 'நாணம்' என்ற நல்ல குணம் இல்லாமல் போகும்.
- தன்னிலை மறந்து உடலையும் கெடுத்துக் கொள்ளும் மதுவை, தனது பொருளைக் கொடுத்து வாங்குவது மடமையாகும்.
- மதுவை அருந்துபவர்களுக்கும் நஞ்சை அருந்துபவர்களுக்கும் இடையில் வேறுபாடு இல்லை என்பதால் அவர்கள் நித்திரையில் கிடப்பதற்கும் செத்துக் கிடப்பதற்கும் வேறுபாடு இருக்காது.
- யாருக்கும் தெரியாமல் மதுவை அருந்தினாலும் அவர்களது கண்கள் மயங்குவதைக் கண்டு ஊரவர்கள் பரிகசிப்பார்கள்.
- தான் மது அருந்துவதில்லை என்று ஒருவன் பொய் சொல்ல முடியாது, ஏனெனில் மதுமயக்கத்தில் அவன் உண்மையை உளறிவிடுவான்.
- குடிக்கு அடிமையானவனைத் திருத்த முயல்வது, தண்ணீரில் மூழ்கியவனைத் தீப்பத்தம் கொண்டு தேடுவதைப் போன்றது.
- குடிகாரன் ஒருவன், தான் குடியாது இருக்கும்போது குடித்திருக்கும் வேறொருவன் தள்ளாடுவதைப் பார்த்த பின்னரும் மதுவின் தீமையை நினைத்துப் பார்க்கமாட்டானா?

என்றெல்லாம் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளை அந்த அதிகாரத்தில் வரிசைப்படுத்தியிருக்கிறார். மனித இனத்திடம் அவர் கொண்டிருந்த அக்கறையால், மதுவை யாரும் அருந்துதல் கூடாது என்று மிகவும் கடுமையான தொனியில் மட்டுமல்லாது, அன்பாகவும் அறிவுறுத்தியிருக்கிறார். அதே திருவள்ளுவர்தான், மது அருந்துபவர்கள் அடையும் இன்பம், மகிழ்ச்சி என்ற வார்த்தைகளைக் கொண்டும் குறள்களை வடித்திருக்கிறார் என்றால் அதன் காரணம் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மது அருந்துவதில் இன்பத்தை அனுபவிப்பவர்களுக்கும் மகிழ்ச்சி அடைபவர்களுக்கும் அந்த இன்பமும் மகிழ்ச்சியும் தீமையானவை என்று உணர்த்துவதுதான் வள்ளுவரின் நோக்கம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சங்ககாலத்திலும் அதற்கு முன்னரும் மது அருந்தும் பழக்கம் மக்களிடையே இருந்திருக்கிறது.

விலை மாதர்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதும் அவர்களோடு சிலநாட்கள் தங்கியிருந்துவிட்டு மீண்டும் தங்கள் இல்லத்திற்குத் திரும்புவதும் ஆண்களின் வாழ்க்கை முறையில் சாதாரணமாக இருந்திருக்கிறது. அவை, சமுதாயத்தில் இழிவான செயல்களாகக் கருதப்படாமல் இருந்திருக்கின்றன. விலைமாதரிடம் செல்வதை ஊக்குவிப்பதில் மது அருந்தும் பழக்கத்திற்கும் பங்கு இருந்திருக்கிறது.

அதனால், இரண்டுமே மனிதரின் உடலுக்கும் உள்ளத்திற்கும் தீமை தருவன என்பதையும் சமூக ஒழுக்கத்திற்கு முரணானவை என்பதையும் உலகிற்கு வலியுறுத்தி உரைப்பதற்குத் திருவள்ளுவர் எண்ணம் கொண்டிருக்கிறார்.

காதலால் விளையும் காம இன்பத்தைச் சொல்ல வந்த வள்ளுவர் இவ்வாறு மது அருந்துவதால் உண்டாகும் மயக்க இன்பத்தினை இந்த அதிகாரத்திற்குள் இழுத்துவந்து ஒப்பீடு என்றவகையில் செருகியிருப்பது, அந்தக்காலத்தில் மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்களால் இவ்வுலகத் தலைமை இன்பமான இல்லற இன்பத்தை முற்றுமுழுவதாக அனுபவிக்க முடியாமல், குடும்பங்கள் துன்பத்திலும் சோகத்திலும் சிதைகின்ற நிலைமை தொடரக்கூடாதே என்ற சமூக அக்கறையினால்தான் என்றே நம் அறிவுக்குப் படுகிறது.

அதனால்தான், 'நினைந்தவர் புலம்பல்' என்ற அதிகாரத்தை எழுதிய வள்ளுவர், மது அருந்துவதால் கிடைக்கும் மயக்கமும் மகிழ்ச்சியும் தற்காலிகமானவை, தீமையானவை ஆனால் காதலால் கிடைக்கும் இன்பமும் மகிழ்ச்சியும் நீடிப்பவை, நிலையானவை என்று மதுவையும் காதலையும் ஒப்பிட்டு முதலாவதாக ஒருகுறளை எழுதிவிட்டு, அடுத்த குறளில் இருந்தே நினைந்தவர் புலம்பலை எடுத்துச் சொல்லத் தொடங்கியிருக்கிறார்.



**அணைப்பதும் இன்பம், நினைப்பதும் இன்பம்!**

இல்லறத்தில் இணைந்த காதலர் இருவர் சேர்ந்திருக்கும்போது சொல்ல முடியாத அளவுக்கு சுகமான இன்பத்தை அனுபவித்தார்கள். அவன் அவளைப் பிரிந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது அந்தப் பிரிவுக்காலத்தில், அவனையும் அவனோடு கலந்து பெற்ற இன்பத்தையும் அவள் அடிக்கடி நினைத்துப் பார்த்துக்கொண்டே இருக்கிறாள். அவ்வாறு நினைக்கும் போதெல்லாம் அவளுக்குப் பிரிவின் சோகம் தெரியவில்லை. சுகமாகவே இருக்கிறது. இனிமையாக இருக்கிறது. எண்ணமெல்லாம் அவனாக இருப்பதால் இதயமெல்லாம் குதூகலம் பரவுகிறது. இதனைக் கூறுகிறது இந்தக் குறள்.

**"எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்**
**நினைப்ப வருவதொன்று ஏல்" (1202)**

தாம் விரும்பி மணந்துகொண்ட காதலரைப் பிரிந்திருக்கும் நேரத்தில், அவரோடு சேர்ந்திருந்த காலத்தில் பெற்றிருந்த இன்பத்தை நினைத்துக் கொண்டிருந்தால் பிரிவினால் வரக்கூடிய துன்பம் வருவதே இல்லை. அதனால் எப்போதும் காதல் இன்பம் இனிமையானதே ஆகும் என்பது இதன் நேரடிக் கருத்தாகும்.

'நினைந்தவர் புலம்பல்' என்ற இந்த அதிகாரம் கற்பியலில் இடம்பெற்றிருந்தாலும் இதில் வெளிப்படும் காட்சிகளும் சொல்லப்படும் கருத்துகளும் களவு ஒழுக்கத்தில் இணைந்து வாழ்கின்ற காதலர்களுக்கும் பொருந்துவனவாகவே உள்ளன.

காதலுடன் சேர்ந்து வாழும்போது அணைப்பதில் இன்பமென்றால், பிரிந்திருக்கும்போது அதை நினைப்பதில் இன்பம் என்பதை, அவ்வாறு நினைத்து இன்பம் காணுகின்ற ஒரு பெண்ணின் வாய்மொழியாகவும் மன உணர்வாகவும் வெளிப்படுத்துகின்ற, இந்த அதிகாரத்தின் ஏனைய குறட்பாக்களை அடுத்த பாகத்தில் சுவைத்து மகிழ்வோம்.

**(தொடரும்)**

# பசுபிக் கடல் பிரிக்கும் உலகின் வல்லரசுகள்



ஸ்ரீகஜன்

உலக ஒழுங்கு என்ற பெயர் இரண்டாம் உலகப் போர் முடிந்தபின் உலகத்திற்கு வர்த்தகத்தை செய்ய ஒரு நாணயம் தேவைப்பட்டது அப்போது அமெரிக்காவில் Bretton Woods Aggrement செய்யப்பட்டது. ஆனால், அது அமெரிக்காவுக்கு பெரிய அளவில் உலக பயன்பாட்டில் தாக்கம் செலுத்தவில்லை. அதனை மாற்றியமைக்க அமெரிக்கா மத்திய கிழக்கின் சவுதி அரேபியாவுடன் உடன்படிக்கை செய்து Petro Dollar இனை உருவாக்கினார்கள். அன்றிலிருந்து அமெரிக்காவின் பொருளாதாரமும் உலக ஒழுங்கும் அமெரிக்கா வசமானது.

சீனா, மாவோ சேதுங்கின் காலத்தில் அசுர வளர்ச்சி எடுத்து உலக logistics இல் இரண்டில் மூன்று பங்கை அது கையாள்கிறது. ஆனால், சீனாவுக்கு எதிராக அமெரிக்கா பல அமைப்புகளை உருவாக்கி அதன் கடற்பரப்பில் பல இராணுவப் பயிற்சிகளை நடத்துகிறது. குவாட் நாடுகள் என்ற ஒரு கூட்டணியில் ஜப்பான், இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளன. இதன் இலக்கு இந்து பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆளுமையைக் குறைத்தால் மட்டுமன்றி அந்த நாடுகளில் இருந்து சீன நீக்கத்தை செய்வதுமே. அதன்பின் இன்னொரு கூட்டணி AUKUS என உருவாகியது.

அதன் நோக்கம், இலக்கு சீனக் கடல் மற்றும் இந்து பசுபிக் பிராந்தியங்களில் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்குவது. சாதாரண எரிபொருளில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்கள் குறுகிய நாட்கள் மட்டுமே கடலின் அடியில் ஆய்வுகளையும் போர்ப் பயிற்சிகளையும் செய்ய முடியும். ஆனால், இந்த அணுசக்தி நீர்மூழ்கிக் கப் பல் ஒரு நாட்டின் சிம்மசொப்பனமாகும். எத்தனை நாட்களும் நீரின் அடியில் இருந்து ஆய்வுகளைச் செய்ய முடியும். பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்த உடன்படிக்கை ஊடாக அமெரிக்காவில் தயாரித்த இந்த நீர்மூழ்கிக் கப்பல்களை சீனாவுக்கு எதிராக அவுஸ்திரேலியாவிடம் வழங்குவார்கள். இதனைப் போலவே சீனாவுக்கு சில கூட்டணிகள் உண்டு.





அவை SCO, BRICS என ரஷ்யாவுடன் இணைந்து ஒரு கூட்டணியைக் கொண்டு செல்கிறது. BRICS ஆரம்பமான காலம் முதலே அமெரிக்காவுக்கு தெரியும் இந்தக் கூட்டணி உலகின் 3/5 வர்த்தகத்தையும் 42% சனத்தொகையையும் கொண்ட நாடுகள் ஆகவே, இவர்கள் தமக்கென ஒரு நாணயத்தை உரு வாக்கினால் தமது வர்த்தக நாணயம் விழுவது மாத்திர மின்றி உலக ஒழுங் கும் அவர்கள் கீழே சென்றுவிடும்.

ஐரோப்பிய ஒன்றியம் தனக்கென யூரோவை வைத்திருப்பதைப் போல் இந்தக் கூட்டணி வர்த்தகத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும். பொருளாதாரச் சிக்கலில் இருக்கும் ஆசிய ஆபிரிக்க நாடுகள் மீட்சிகொள்ளும்.

சீன ஜனாதிபதி ஜின் பிங் ரஷ்ய ஜனாதிபதி புட்டினும் இந்தக் கூட்டணியைப் பெருப்பிக்க பல முயற்சிகளை எடுத்துவருகின்றனர். அதன் காரணமாக சீன ஜனாதிபதி சவுதி அரேபியா சென்று யுவானில் கச்சா எண்ணெய்க் கொள்வனவின் புரிந்துணர்வை ஏற்படுத்தினார். அதைத் தொடர்ந்து புட்டினும் யுவானில் வர்த்தகம் செய்ய எமக்கும் சம்மதம் என தெரிவித்திருந்தார். இதற்கிடையில் ரஷ்யாவிடம் இருந்து இந்தியா மிகக் குறைந்த விலையில் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்கிறது. அதைப் பலமுறை நிறுத்த மேற்குலகம் கேட்ட போதும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் குடுத்த பதில் தடாலடியானது 140 கோடி சனத்தொகை கொண்ட நாடு என் மக்களுக்கு என்ன தேவையோ அதை நாங்கள் செய்வோம் என்றார். BRICS+ஆக உரு வெடுக்கும் அதில் சவுதி அரேபியா, ஈரான் ஆகியன சேரும்.

இவர்களுக்குள் இருந்த பிணக்கைத் தீர்த்து மீண்டும் பேச்சுவாரத்தையில் ஈடுபட வைத்துள்ளார் சீன வெளியுறவு பிரதானி wang சீனாவின் one china policy படி தாய்வானும் திபெத்தும் தனது பிரதேசங்கள் என்ற கொள்கையில் இருக்கிறது. அதனை முன் கொண்டு செல்லவே சீன கம்யூனிஸக் கட்சி மீண்டும் ஜின் பிங் இனை தெரிவு செய்து ஜனாதிபதியாக்கியுள்ளது. இந்த ஆகஸ்டில் தென் ஆபிரிக்காவில் நடக்கும் BRICS அனைத்து மேற்குநாடுகளும் உற்று நோக்கியுள்ளன.

---

# பயங்கரவாத...

(10 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

தேடுதல்களை முப்படைகளுக்கும் பொலிஸாருக்கும் வழங்குவது இதன் மற்றொரு பிரதிகூலமாகும்.

இதனைவிட பாரதூரமான பிரிவாக குறித்த ஒரு பகுதியை தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கும் சந்தர்ப்பத்தை சட்டம் பொலிஸாருக்கு வழங்குதல் இதன் பாதகமான அம்சமாகும். அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற சில போராட்டங்களின் போது சிலபகுதிகள் தடை செய்யப்பட்ட இடங்களாக வர்த்தமானியூடாக அறிவிக்கப்பட்டது அவை பின்னர் கடும் எதிர்ப்பு காரணமாக திருப்பிப் பெறப்பட்டது. இவ்வாறான ஒரு ஏற்பாட்டை சட்டம் ஏற்படுத்திக் கொடுத்தல் பிரஜைகளின் உரிமைகள் குறித்த பகுதியில் மீறப்படுவதற்குரிய ஏது நிலையை ஏற்படுத்தலாம் என்பது இதன் இன்னொரு பாதகமான அம்சமாகும். அத்துடன் சட்ட அமுலாக்க விடயங்களில் பொலிஸாரைத் தாண்டி முப்படைகள் மற்றும் குழுக்களை உள்ளடக்கல் சிவில் செயற்பாடுகள் இராணுவமயப்படுத்தப்படும் ஏது நிலையை ஏற்படுத்தலாம்.

எனவே, தொகுத்து நோக்கின் பாதகமான அம்சங்களும் என மேலே வரையறுத்த பல அம்சங்கள் ஏற்கெனவே இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தில் இருந்து முழுமையாக மாறுபட்டதாக அமையவில்லை என்பதை உணர முடிகின்றது. ஏதேச்சையாக கைது செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்படாமலும் இருக்கும் உரிமை, பேச்சு சுதந்திரம், நடமாட்ட சுதந்திரம், சட்டத்தின் சமனான பாதுகாப்புக்கு உட்படுதலுக்குமான உரிமை, சித்திரவதைகள் கொடூரமான மனிதாபிமான நடவடிக்கைக்கு உட்படாமல் இருக்கும் உரிமை, ஒன்றுகூடல் சுதந்திரம் உட்பட்ட சர்வதேச உரிமைகள் மீறப்படுதலுக்கு இச்சட்டமூலம் வாய்ப்பை ஏற்படுத்தலாம் என விமர்சிக்கப்படுகின்றது குறிப்பாக, சர்வதேச மனித உரிமை சாசனம் சர்வதேச குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை சாசனம் போன்ற சர்வதேச மனித உரிமை அடிப்படைகளில் இருந்து இது மாறுபடுவதையும் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக சர்வதேச ஜனநாயக முறை பயங்கரவாதத்தை ஒழித்தலுக்கு விசேட இறுக்கமான சட்டத்தின் தேவை கிடையாது எனவும் அரசியலமைப்பு சட்டத்தின் குற்றவியல் தண்டனை சட்டக்கோவைகள், சான்று கட்டளை சட்டங்களில் சில மாற்றங்களை கொண்டு வருவதன் மூலம் நடைமுறையில் எழும் பயங்கரவாத பிரச்சினைகள் பொது அமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விடயங்களைத் தடுக்க வாய்ப்பிருந்தும் இத்தகைய விசேட சட்டமூலத்தின் தேவை என்னவென்பதே அரசியல் சட்ட அறிஞர்களின் கருத்தாக அமைகின்றது

சட்ட அமுலாக்கல், சிவில் நிர்வாகம் போன்ற முறைமைகளைத் தாண்டி விசேட ஏற்பாடுகளின் போது சிவில் குற்றவியல் செயற்பாடுகளில், இராணுவ நிர்வாகத்தின் தாக்கத்தை இச்சட்டமூலம் ஏற்படுத்தலாம் என்பதும் இச்சட்டமூலம் பற்றிய விமர்சனமாக அமைகின்றது.

இதனைத் தாண்டி பாதுகாப்பு செயலர், பொலிஸ்மா அதிபர், பிரதி பொலிஸ்மா அதிபர், ஜனாதிபதி, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆட்களுக்கு ஆகியோருக்கு தடுத்துவைத்தலில் சட்ட ரீதியான ஏற்பாடுகளைச் செய்தல் சமத்துவம் சுதந்திரம் மனித உரிமை நிறைவேற்று துறையால் மீறப்படுதலுக்கு வாய்ப்பு ஏற்படுத்தலாம் என்பது இச்சட்டம் பற்றிய அச்சமாக அமைகின்றது.

மொத்தத்தில் தொகுத்து நோக்கின் சட்டமூலம் சர்வதேச நியமங்களைப் பின்பற்றுவதாக வெளிப்படையாக சில பிரிவுகள் ஊடாக தோன்றினாலும் இது சர்வதேச மனித உரிமை நியமங்களையும் ஜனநாயக அம்சங்களையும் அரசின் பொறுப்புக் கூறலையும் சவாலுக்குட்படுத்துவதைக் காண முடிகின்றது.

# அகற்றப்பட்ட...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி...)

நீர் வற்றாமல் எப்பொழுதும் நிறைந்திருக்கும் என்கின்றார்கள் கிராம மக்கள். அந்த நீர்த் தடாகத்திற்கு மேலே மலையின் சற்று உயரமான பகுதியில் நாகத்தை பிரதிபலிக்கும் கற்தெய்வ வழிபாடு இடம்பெறுகிறது.

நீர்த்தேக்கத்தில் இருந்து பார்க்கின்ற போது மலைநோக்கிச் செல்லும் இடப்பகுதியின் உயரமான ஓரிடத்தில் மலையோடு தொடர்பற்ற, எங்கிருந்தோ கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டது போன்ற பாரிய கல் ஒன்று சிறு சிறு சதுர வடிவான கற்களை அடித்தளத் தாங்கிகளாக முண்டு கொடுக்கப்பட்டு நிமிர்த்தி வைக்கப்பட்டுள்ளது. புராதன தொழில்நுட்பத்தின் இன்னும் ஒரு வடிவத்தை பறைசாற்றுகின்ற இப்பகுதியைக் கடந்து மலையில் மேல் நோக்கிச் செல்லுகின்ற போது ஒரேசீராக குடையப்பட்ட சிறிய சிறிய குழிகள் தென்படுகின்றன. மருந்துகள் மற்றும் பச்சிலைகளை அரைப்பதற்கான குழிகளாக அவை காணப்பட்டிருக்கலாம் என்கின்ற ஐதீகத்தையும் நம்பிக்கையையும் இக்குழிகளோடு இணைத்துப் பார்க்க இடமிருக்கிறது.

குழிகள் காணப்படுகின்ற அப்பகுதியைக் கடந்து இன்னும் மேற்சென்று கீழிறங்க மலைத்தொடரில் இயற்கையாகவே அமையப்பெற்ற சிறு குன்றொன்று தென்படுகின்றது. பார்ப்பதற்கு நாகத்தின் தலை போன்று தென்படுகின்ற அந்தக் குன்றில் பாம்பின் முகத்தில் தெரிகின்ற பக்க வளைவுகள் விளிம்புச் சதைகளைப்போன்ற உன்னிப்பான அவதானத்திற்குரிய கற் சிற்ப வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன. நாக பாம்புகள் அவ்விடத்தில் உலவுவதாகவும் தாங்கள் பிரசாதமாகப் படைக்கின்ற பாலை அவை குடிப்பதாகவும் நம்புகின்றார்கள் கிராம மக்களும் பக்தர்களும்.

அந்தப்பகுதியில் இருந்து மலையில் செங்குத்தாக இன்னும் மேல் நோக்கிச்செல்ல மலையின் உச்சிப் பகுதிக்குச் செல்வதற்குரிய சிறு சமவெளிப் பகுதி தென்படுகின்றது. இச் சமவெளிப்பகுதிக்கு செல்வதற்காக அலுமினிய வேலைப்பாடுகளுடைய படிகளை ஆலய நிர்வாகத்தின் முயற்சியால் அமைத்திருக்கிறார்கள். ஆனால், முழுமையாக அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் அனுமதியை வழங்காத நிலையில் அச் செயற்பாட்டிற்கு எதிராக வழக்கினையும் தொடர்ந்திருக்கிறது திணைக்களம்.

மலையின் சிறு சமவெளிப்பகுதியிலிருந்து அப்பகுதியின் இரம்மியமான வனப்பையும் சூழலையும் அனுபவிக்க முடிகிறது. பின்னர் அங்கிருந்து மலையின் அடுத்த உச்சிக்கு ஏறிச் செல்வதற்கான எவ்விதமான படிகளோ, அமைப்புக்களோ அற்ற நிலையில் இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கின்ற சிறிய மரக்குற்றியிலான தாங்கிகளையும் பெருங் கொடிகளையும் மரங்களையும் பற்றிக்கொண்டு மேலே ஏற முடிகின்றது. பெரும் பிராயத்தனத்தின் பின் மேல் நோக்கி ஏறிச்செல்ல மலையின் உச்சியில் கற்பாறைகளை அடுக்கி அவற்றின் மேல் அமைக்கப்பட்டிருக்கின்ற புராதன ஆதி இலிங்கேச்சரர் கண்களில் தென்படுகிறார். கூம்பு வடிவிலான பாறையை சதுரக் கற்களின்மேல் அடுக்கி ஒட்டி நிமிர்த்தி வைக்கப்பட்டிருப்பது போன்று தென்படுகின்றது மக்களின் நம்பிக்கைக்குரிய ஆதி இலிங்கேச்சரர் சிவலிங்கம். இந்தச் சிவலிங்கம் இராவணன் காலத்திற்குரியதாக இருக்கலாம் என்கின்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர் கிராம மக்கள்.

இயற்கை மூலிகைகள் நிறைந்த அந்தப் பகுதியிலிருந்து இன்னும் சற்று மேல் நோக்கி ஏறிச்செல்ல அந்த மலையின் சமவெளி தென்படுகின்றது. அங்கு சிவலிங்கம் ஒன்றை பிரதிட்டை செய்து வழிபடுகிறார்கள் கிராம மக்கள்.

சுமார் முந்நூறு அடி உயரமான மலையுச்சியின் சமவெளியில் ஏறிநிற்க காட்டின் காற்று மேனியைத் தழுவ அங்கிருந்து வன்னிப் பிராந்தியத்தின் அழகைக் கண்டுகொள்ள முடிகின்றது. ஒரு பக்கம் வவுனியாவின் காட்சிகளும் மறுபக்கம் மதவாச்சியின் காட்சிகளும் இன்னும் ஒரு பக்கம் பதவியா போன்ற பிரதேசங்களும் தென்படுகின்றன என்பது கிராம மக்களின் கணிப்பு.

புவியின் பௌதீகவியல் ரீதியில் இப்படியான மலை உருவாக்கச் செயற்பாட்டிற்கு பல்வேறு காரணிகள் துணை புரிகின்றன. புவியின் உட்பகுதியில் இயங்குகின்ற மேற்காவுகளை ஓட்டங்களின் காரணமாகவும் புவித்தகடுகளின் ஒருங்குதல் செயற்பாட்டின் காரணமாகவும் மலை உருவாக்கச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. அந்த வகையில் நெடுங்கேணிப் பிரதேசத்தின் பௌதீக இட அமைவும் இவ் வெடுக்குநாறி மலையின் புவியியற் காரணிகளும் கற்றுணரப்பட வேண்டிய அதே நேரத்திலே கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பரந்து விரிந்திருக்கின்ற அந்தக் காடுகளும் காட்டு மரங்களும் இந்த மலையும் தேக்கி வைத்திருக்கின்ற தொன்மத்தின் கதைகள் பலவாகும்.

இலங்கையின் குடித்தொகை வரலாற்றில் வன்னிப்பிராந்தியம் காலத்தால் முற்பட்ட வரலாற்றைப் பதிவு செய்கின்றது. இங்கு குளங்களை அடிப்படையாக வைத்து உருவாகிய குடியேற்றத்திட்டங்கள் பெருங்கற்காலத்தின் எச்சங்களையும் அதற்கு முந்திய குறுணிக்கற்கால எச்சங்களையும் பறைசாற்றுபவை என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். குளங்களை அச்சொட்டாகக் கொண்ட கிராமங்களும் இன்னும் பூநகரி, மன்னாரின் கட்டுக்கரை மற்றும் தேக்கம் பகுதிகள், வவுனியாவின் செட்டிக்குளம், மாமடுவ போன்ற பல பிரதேசங்கள் இவற்றின் எச்சங்களாக எஞ்சி நிற்கின்றன. இங்கு கண்டு கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்கள் இதனை உறுதி செய்கின்றன. இலங்கையில் விஜயன் வருகைக்கு முன்னர் இங்கு ஜக்ச, நாக என்கின்ற இரண்டு இனக்குழுக்கள் வாழ்ந்ததாகவும் அவர்களுக்கிடையே பண்பாட்டு ரீதியான வேறுபாடுகள் காணப்பட்டதாகவும் உடலியல் அடிப்படையில் ஒத்த இயல்புகளைக்கொண்டிருந்ததாகவும் வரலாறு சொல்கிறது.

அந்த வகையில் புராதன இலங்கையில் நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தை ஆரம்பித்து செயற்படுத்தியவர்கள் நாகர்கள்தான் என்பது “சிரான் தெரணியகல” உட்பட்ட வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நாகர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்கள் பரவியிருக்கின்றன. கிழக்கிலங்கையின் படுவான் கரையின் வெல்லாவெளியில் அமைந்திருக்கின்ற பிராமி சாசனங்களும் குடைவரை எச்சங்களும் இவற்றை பலப்படுத்துகின்றன.

இதேபோன்ற பிராமி எழுத்துக்களைக் கொண்ட சாசனம் இந்த வெடுக்கு நாறி மலையிலும் பதியப்பட்டுள்ளது. பிராமி எழுத்துக்களை முதன் முதலில் வட இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தி பயன்படுத்தினார் என்றும் பிற்காலத்தில் பரப்பப்பட்டு பின்னர் திராவிட மொழிக் குடும்பத்தோடு கலந்த காரணத்தினால் தமிழில் தமிழ் வரி வடிவத்திற்கு ஏற்ப பிராமி எழுத்துக்களை உள்வாங்கி இங்குள்ள மக்கள் பயன்படுத்தினார்கள் என்பதும் மொழியியலாளர்களின் கருத்தாகும்.

ஆக நெடுங்கேணி ஒலுமடுவின் வெடுக்குநாறி மலைப் பிரதேசத்திலுள்ள இந்த பிராமி எழுத்துகளோடு இணைந்த ஏனைய எச்சங்களும் நாக வழிபாடும் நீர்ப்பாசன அமைப்புக்களும் நாகர்களின் தொன்மத்தின் நீட்சி என்று கருதுவதற்கான வாய்ப்புக்கள் பல உள்ளன. இந்த மலைப்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள நாகர் குளம் என்கின்ற குளப் பகுதி இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. வடகிழக்கில் பூர்வீகமாக வாழ்கின்ற தமிழர்கள் நாகர்களின் வழி வந்தவர்கள் என்கின்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி இந்த வெடுக்குநாறி மலையின் கதைகள் உலகறியப்பட வேண்டியவை.

ஆனால், தொல்லியல் திணைக்களத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஆலயப் பகுதியில் பக்தர்கள் வழிபாடுகளை நடாத்துவதற்கும் இயல்பான நடமாட்டத்திற்கும் தடை விதிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் இந்த நிலம் கொண்டிருக்கின்ற கதைகளை மாற்றுவதற்கான முயற்சிகளாகும். இங்கு கோயிலிற்கு சென்று வருவதற்கென அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு பகுதிக்கான படிகள் தவிர ஏனைய பகுதிகளுக்கான படிகளை அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் தடைவிதித்துள்ளது. அதே நேரத்திலே இந்த ஆலயப்பகுதிக்குச் செல்வதற்கான சுமார் நான்கு கிலோமீற்றர்கள் தூரமுள்ள மண் பாதையில் உரிய முறையில் பாதைகளை அமைப்பதற்கு முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதி குறித்தொதுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் வனவள பாதுகாப்புத் திணைக்களம் அதற்கான அனுமதியை தடுத்து நிறுத்தி வைத்திருக்கின்றது. குறித்த அனுமதியைப் பெறுவதற்காக பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அனுமதி இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. இவற்றிற்கான விளக்கக் கடிதங்கள் முழுமையான சிங்கள மொழியில் ஆலய நிர்வாக சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழும் சிங்களமும் ஆங்கிலமும் இந்த நாட்டின் அரச கரும மொழிகள் என்கின்ற நிலையில் மக்களுக்காக, மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலேயே அரச திணைக்களங்கள் சேவையாற்ற வேண்டும்.

இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை நடாத்தக்கூடாது என்று தொல்லியல் திணைக்களம் தனிச் சிங்களத்தில் கடிதத்தை அனுப்பி பொலிஸார் தடுத்து, பின்னர் நீதிமன்ற அனுமதியில் பொங்கல் நிகழ்வுகள் இன்று ஆரம்பித்து பத்தாவதுநாள் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கின்றார்கள் ஆலய நிர்வாகத்தினர்.

தொல்லியல் சின்னங்கள் முறையாகப்பராமரிக்கப்பட வேண்டிய அதே நேரத்திலே, வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை, ஆனால் இலங்கையின் புராதன சின்னங்களில் ஒன்றாகிய சிகிரியா சிங்க மலையில் உரிய முறையில் படிகள் அமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் சென்று வரமுடியும் எனில் வெடுக்குநாறி மலையில் படிகள் அமைத்து மக்கள் வழிபாடு செய்வதில் உள்ள தடைகள் என்ன?

பாதுகாக்கப்பட்ட உலக வனங்களில் ஒன்றாகிய சிங்கராஜ வனப்பகுதிக்கு மக்கள் செல்வதற்காக, காட்டின் மக்கள் நடமாட்டம் உள்ள முதலாவது வலயப் பகுதிவரை கற்பாதைகள் அமைத்து சென்று வர முடியும் எனில் அதேபோன்று வனத்தினை பாதிக்காத வகையில் கற்பாதைகளை அமைத்து பயணிகள் மற்றும் பக்தர்கள் உரிய முறையில் நடந்து சென்று வழிபாடுகளை நடாத்தி வருகின்ற வகையில் வெடுக்குநாறி மலைக்குச் செல்லும் பாதையில் உரிய கற்பாதைகளை அமைப்பதற்கேனும் வனவளத் திணைக்களம் அனுமதியை வழங்குவதில் உள்ள தடைகள் என்ன?

இந்த ஆலயத்தின் தொன்மத்தை அறிந்த வெளியிடத்து மக்கள் கிராமத்திற்குச் சென்று ஆலயத்தைத் தேடி வழிபடச் செல்கின்றபோது இனம் தெரியாதோரால் கேள்விகளுக்கு உள்ளாக்கப்படுவதன் பின்னுள்ள கதைகள்தான் என்ன?

இவைதான் கிராம மக்களின் விடையற்ற வினாக்களாக உள்ளன. ■

# வெடுக்கு நாறி...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி...)

ஆகவே, எமது வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோயிலில் எழுந்தருளியிருந்த சிலைகளை அழித்தவர்கள் உடனடியாக கைதுசெய்யப்படல் வேண்டும்.

நாம் மரபாக வழிபட்டு வந்த கடவுள்களின் சிலைகள் இதே இடத்தில் மீள நிறுவப்படல் வேண்டும்.

இதுவரை காலமும் கோயில் நிர்வாகத்தினர் மீது தொல்லியல் திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்ட நேரடி, மறைமுக இடையூறுகளின் காரணமாகவே எம்மால் நெறிப்படியான வழிபாடுகளை ஆற்றமுடியாமல் போனது.

இவ்வாறு எமது பிரசன்னம் ஆலயப் பகுதியில் குறைந்திருந்தபடியினாலேயே விசமிகள் துணிந்து நின்று தெய்வச் சிலைகளை அழித்திருக்கின்றனர்.

எனவே, நாம் எவ்விதமான தடைகளுமின்றி எமது கோயிலுக்குச் செல்லும் வழிபாடுகளில் ஈடுபடவும் ஆவண செய்யவேண்டும்.

இனிவருங்காலங்களில் இதுபோன்ற துர்செயல்கள் எமது கோயிலுக்கும் ஏனைய மத வழிபாட்டிடங்களுக்கும் ஏற்படாது என்கிற உத்தரவாதத்தினை அரசு தரவேண்டும்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேசுவரர்
கோயில் நிர்வாகம் ■

THEEMPUNAL தீம்புனல்

# அர்ஜூன் டெண்டுல்கருக்கு அதிஷ்டம் கை கொடுக்குமா?

இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவானும் கிரிக்கெட் போட்டிகளின் கடவுளாகப் பார்க்கப்படும் சச்சின் டெண்டுல்கர் சர்வதேச கிரிக் கெட்டில் இருந்து ஓய்வு பெற்று பல ஆண்டுகள் ஆனாலும் இன்றளவும் ரசிகர்கள் மத்தியில் அவருக்கு குறை வில்லா புகழே இருந்து வருகிறது. அந்த அளவிற்கு இந்திய கிரிக்கெட் அணியின் மகத்தான ஒரு வீரராக அவர் ரசிகர் களால் கொண்டாடப்பட்டு வருகிறார். அதேவேளையில் அவரது மகன் அர்ஜூன் டெண்டுல்கர் தற்போது 23 வீச்சாளர்கள் காயம் அடைந்து வெளி யேறிய வேளையில் வேகப்பந்து வீச்சு ஆல்ரவுண்டராக இருக்கும் அர்ஜூன் டெண்டுல்கருக்கு ஒரு வாய்ப்பினை வழுங்கிப் பார்க்கலாம் என்பதே ரசிகர் களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆனால், கடந்த ஐ.பி.எல் தொடரின் போது பேசிய மும்பை அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர் ஷேன் பாண்ட் கூறுகையில் : அர்ஜூன் டெண்டுல்கர் இன்னும் உயரிய மட்டத்திற்கு விளை யாடும் அளவிற்கு தயாராகவில்லை. அவர் இன்னும் கொஞ்சம் கடினமான



வயதை எட்டியுள்ள வேளையில் இது வரையில் கிரிக்கெட் போட்டிகளில் பெரிய முன்னேற்றத்தைக் காணவில்லை. ஐ.பி.எல் தொடர்களில்கூட அவர் இது வரை அறிமுகமாகி விளையாடிய தில்லை.

கடந்த சில சீசன்களாகவே மும்பை அணியின் வலை பயிற்சி பந்துவீச்சா ளராக இருந்த அவர் கடந்த ஆண்டு 30 இலட்சம் ரூபாய் என்கிற அடிப்படை விலைக்கு மும்பை அணியால் வாங்கப் பட்டார். ஆனால், இன்றளவும் அறிமுக மாகாமல் இருக்கும் அர்ஜூன் டெண் டுல்கர் இந்த ஆண்டாவது அறிமுக வாய்ப்பைப் பெறுவாரா என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த ஆண்டு மும்பை அணியில் இடம்பெற்றிருந்த பும்ரா, ரிச்சர்ட்சன் போன்ற வேகப்பந்து சில பகுதிகளில் பணியாற்ற வேண்டி யுள்ளது என்று கூறியிருந்தார். இந்நிலையில் தற்போது மீண்டும் தனது தீவிர பயிற்சியினை முடித்துள்ள அர்ஜூன் டெண்டுல்கர் பவுலிங் செய் வது மட்டுமின்றி தனது பேட்டிங் மற்றும் பீல்டிங் என அனைத்து துறைகளிலும் முன்னேற்றத்தை பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டு ஏழு முதற்தர போட்டிகள், ஏழு லிஸ்ட் ஏ போட்டி கள், ஒன்பது ரி20 போட்டிகளில் ஆடியுள்ள அவர் 32 விக்கெட்க ளையும் 250க்கும் மேற்பட்ட ஓட்டங்களையும் அடித்துள்ளதால் அவருக்கு இம்முறையாவது வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். ■

# 15 சீசனில் 13 கப்டன்கள் சம்பியனாகாத பஞ்சாப்

ஐ.பி.எல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி 2008 ஆம் ஆண்டு அறிமுகம்செய்யப்பட்டது.

இதுவரை 15 சீசன்கள் முடிவடைந்துள்ளன. இதில் மும்பை இந்தி யன்ஸ் அதிகபட்சமாக 5 முறை ஐ.பி.எல். கோப் பையை வென்றுள்ளது. அதற்கு அடுத்தபடியாக சென்னை சூப்பர் கிங்ஸ் 4 தடவை பட்டம் பெற் றுள்ளது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 2 முறையும், ராஜஸ்தான் ராயல்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத், குஜராத் டைட்டன்ஸ் ஆகிய அணிகள் தலா 1 தடவையும் சாம்பியன் பட்டம் பெற்றுள்ளன.

16ஆவது ஐ.பி.எல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிநேற்று தொடங் கியது. இந்நிலையில் ஐ.பி.எல் தொடரில் அதிக கப்டன்களை மாற்றிய அணியாக பஞ்சாப் புதுவிதமான சாதனை ஒன்றை படைத்துள்ளது. இதுவரை நடந்த 15 சீசனில் 13 கப்டன்கள் அந்த அணிக்கு தலைமை தாங்கியுள்ளனர்.




ஐ.பி.எல்தொடரில் சம்பியனாகாத அணிகளுள் பஞ்சாப் அணியும் ஒன்று.

இந்தாண்டு ஷிகர் தவான் தலைமையில் பஞ்சாப் களம் இறங்குகிறது. பஞ் சாப் கிங்ஸ் அணி யின் கப்டன்கள் பட்டியல்: -

யுவராஜ் சிங் -இந்தியா
குமார் சங்ககார -இலங்கை
ஜெயவர்தன-இலங்கை
கில்கிறிஸ்ட் -அவுஸ்திரேலியா
டேவிட் ஹசி -அவுஸ்திரேலியா
பெய்லி -அவுஸ்திரேலியா
சேவாக் - இந்தியா
டேவிட் மில்லர் -தென் ஆப்பிரிக்கா
முரளி விஜய் -இந்தியா
மாக்ஸ்வெல் -அவுஸ்திரேலியா
அஸ்வின் -இந்தியா
கே.எல்.ராகுல் - இந்தியா
அகர்வால் -இந்தியா ■

# ஐ.பி.எல் வர்ணனையாளர் குழுவில் பும்ராவின் மனைவி

2023ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடர் போட்டிகள் ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, போஜ்புரி, பெங்காலி, ஒரியா, மலையாளம், கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட 11 மொழிகளில் வர்ணனை செய்யப்படும் என



ஜியோ அறிவித்துள்ளது.

ஐ.பி.எல் தொடரின் 16 ஆவது சீசன் மார்ச் 31 ஆம் திகதி அகம தாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் தொடங்க உள்ளது. முதல் போட்டியில் நடப்பு சாம்பியனான குஜராத் டைட்டன்ஸ் மற்றும் நான்குமுறை வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் மோதுகின்றன. இதன் தொடக்க விழாவில் திரைப்பட நடிகை தமன்னா பாட்டியா நடன மாட இருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பும்ராவின் மனைவியும் பிரபல கிரிக்கெட் தொகுப்பாள ருமான சஞ்சனா கணேசன் ஆங்கில வர்ணனைக் குழுவில் இடம்பெற்றுள்ளார்.

**ஆங்கிலம்:** கிறிஸ் கெய்ல், ஏ.பி. டி வில்லியர்ஸ், இயான் மோர்கன், பிரட் லீ, கிரேம் ஸ்வான், கிரேம் ஸ்மித், ஸ்காட் ஸ்டைரிஸ், சஞ்சனா கணேசன், சுப்ரியா சிங், சுஹைல் சந்தோக்

**ஹிந்தி:** ஒவைஸ் ஷா, ஜாகீர் கான், சுரேஷ் ரெய்னா, அனில் கும்ப்ளே, ராபின் உத்தப்பா, பார்த்திவ் படேல், ஆர்.பி.சிங், பிரக்யான் ஓஜா, ஆகாஷ் சோப்ரா, நிகில் சோப்ரா, சபா கரீம், அனந்த் தியாகி, ரிதிமா பதக், சுர்பி வைத், க்ளென் சல்தானா

**மராத்தி:** கேதார் ஜாதவ், தவால் குல்கர்னி, கிரண் மோர், சித்தேஷ் லாட், பிரசன்னா சாந்த், சைதன்யா சாந்த், குணால் டேட், விகாட் பாட்டீல், பூர்வி பாவே

**குஜராத்தி:** மன்பிரீத் ஜூனேஜா, வ்ரிஜேஷ் ஹிர்ஜி, ராகேஷ் படேல், பார்கவ் பட், நிஷாத் மேத்தா, ஸ்ரேயும் மேத்தா, கரண் மேத்தா, அசீம்

**போஜ்புரி:** முகமது சைஃப், சிவம் சிங், சத்ய பிரகாஷ், குலாம் ஹுசைன், சவுரப் வர்மா, குணால் ஆதித்யா சிங், விஷால் ஆதித்யா சிங், சினே உபாத்யாய், டிம்பால் சிங்

**பெங்காலி:** ஜூலன் கோஸ்வாமி, லக்ஷ்மி ரத்தன் சுக்லா, சௌராஷிஷ் லஹிரி, சுபோமோய் தாஸ், ஸ்ரீவத்ஸ் கோஸ்வாமி, சஞ்சீப் முகர்ஜி, சரதிந்து முகர்ஜி, அனிந்த்யா சென்குப்தா, ஷேப்

**ஒரியா:** தேபாஷிஷ் மொஹந்தி, பசந்தா மொஹந்தி, ரஷ்மி ரஞ்சன் பரிதா, பிப்லாப் சமந்த்ரே, கவுரப் பாண்டா, லோரியா மொஹந்தி, ஷோவ்னா மிஸ்ரா

**மலையாளம்:** சச்சின் பேபி, ரோஹன் பிரேம், சோனி செருவத்தூர், வி.ஏ.ஜெகதீஷ், முகமது ரபிக், அஜூ ஜான் தாமஸ், ரேணு ஜோசப், சித்தாரா, பினோய்

**கன்னடம்:** வெங்கடேஷ் பிரசாத், எஸ் அரவிந்த், அமித் வர்மா, வேதா கிருஷ்ணமூர்த்தி, ஹெச் சரத், சுஜய் சாஸ்திரி, தீபக் சவுக்லே, ராகவேந்திர ராஜ், சுமந்த் பட், ரீனா டிசோசா, ஹிதா சந்திரசேகர், அங்கிதா அமர்

**தமிழ்:** அபினவ் முகுந்த், ஆர் ஸ்ரீதர், வித்யுத் சிவராமகிருஷ்ணன், பாபா அப்ரஜித், பாபா இந்திரஜித், அனிருதா ஸ்ரீகாந்த், கேபி அருண் கார்த்திக், சுதிர் சீனிவாசன், பகவதி பிரசாத், சஞ்சய் பால், ஸ்ரீனிவாசன் ராதாகிருஷ்ணன், சமீனா அன்வர், காயத்ரி சுரேஷ்

**தெலுங்கு:** ஹனுமா விஹாரி, வெங்கடபதி ராஜூ, அக்ஷத் ரெட்டி, டிபி ரவி தேஜா, சந்தீப் பவனகா, கல்யாண் கொல்லரபு, ஆர்ஜே ஹேமந்த், ஜோதி ரமணா, பிரத்யுஷா, ஞானேஸ்வரி

**பஞ்சாபி:** சரந்தீப் சிங், ராகுல் சர்மா, விஆர்வி சிங், ரீதிந்தர் சிங் சோதி, சுனில் தனேஜா, அதுல் வாசன், குர்ஜித் சிங், பாலக் சர்மா ■



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 01.04.2023 அன்று வெளியிடப்பட்டது.